CONNEMARA PUBLIC LIBRARY

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

மலர் 15 } மே 1954 { இதழ் 5

இது நிஜமா ?

ஆம்! இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது நமக்கு அண்மையில் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் ஆற்றியுள்ள சொற்பொழிவொன்றைப் படித்துப் பார்த்த பிறகு.

கல்விப் பிரச்சினைகளைப் பற்றி, ஆத்திரமும் ஆக்ரோஷமும் இல்லாமல், ஆனால் தெளிந்த சிந்தனையுடனும் அமைதியான ஆராய்ச்சியுடனும் செய்யப்படுகிற சொற்பொழிவுகளைக் கேட்பது இந்த நாட்டில் மிக மிக அபூர்வமாகிவிட்டது.

அதிலும் அரசாங்க நாற்காலிகளில் வீற்றிருப்பவர்கள் கல்விப் பிரச்சினைகளைப்பற்றிப் பொறுப்புணர்ச்சியுடனும் நிதானத்துடனும் பேசுவது அபூர்வத்திலும் அபூர்வமாகிவிட்டது.

இப்படிப்பட்ட வருந்தத்தக்க சூழ்நிலை, இந்த நாட்டில், ஏனோ தெரியவில்லை, சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக நிலவி வருகிறது.

இந்தக் காரிருளைக் கிழித்துக்கொண்டு ஓர் மின்னல் தோன்றி யிருக்கிறது. இந்தக் கருமேகங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு ஓர் நட்சத்திரம் ஒளி வீசத் தொடங்கியிருக்கிறது. கல்வித் துறையைக் குழப்பம் மிகுந்த குட்டையாக மாற்றும் முயற்சிகள் எங்கெங்கும் நிறைந்துள்ள நேரத்தில் பேராசிரியர் கபீர், அனுபவ அறிவும் ஆராய்ச்சித் தெளிவும் மிக்கதோர் உரையை ஆற்றியிருக் கிறார்.

அந்தப் பேருரையை நாளிதழ்களில் படித்தோம். படித்த போதுதான், இந்தக் குழப்ப காலத்திலும் இத்துணைத் தெளிவான தோர் சொற்பொழிவை ஆற்றுபவரும் இருக்கிறாரா—அதிலும் அர சாங்க மாளிகையில் உலவுகிறாரா—இதுவும் நிஜம்தானா—மெய்யா கவா—என்கிற வியப்புணர்ச்சி நம் உள்ளத்தில் அலைமோதத்தொடங் கிற்று.

பேராசிரியர் கபீர், மத்திய இந்திய அரசாங்கத்தின் கல்வித் துறை ஆலோசகர். ஆகவே மிகவும் பொறுப்புள்ள ஒரு பதவியில் வீற்றிருப்பவர். இந்திய அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளை வகுப்பதில் பெரியதோர் பங்கு ஏற்று வருபவர். இத்தகைய சிறப் பும் செல்வாக்கும் படைத்த ஒரு செம்மல் இத்துணைத் தெளிவும் திறமும் படைத்த ஒரு சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார் என்றால் மகிழ்ச்சி நம் உள்ளத்தை முற்றுகையிடாமல் எப்படி இருக்க முடி யும்?

“ கல்வித் துறையில் செய்யப்படுகிற எந்த ஒரு மாறுதலும் மிக மெதுவாகவே செய்யப்படவேண்டும். இன்று இருக்கிற கல்விமுறையை ஒரே நாளில் தூக்கி எறிந்துவிட்டு, புதிய முறையைத் திடீரென்று புகுத்து வது முடியாத ஒரு செயலாகும். அவ்வாறு செய்வதன் மூலம் குழந்தை களின் வாழ்வைச் சோதிப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.”

சென்ற மாத இறுதியில் பெங்களூர் நகரத்தில் நடைபெற்ற மைசூர் மாநிலக் கல்வி மாநாட்டைத் தொடங்கிவைத்த பேராசிரியர் கபீர் எடுத்துக் காட்டியுள்ள மிகவும் முக்கியமானதோர் கருத்து இது.

சென்ற பத்தாண்டுகளாகவே நாம் பார்த்து வருகிறோம்— இந்த நாட்டின் கல்வித் துறையில் திடீர் திடீரென்று புரட்சிகரமான மாறுதல்கள் புகுத்தப்படுகின்றன. புகுத்தப்பட்ட இரண்டோர் ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த மாறுதல்கள் அவசியமற்றவை என்று கைவிடப்பட்டு வேறு பல மாறுதல்கள் நுழைக்கப்படுகின்றன. அதற்

குப் பின்னர் அந்தப் புதிய மாறுதல்களும் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்டு மற்றும் சில திட்டங்களுக்கு நல்வரவேற்பு நல்கப்படுகிறது.

இப்படித் திடீர் திடீரென்று புதிய திட்டங்கள் தோன்றுவதாலும், பின்னர் அவை, தோன்றிய வேகத்திலேயே திடீர் திடீரென்று மறைவதாலும், மாணவர்களின் கல்வி, புயலிற் சிக்கிய படகாகிவிடுகிறது. அவர்களின் திறமையும் தகுதியும் வீணாக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, அந்த இளஞ்சிறுர்களின் எதிர்காலம் இருள் மிகுந்ததாகவும் இடர் நிறைந்ததாகவும் மாறிவிடுகிறது.

1938ல் அன்பர் ஆச்சாரியார் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது இப்படித்தான், எவரையும் கேளாமல் கொள்ளாமல், திடீரென்று ஒருநாள் காலையில், இந்தி மொழியை உயர்நிலைப் பள்ளிகள் அத்தனையிலும் கட்டாய பாடமாக நுழைத்தார். ஆனால் நுழைக்கப்பட்ட மூன்றாண்டுகளுக்குப்பிறகு, 1941ல், அது பயனற்ற திட்டம் என்று கைவிடப்பட்டது. 1948ல் தோழர் அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராக இருந்தபோது மீண்டும் ஒரு முறை இந்தி, கட்டாய பாடமாக நுழைக்கப்பட்டது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு கட்டாய திட்டம் மறுபடியும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. கட்டாய இந்தித் திட்டம் இந்த வகையாக இரண்டு முறை தோற்றுவிட்டது என்பதைத் தெளிவாக அறிந்திருந்தும் மீண்டும் சிலர் இதுபோது இந்தியைக் கட்டாய பாடமாக்கப் பெருமூச்சுடன் முயன்று வருகின்றனர்.

இப்படி அடிக்கடி இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டு பிறகு அது கைவிடவும்பட்டதால், தென்னாட்டில் ஆயிரக்கணக்கான மாணவர்கள், இந்தியைச் சிறிதளவே கற்று பிறகு அதனையும் மறந்துவிட்டனர். அதனைக் கற்பதற்காகச் செலவழித்த நேரத்தை, இப்படி ஒரு வீண் திட்டம் இல்லாமல் இருந்திருந்தால், அவர்கள், வேறு ஏதேனும் உருப்படியான கல்வியைப் பெறுவதில் செலவிட்டிருப்பர். ஆனால் இப்போதோ இந்தத் திட்டத்தின் விளைவாக அந்த அரிய வாய்ப்பையும் இழந்துவிட்டனர். இந்தியையும் கற்க முடியவில்லை. வேறுவகைக் கல்வியையும் பெற முடியவில்லை—நேரம்தான் வீணாயிற்று மாணவர்கட்கு—பெரும் பெரும் போராட்டங்கள்தாம் நடைபெறலாயின நாட்டிலே—குழப்பம், தடியடி, துப்பாக்கி வீச்சு, சிறைச்சாலை வாழ்வு, ஆயிரக்கணக்கானோர் கைது—இவ்வளவு நிகழ்ச்சிகளும் தொடரலாயின. கல்வித்துறையில் இத்தனைக் குழப்பங்கள் ஏற்பட்டன என்றால் அது எதனால்? அவசியமற்ற திட்டத்தைத் திடீர் திடீரென்று புகுத்தியதால்தான்.

இதுபோலவேதான் சில மாதங்கட்கு முன் சென்னை அரசாங்கம், சென்னை மாநில ஆரம்பப் பள்ளிகளில் 20 மாணவர்கட்கு ஓர் ஆசிரியர் என்று இருப்பது இனி 30 மாணவர்கட்கு ஒருவர் என்கிற விதம் மாற்றப்படவேண்டும் என்று திடீர் உத்தரவு ஒன்றை திடும் பிரவேசமாக வெளியிட்டது. ஆனால், இந்த மாதம்? அந்த உத்தரவை அமுலாக்க வேண்டாம் என்று எல்லா மானேஜ்மெண்டுகளுக்கும் புதிய சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறது. அனுப்பிய வரையில் நம் நன்றி அரசாங்கத்திற்கு. ஆனால் வீணை ஓர் உத்தரவைப் போடுவானேன்? பிறகு அதை அமுல்செய்யவேண்டாமென்று கூறுவானேன்? இடையே ஆசிரியர் உலகில் மகத்தானதோர் கொந்தளிப்பு மூள்வதற்குரிய வாய்ப்பை அளிப்பானேன்? விசித்திர உத்தரவால், ஆசிரியர்கள் உலகிலே, எவ்வளவு வேதனை மூண்டது! எத்தனை ஆத்திரம் கிளம்பிற்று! எதிர்ப்பு முழக்கங்களும் கண்டனத் தீர்மானங்களும் எத்தனை எத்தனை வகையாகத் தோன்றின! இத்தனை நிலைமைகளையும் ஏன் உருவாக்க வேண்டும் அரசாங்கம்? வழியிலே போகிற தேளை எடுத்து மடியில் போட்டுக் கொள்வானேன்? பிறகு அது குத்துதே குடையுதே என்று கூவிக் கதறி மருந்து தேடுவானேன்?

அறிகிறார் இதனை பேராசிரியர் கபீர். ஆகையால்தான் அவர் திட்ட வட்டமாகவே பேசியிருக்கிறார். திடீர் திடீரென்று மாறுதல்கள் புரியாதீர்—குழந்தைகள் வாழ்வைக் குலைக்காதீர் என்று அபாய அறிகுறி காட்டியிருக்கிறார்.

“பள்ளிக்கூடங்கள், அரசியல்வாதிகள்—சட்டசபைகள் இவைகளின் ஏஜன்சிகளாய் மாறிவிடாதபடி கல்வி நிபுணர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், கல்வி நிபுணர்களின் கருத்துரைக்கு இணங்க அளிக்கப்படாமல், அரசியல்வாதிகளின் ஆய்வுரைக்கு ஏற்பக் கொடுக்கப்படும் கல்வி முடிவில் கல்வியாகவே இருக்காது.”

பேராசிரியர் கபீர் அளித்துள்ள மற்றோர் அறிவுரை இது.

சென்னை மாநிலத்தில் அன்பர் ஆச்சாரியாரால் நுழைக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் வரலாற்றைக் கண்ட பிறகு, எவர்தானாகட்டும், இந்த அனுபவப் பொன்மொழியை அர்த்தமற்றதென்று எப்படிக் கூறிட இயலும்?

கல்வி நிபுணர்களைக் கேட்கவில்லை—ஆரம்ப ஆசிரியர்களை அணுகவில்லை—அரசியல்வாதியாம் ஆச்சாரியார் தன் மனம்போன போக்கு ஒன்றையே ஆதாரமாக வைத்துக்கொண்டு திட்டமொன்றை

வீசினர். விளைவு என்ன ஆயிற்று ? நாம் என்றென்றும் கண்டிராத தோர் பெரும் புயல் வீசிற்று நாட்டிலே ! சுழலும் சூறுவளியென ஆர்த்து எழுந்தது எதிர்ப்பு ! ஆச்சாரியார் பதவியே பறிபோய் விட்டது !!

அரசியல் வாதிகளின் விருப்பப்படியெல்லாம் கல்வி அமைவ தென்றால் அது கல்வியாகவே இருக்காது என்கிறார் கபீர். மெய் தானே அது ! அரசியல்வாதி ஆச்சாரியார் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். அது கல்வியாகவா இருக்கிறது ! குழந்தைகளின் எதிர்காலத்தைக் கொலை செய்யும் கூர் வாளாக அல்லவா இருக் கிறது !

அரசியல்வாதிகளின் கருத்துப்படி அமைவதுதான் கல்வி என்று சொன்னால் நாட்டிலே ஒரே வகையான கல்வி நிலையாக இருக்க முடியாது. ஒவ்வோர் அரசியல் கட்சி அதிகாரத்திற்கு வரு கிறபோதும் ஒவ்வொருவித கல்வி முறை உருவாகும். ஏனெனில் ஒரு கட்சியினரால் கொண்டுவரப்பட்ட திட்டத்தை, பிறிதோர் கட்சி அதிகாரத்துக்கு வருகிறபோது நிச்சயம் மாற்றியே தீரும். இவ் விதம் கட்சி மாறுகிறபோதெல்லாம் கல்வியும் மாறுவதென்றால் கல்வி பெறும் குழந்தைகளின் நிலை ஆலையில் சிக்கிய கரும்பாக அல்லவா நசுக்கப்படும்? ஆகையால்தான், கபீர், அரசியல்வாதிகளிடம் கல்வியை தயவு செய்து ஒப்படைக்காதீர் என்று எச்சரிக்கிறார். மிக மிக நியாயமான கருத்து ! முற்றிலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய மூதுரை !

"காலம் நேரமின்றி எங்கு பார்த்தாலும் எப்போது பார்த்தாலும் தற்போதுள்ள கல்வி முறையைக் குறை கூறிக்கொண்டிருப்பது, இந்தக் காலத்தில் ஒரு நாகரிகமாக ஆகிவிட்டது. இப்படிப்பட்ட வர்களின் செய்கை, கல்வித் துறைக்கு இழைக்கப்படுகிற மகத்தான தோர் துரோகம் என்றே நான் கருதுவேன். இன்றைய கல்வி முறை யில் சிற்சில குறைகள் இருக்கலாம். மெய்தான். ஆனால், அதற் காக கல்வித் துறை முழுவதையுமே குறை கூறுவது எப்படி முறை யாகும் ?"

பேராசிரியரின் பேருரையில் பொதிந்து கிடக்கும் மற்றோர் பொன் மொழி இது.

பேராசிரியர் தெரிவிப்பது போல இன்றைய கல்வி முறையைக் குறை கூறுவது ஒரு நாகரிகமாகத்தான் ஆகிவிட்டது சென்ற சில ஆண்டுகளில்.

"சீச்சி! இன்றைய கல்வி முறை மகா மோசம்!"

"சே! இப்படியுமா இருப்பது ஒரு கல்வி முறை!"

"ஆமாம்! இனியும் விட்டுவைக்கக்கூடாது இப்படிப்பட்ட திட்டத்தை."

இந்தவிதமாகச் சீறியெழுந்து சினத்தைப் பொழிகிறார்கள் பல பெரு மக்கள். ஆனால் அந்த அன்புப் பெருந்தகைகளை ஆசையுடன் அருகே அழைத்து, "குறை என்ன கண்டீர் இன்றைய முறையில்—கூறிடுவீர் அதனை விளக்கமாக!" என்று இயம்பினாலோ, பேச வகையின்றி விழித்திடுகின்றனர் அந்த சற்குண சீலர்கள்.

உலக உத்தமர் காந்தியடிகள், சாந்தசீலர் ராஜேந்திர பிரசாத், இந்தியாவின் முதல்வர் பண்டித ஜவகர்லால், அவர்தம் தந்தை மோதிலால் நேரு, பேராசிரியர் இராதாகிருஷ்ணன்—இத்தனைப் பேரறிஞர்களும் இன்றைய கல்விமுறையால் உருவாக்கப்பட்டவர்கள்தான்.

விஞ்ஞான விளக்கு சர். சி. வி. ராமன், அறிவு ஒளி அண்ணாதுரை, மருத்துவ மேதை டாக்டர் இலட்சுமணசாமி, நிதித்துறை நிபுணர் ஆர். கே. சண்முகம்—இத்தனை மாணிக்கங்களையும் நமக்கு நல்கியிருப்பது, இழித்துரைக்கப்படும் இன்றைய கல்வி முறைதான்.

சொல்லின் செல்வர் சர். ஏ. இராமசாமி, தென்னாட்டின் மூளை இராஜகோபாலாச்சாரியார், சட்ட நிபுணர் பாரிஸ்டர் எதிராஜ், நாடக ஜோதி சம்பந்த முதலியார், மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை—இப்படிப்பட்ட புகழ் ஒளி மிக்கவர்களையெல்லாம் இந்தா இந்தா என நமக்கு அள்ளிக் கொடுத்தது—மறந்துவிடவேண்டாம்—இன்றைய கல்வி முறைதான்.

உலகப் புகழ் பெற்ற அரசியல் வாதிகள், இலக்கிய உலக நட்சத்திரங்கள், மருத்துவப் புலமை மாணிக்கங்கள், சட்டத் துறையில் சிறப்பெய்தியவர்கள், நாக்கு வன்மையில் நற்றிறம் படைத்தவர்கள், அதிகார இயந்திரத்தை அற்புதமாக இயக்குபவர்கள், பொறி இயல் வல்ல பேரறிவு படைத்தவர்கள்—இப்படிப்பட்ட பல துறை நிபுணர்களையும், எந்நாட்டவரும் கண்டு பெருமைப்படும் விதத்தில்—பெருமை மட்டுமா, பல சமயங்களில், பொறாமையும் அடைகிற விதத்தில்—நமக்கு, நம் நாட்டிற்கு, நாட்டின் முன்னேற்றத்திற்கு

எடுத்துக் கொடுத்து வரும் பீடும் பெருமையும் மிகுந்தது இன்றைய கல்வி முறை.

இத்தனைச் சிறப்பு வாய்ந்த இந்தக் கல்வி முறையிலேயும் குறைகள் உண்டு. தெரிகிறது நமக்கு. ஆனால் அந்தச் சில குறைகளுக்காக முழுத் திட்டத்தையுமா வெட்டி எறிதல் வேண்டும்? மூக்கு கோணல் என்பதற்காக முகம் முழுவதையுமா அறுத்து விடல் அவசியம்? குறையுள்ள பகுதிகளை அகற்றுவோம். நிறை மிகுந்த பகுதிகளைப் போற்றுவோம். அதுதான் அறிவுடைமையே தவிர ஒரு சில குறைகளுக்காக முழு முறையையும் ஒதுக்குவது முற்றிலும் பேதமை.

ஓய்வு ஒழிவு இன்றி முழுத் திட்டத்தையும் கண்டித்தபடி இருப்பதால் ஏற்படுகிற விளைவு யாது? அதனையும் அழகுபட விளக்கியிருக்கிறார் அறிஞர் ஹூமாயூன் கபீர்.

"அர்த்தமற்ற இக் கண்டனங்களைக் கேட்டுக் கேட்டு ஆசிரியர்களுக்குத் தங்கள் தொழிலில் சலிப்பு ஏற்பட்டுவிடும். தாங்கள் பயிற்றுவிக்கிற கல்வி உண்மையில் பயன் உள்ளது அல்ல என்றும், அதனைத் தாங்கள் புகட்டி வருவது தாங்கள் வாங்குகிற ஊதியத்திற்கு ஈடாகச் செய்யப்படுகிற ஒரு தொழிலே தவிர நாட்டின் நன்மைக்காகச் செய்யப்படுகிற ஒரு கடமை அல்ல என்றும் அவர்கள் எண்ணத் தொடங்கி விடுவர். அந்த எண்ணத்தின் விளைவாக ஆசிரியர்கள் ஏதோ கடமைக்காகக் கல்வியைப் புகட்டுவது என்கிற அந்த அளவில்தான் நின்றுவிடுவார்கள். ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிகிற பண்பு இருக்காது."

இந்தத் தீய பிரசாரத்தின் விளைவாக மாணவர்களின் நிலை எவ்வாறு பாதிக்கப்படும்? ஆசிரியர் கபீர் அதனையும் தெளிவாக்கத் தவறவில்லை.

"நீங்கள் பெறுகிற கல்வியால் உங்களுக்குத் துளியும் பயனில்லை என்று மாணவர்களைப் பார்த்து நாம் இடைவிடாமல் சொல்லிக் கொண்டேயிருந்தால், கல்வி கற்கவேண்டும் என்கிற ஆர்வம் அவர்களை விட்டு அகன்றுவிடுகிறது. அந்த ஆர்வம் அகன்றுவிட்டால், இயற்கையாகவே, அத்தகு கல்வியைப் புகட்டுகிற ஆசிரியர்கள்பால் அவர்களுக்கிருக்கிற மதிப்பும் பற்றும் மறைந்துவிடுகின்றன. கல்விச் சாலைகளில் கட்டுக்கடங்காத தன்மையும் ஒழுங்கீனமும் தோன்றிவிடுகின்றன."

மறுக்க முடியாத உண்மை—மறைக்க முடியாத நிலைமை. ஆனால் இந்த உண்மையையும் நிலைமையையும் எடுத்து விளக்கிய தோடு நிற்கவில்லை பேராசிரியர் கபீர். ஆட்சியாளர்கள் அடிக்கடி மறந்துவிடுகிற மற்றொரு பேருண்மையையும் அழுத்தந் திருத்தமாக அறிவித்திருக்கிறார்.

"கல்வித் துறையில் எத்தகைய சீர்திருத்தங்கள் செய்யப்படுவ தாயினும் சரி, அந்தத் திருத்தங்கள் அத்தனையிலும், ஆசிரியர்கட்கு, சிறந்த மதிப்பும், தலைமை இடமும் தரப்பட்டாகவேண்டும். கல்வித் துறை சீர்திருத்தத்தின் உயிர் நாடி, ஆசிரியர்தான் என்பதை எவரும் மறத்தல் ஆகாது. கல்வி உலகில் ஆசிரியருக்கு இருக்கவேண்டிய தலைமை நிலையை மீண்டும் ஏற்படுத்தினாலொழிய எந்தக் கல்வித் திட் டமும் ஏட்டுச்சுரையாகத்தான் இருக்க முடியும். அது நடைமுறை யில் வெற்றி தர இயலாது."

*பேராசிரியர் கபீர் எழுப்பியுள்ள குரல் இது. கேளுங்கள் ஆட்சியாளர்களே, காது கொடுத்துக் கேளுங்கள். இந்திய அரசாங்க அலுவலில் வீற்றிருக்கும் பேராசிரியர் கூறுகிறார். கவன மாகக் கேளுங்கள். எதிர்க் கட்சித் தலைவரல்ல, ஏழை ஆசிரியத் தோழரல்ல, இந்திய அரசாங்கத்தின் கல்வி ஆலோசகர் பேசுகிறார்— கருணை கூர்ந்து கேளுங்கள்—***"கல்வித் திட்டம் எதுவாயினும் சரி, அந்தத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பு ஆசிரியரிடம்தான் இருக்க வேண்டும். இல்லையேல் திட்டம் வீண் வீண்."**

துண்டு துணுக்குகள்

13. *கணக்குகளைக் கூட்டிச் சொல்லும் யந்திர மனிதன் கொலம்பியா சர்வ கலாசாலையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது* 16 *விஷயங்களை ஒரே சமயத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுமாம்.*

14. *பிரேஸில் டெக்னீஷியர்கள் காப்பிக்கொட்டையுடன் மற்றொரு பொருளைச் சேர்த்து மேசை, நாற்காலி செய்கின்றனர்.*

15. *கருவிலிருக்கும் பிள்ளை ஆணா, பெண்ணா எனக் கண்டு பிடிக்க ஓர் கருவியை* F. J. *பில்லிங்டனும், இன்னொருவரும் கண்டு பிடித்துள்ளனர்.*

16. *காகிதத்தால்* 10 *நிமிடத்தில் மேசை, நாற்காலிகள் செய் யும் முறை அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

ஆரம்ப ஆசிரியர்கட்கு வேண்டுகோள்!

ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரிய மானேஜர்களே! எயிடட் பள்ளிகளின் தலைவர்களே! பஞ்சாயத்துப் பள்ளிகளின் நிர்வாகிகளே! உங்கள் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக, "**ஆரம்பக் கல்வி**" என்னும் இந்த இதழ், உங்களுடைய எழுச்சி முரசமாகவும் உரிமைக் குரலாகவும் இருந்து ஒப்பற்ற பணி புரிந்து வருவதை நீங்கள் நன்முக அறிவீர்கள். ஏராளமான பொருட் செலவையும் பொருட்படுத்தாமல், நாங்கள் இந்த இதழைச் சிறப்புடனும் தொடர்ச்சியாகவும் நடத்தி வருகிறோம் என்றால், அதற்குரிய ஒரே காரணம், ஆசிரியர் உலகத்தின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும் என்கிற குறிக்கோள் நம்முடைய உள்ளத்தில் ஊறிப்போய் இருப்பது தான். இந்த இதழின் இடைவிடாத பணியால் ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்சினைகள் நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டன—ஆட்சியாளர்களின் செவிகளிலும் புகுந்திருக்கின்றன என்பது நாடறிந்த விஷயம். ஆசிரியத் தோழர்கட்கு இவ்விதம் பெருநன்மை புரிந்துவரும் ஓர் இதழ் சிறப்புடன் திகழ வேண்டும் என்பதற்காகவே நம்மால் பல பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் புத்தக விற்பனை சிறப்புடன் நடைபெற்றால்தான், ஆசிரியர்களின் இருதய கீதமாகிய இந்த ஏடு, எழிலும் இனிமையும் மிகுந்ததாகத் திகழமுடியும். இதனை நீங்கள் நன்முக அறிவீர்கள். அறிந்த காரணத்தால்தான், இத்தனை ஆண்டுகளாக, எங்களுடைய பாடபுத்தகங்களை, உங்களுடைய பள்ளிக்கூடங்களில் வைத்து, எங்களுக்குப் பேராதரவு நல்கியிருக்கிறீர்கள். நீங்கள் இதுவரை காட்டிய ஆதரவுக்கும் அன்புக்கும் எங்களுடைய மனம் கனிந்த நன்றி. இத்தனை ஆண்டுகளாக நீங்கள் ஆதரித்தது போலவே, இந்த ஆண்டிலும் எங்கள் புத்தகங்களை உங்கள் பள்ளிகளில் வைத்து, அதன் மூலமாக "**ஆரம்பக் கல்வி**" இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். உங்களுடைய பள்ளிக்கூடங்களில் இப் புத்தகங்களை வைப்பதோடு நில்லாமல், அக்கம் பக்கத்திலுள்ள பள்ளிகளிலும் இப் புத்தகங்கள் ஏற்கப்படும்படி உங்களுடைய அன்பு வளரவேண்டும். "**ஆரம்பக் கல்வி**"யின் வளர்ச்சி, புத்தகங்களின் வளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் நமது புத்தகங்களே பவனி வரும்படி செய்ய வேண்டியது உங்களுடைய நீங்காக் கடமையாகும். ஆதரவு தாருங்கள்—"ஆரம்பக் கல்வி"யை வளருங்கள்.

"அறிவியல்"

[எஸ். ஏ. சந்தியாகுமணி S. I.]

ஆதிகாலத்தில் உலகம் இருந்த நிலை வேறு. தற்போதுள்ள நிலை வேறு. அன்று மனிதன் வாழ்ந்த வாழ்க்கை வேறு. இன்று மனிதன் வாழும் வாழ்க்கை வேறு. அன்று அவன் வாழ்ந்த மரத்தடிகள் வேறு. இன்று நாம் வாழும் மாடமாளிகைகள் வேறு. அன்று மனிதன் வாழ்ந்த குகை வேறு. இன்று அவன் இனம் காணும் கூடகோபுரங்கள் வேறு. அன்று தமிழன் பன்னாடையை (பனையாடை) கண்டான். சிந்தனையைச் செலவிட்டான். பருத்தியாடையைக் கண்டு பாருக்கீந்தான். இன்று "பஞ்சிலாடையும் பட்டிலாடையும் கொஞ்சமோ இங்கு" என்று அதே தமிழனே நெஞ்சுரமாகப் பாடுகின்ற அளவில் பஞ்சாலைகள் பல உள. "காட்டுத்துரும்பெடுத்துக் கண்டம் பதினாறுக்கி நீட்டிக்கிடந்தது போக நின்றது நாழிகை" என்று அன்று தமிழன் நேரத்தைக் கணக்கிட்டான். இன்று அதே தமிழனின் கைகளிலே விதவிதமான *கடிகாரங்கள் காட்சி தருகின்றன. இத்தனை மாறுதல்கள் எப்படி ஏற்பட்டன? மனிதன் சிந்தனையைச் செலவிட்டான். மூளைக்கு வேலை கொடுத்தான். அறிவியல் (Science) என்று கொண்டான். பின் அவ்வறிவியலால் அதிசயப் பொருள்கள் பல தோன்றின. நாட்டு மக்களை முன்னேற்றின.

அறிவியலால் இன்று நாடு முன்னேறி இருக்கிறதா? ஆம். சந்தேகமேயில்லாமல் முன்னேறி இருக்கிறது. கண்ணகியும் கோவலனும் காதம் பல நடந்துசென்ற காலத்தை மறைத்து, வைரடோலக்கும், பச்சை மூக்குத்தியும், செம்பு வளையலும், கராச்சிப்பட்டும் காட்சிதர, கலையாத மெருகுடைய கார்களிலே, கரும்புகையோடு செல்லும் ரயில் வண்டிகளிலே, வானளாவப் பறக்கும் வானூர்திகளிலே ஆனந்தமாகச் செல்லும் காலத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மண்குடிலைக் கண்டு மகிழ்த்த காலத்தை நீக்கி இன்று நியூயார்க் மாளிகைகளைக் கண்டு மனம் வியக்கச் செய்திருக்கிறது. சிக்கிமுக்கிக் கல்லையும் சிமிழ் விளக்கையும் மறக்கச்செய்து சிங்காரமான மின்சார விளக்குகளின் அதிசய ஒளி கண்டு ஆனந்திக்கச் செய்திருக்கிறது. இவைகளோடு மட்டுமல்ல, விரைவில் பல நூல்கள் வெளிவர, அச்சியந்திரங்கள், மருத்துவ மனைகளிலேமகத்தான மருந்துகள், மின்வலி கொண்டு நோய்வலி தீர்க்கும் அதி அற்புதச் சிகிச்சைகள் இவைகளும் அறிவியலின் விளைவே. எங்கோ

ஒருவர் பேசுகின்றார். இங்கே நாம் அதைக் கேட்கிறோம். எப்போதோ ஒருவர் பாடியுள்ளார் இப்போது நாம் அதை ரசிக்கிறோம். பேசும் படக்காட்சி கண்டு பேரானந்தமடைகிறோம். யாரோ எங்கோ பேசுகிறார். இங்கே அவர் பேச்சை மட்டுமல்ல, அவரையே பார்க்கிறோம். இன்னும் எத்தனையோ சாதனைகளை அறிவியலால் அடைந்திருக்கிறோம். இன்னும் எவை எவை வரும் என்றும் நாம் வரையறுத்துக் கூறமுடியாது. சுருங்கச் சொல்லின், உலகம் உள்ளவரை அறிவியல் அதிகரித்துக் கொண்டே, அதிசயங்களை உண்டு பண்ணிக் கொண்டே இருக்கும். இப்படிப் பல பல சாதனங்கள் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டிருப்பதால் நாடு புறத்தில் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால் ஒரு சிலர் கூறுகிறார்கள் நாடு நாகரீகத்தில்முன்னேறி விட்டதென்று. இதுஉண்மையா? எது நாகரீகம்? சூட்டும் கோட்டுமா? கற்றதனால் ஆயபயன் சட்டையும் கண்ணாடியுமென்று அலைவதா? ஆகாய விமானத்திலே ஆனந்த கீதம் பாடுவதா? மெருகு கலையாத கார்களிலே செல்வதா? அல்லது உடுத்த உடையில்லாமல் உண்ண உணவில்லாமல் கஞ்சி, கஞ்சியென்று கெஞ்சிக்கேட்டுத் தான் கொஞ்சியணைக்கவேண்டிய தன் பால்மணம்மாறாப் பச்சிளங் குழந்தையை அந்தப் பஞ்சைப் பரம்பரைப் பிள்ளையோ பிள்ளை என்று விலைகூறி அன்று ஆபிரகாம் லிங்கனால் அழித்தொழிக்கப்பட்ட மனித 'மார்க்கெட்டை' மறுபடியும் உண்டாக்குவதா? எது நாகரீகம்? நாகரீகம் நாகரீகம் என்று நாகரீகத்தின் ஊழல் மட்டும் மனிதவாழ்வைச் செல்லரித்து வருகிறதே தவிர உண்மை நாகரீகம் வளரவில்லை. தமிழறிஞர் வரதராஜனார் கூறுகிறார் உள்ளத்தின் உயர்வே உண்மை நாகரீகம் என்று. மனிதனை மனிதன் நேசிக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனிடத்திலும் உள்ளன்பு, ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் வளரவேண்டும். இப்படி வளர்ந்து விட்டால் நாட்டிலே உண்மை நாகரீகம் வளர்ந்துவிட்டதென்று நாக்கூசாமல் சொல்லலாம்.

ஆனால் இன்று நாட்டிலே நடப்பதென்ன? மனிதனை மனிதன் ஏமாற்றுவது. இது சாதாரணரகம். மனிதனை மனிதன் கொள்ளையடித்து வாழ்வது இது சற்று உயர்ந்த ரகம். எந்த நாட்டைச் சுட்டுச் சூறையாடித் தன் சொந்த நாடாக்கிக் கொள்ளலாம் என்று சிந்தனையைச் செலவிடுவது அரசியல் ரகம். எங்குப் பார்த்தாலும் போர், போட்டி, பொறாமை இதற்குத் துணை அறிவியலே. ஏன்? எப்படி? இன்று அறிவியல் மனிதர்களுக்குப் பயன்படுமளவில் பிரயோகிக்கப்படவில்லை. போர்க்கருவிகள், தளவாடங்கள், அணுக்குண்டுகள், ஜலவாயுக் குண்டுகள், பறக்கும் குண்டுகள், நீர்மூழ்கிக் கப்

புல்கள், டாங்கிகள் இப்படி எண்ணத்தொலையாத அளவு யுத்தக் கருவிகளைத் தந்திருக்கிறது. இதன் துணைகொண்டு மனிதனை மனிதன் வெல்ல நினைக்கிறான். வஞ்சிக்க நினைக்கிறான். ஒருவன் வாழ்விலே மற்றவன் மண்ணைப் போடுகிறான். இவைகளின் எதிரொலி இன்று பர்மாவிலே படுகொலை பல்லவிபாடுகிறது. சீனாவிலே சிந்துபாடும் சிற்றாறு சிவப்பாக ஓடுகிறது. கொரியாவிலே கொக்கரிப்பு. பாரதத்திலே பேரதிர்ச்சி. இப்படிப் பல பல கோர சம்பவங்கள், கொடுமைகள் நாளும் பல நடந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து பறக்கும் குண்டு ஆஸ்திரேலியாவைக் கரியாக்குகிறது. மாண்டலேயிலிருந்து புறப்படும் குண்டு மடகாஸ்கரை மண்ணோடு மண்ணாக்குகிறது. அமெரிக்காவின் அறிவியல் ஆராய்ச்சி அணுகுண்டைத் தந்தது. அதன் உதவி கொண்டு அதிதுரிதமாக இயந்திரங்களை இயக்கலாமென்று— ஏனோதானோக்கள் அல்ல. எண்ணிப்பார்த்த பெரியார்கள் கூறுகிறார்கள். ஆனால் நடந்ததென்ன? ஹிரோஷிமாவின் மக்களை, மாசற்ற சிசுக்களை, ஏன் மண்ணைக்கூடச் சுவைத்துவிட்டது.

இந்த நிலையில் இன்று நாடு போர் முறையில் முன்னேறி இருக்கிறதே தவிர நாகரீகத்தில் முன்னேறவில்லை. ஏன் இதற்கெல்லாம் காரணம் அறிவியல் தானே? அல்ல! அல்ல! அறிவிலிகளே காரணம். அதிகார வெறியர்கள் கையில் ஆணவக்காரர்கள் கையில், பேராசைப் பேயர்கள் கையில் அறிவியல் சிக்கித் தவிக்கிறது.

ஆகவே நாடு நலம்பெற வேண்டுமானால், நாட்டு மக்கள் நல்வாழ்வு அடைய வேண்டுமானால், நாம் நாகரீகத்தில் முன்னேறிவிட்டோமென்று நிமிர்ந்து நின்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அறிவியலை நல்வழியில் பயன்படுத்தும் நல்லறிஞர்கள் நாட்டிலே நடமாடவேண்டும். ஆம்! அறிவாளிகள் பெருக வேண்டும். அறிவியல் வளர வேண்டும்.

ஜலதோஷத் தடுப்பு

எச். ஷைராக், எம். டி.

ஒரு மனிதனுக்கு ஒரு வருஷத்திலே சராசரி மூன்று முறை ஜலதோஷம் பிடிக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் ஒரு முறை, ஜனவரியில் ஒரு முறை. இந்த வியாதியைப்பற்றி இப்படி எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கிறபோதிலும், அதற்கு இன்னும் ஒரு நல்ல பரிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஜலதோஷம் கிருமிகளால் உண்டாகிறது என்பது உங்களுக்கு முன்னமே தெரிந்திருக்கலாம். ஆனால் அதன் உற்பத்தியில் வைரஸ் என்னும் மற்றொரு விஷப் பொருளும் சம்பந்தப்படுகிறது. இந்த வஸ்துவைக் கண்ணால் பார்க்க முடியாது. சாதாரண பூதக்கண்ணாடியில்கூட அது தெரியாது. அத்தனை நுண்மையானது! அதுதான் முதலில் நமது மூக்கு, தொண்டைகளின் சவ்வுக்குள் நுழைந்து தாக்கும். பின்பு சாதாரண கிருமிகளும் சேர்ந்துகொள்கின்றன. இதன் விளைவாகவே மூக்கிலிருந்து சளி ஒழுகுதல், தொண்டை நோவு, சோர்வு என்னும் குணங்கள் உண்டாகின்றன.

ஆனால் நமது மூக்குச் சவ்வு நல்ல நிலையில் இருந்தால், வைரஸால் அதில் நுழைய முடியாது. கீழ்க்கண்ட காரியங்கள் அதைக் கெடுத்து, அது எளிதில் வைரஸின் தாக்குதலுக்கு உள்ளாகும்படி செய்கின்றன. தூசி, புகை, சீதோஷ்ண ஸ்திதியில் ஏற்படும் திடீர் மாறுதல்கள். சிலர் உடம்புக்குச் சிற்சில பொருட்கள் ஒத்துக்கொள்ளா. உதாரணமாக, புஷ்பங்களின் மகரந்தப் பொடியைக் கூறலாம். அவர்கள் அவ்விரோதப் பொருட்களைச் சுவாசித்தால், அவர்கள் மூக்குச் சவ்வு புண்ணாய்விடும்.

நமது உடம்பிலே ஏதாவது ஒரு பாகம் திடீரென்று சில்லிடுவதனாலும், மூக்குச் சவ்வு பழுது அடையலாம். அநேகருக்கு ஈர நிலத்தில் நடந்தால், அல்லது முதுகிலாவது மணிக்கட்டிலாவது குளிர்ந்த காற்று பட்டால், உடனே ஜலதோஷம் பிடிப்பதற்கு இதுதான் காரணம். உடம்பின் ஒவ்வொரு பாகமும் மற்றப் பாகங்களோடு நரம்புகளால் இணைக்கப்பட்டிருக்கிறது.

நான் இப்போது சொல்லப்போகிற விஷயம் நம்ப முடியாததாகத் தோன்றலாம். ஆனாலும் அது உண்மை. நமது உணர்ச்சிகளினாலும்கூட மூக்கு, தொண்டைகளின் சவ்வு சீர் கெடலாம். உதாரணமாக, கோபம் அந்தச் சவ்விலுள்ள நுண்ணிய இரத்தக் குழாய்களைச் சுருங்கப் பண்ணி, அதிலே இரத்தம் சரியாக ஓடாத வண்ணம் செய்துவிடுகிறது. இந்

னால் வைரஸ் அதை எளிதில் தாக்க, ஜலதோஷம் தோன்று வதற்கு ஏதுவான நிலைமை உண் டாகிறது.

நமக்கு அடிக்கடி ஜலதோஷம் பிடிக்காமல் இருக்கவேண்டுமா னால், நமது தடுப்புச் சக்தியை அதிகமாக்கிக்கொள்ளவேண்டும். அதற்கு இங்கே சில சுலபமான யோசனைகள் சொல்கிறேன் :

1. நல்ல ஆகாரம் சாப்பிடுங் கள். நமது அன்றாட உணவிலே இந்தப் பொருட்கள் சேரவேண் டும் என்று ஒரு நிபுணர் கூறு கிறார். ஒரு சேர் பால், ஒரு பசுங் கீரை, உதாரணமாகப் பசளை, மஞ்சள் நிறமுள்ள ஒரு கிழங்கு, உதாரணமாக காரட்; பச்சையாகச் சாப்பிடுவதற்கேற்ற ஒரு பச்சிலை, உதாரணமாக, முட்டைக் கோஸ் அல்லது இலெட்டூசு; ஒரு ஆரஞ்சு அல் லது தக்காளிப்பழம்; ஒரு தேக் கரண்டி மீன் எண்ணெய். உங்க ளுக்கு இலேசாகச் சோகை வியாதி இருந்தால், இவைக ளோடு கூட, தினம் ஒன்று அல் லது இரண்டு உலர்ந்த ஏப்ரிகாட் பழமும், ஒரு கிளாஸ் திராட்சை ரசமும் சேர்த்துக்கொள்ளுங் கள்.

2. வெட்ட வெளியில் நின்று உடற் பயிற்சி செய்யவேண்டும். அது இரத்த ஓட்டத்தைச் சீர்ப் படுத்தி, உடம்பின் தடுப்புச் சக் தியை அதிகப்படுத்துகிறது.

3. நாள்தோறும் போதிய அளவு ஓய்வு கொள்ளவேண்டும்.

4. சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ற விதமாக உடுப்பு அணியுங் கள். தோலாகிலும் உடம்பின் முனைகளாகிலும் சில்லிடாமல் கவனித்துக்கொள்ளவேண்டும்.

5. குளிர் காற்று வீசும் கதவு அல்லது ஜன்னலுக்கு நேராக உட்காராதேயுங்கள்.

6. மூக்கினால் சுவாசிக்க வேண்டும். காற்று அதன் வழி யாக நுரையீரல்களுக்குள் செல் கையில், அது அக்காற்றை வடி கட்டி, சுத்தம் பண்ணி, சூடாக்கி விடுகிறது.

7. தினம் ஆறு கிளாஸ் தண் ணீராவது குடிக்கவேண்டும்.

இந்த யோசனைகளையெல்லாம் பின்பற்றினால், இனி ஒருகாலும் ஜலதோஷம் பிடிக்காது என்று நான் சொல்லவில்லை. ஆனால் முன்னைப் போல அதிகமாகப் பிடிக்காது; அத்தனை கடுமை யாகவும் இராது.

நல்வழி.

துண்டு துணுக்குகள்

(விஞ்ஞான விநோதங்கள்)

[C. துரைராஜ்]

1. சூரிய கிரணங்களிலிருந்து கிடைக்கும் வெப்ப சக்தியை உபயோகித்து உணவை சமைக்கும் முறையை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

2. ரண வைத்தியர்கள் 4 முதல் 6 மணி நேரத்தில் ஒரு நோயாளியின் இரைப்பையை நீக்கி, செயற்கை இரைப்பையைப் பொருத்தக் கூடுமாம்.

3. பூமிக்கடியில் உள்ள உலோகங்களை அமெரிக்க பூகர்ப்ப சர்வே விஞ்ஞானிகள் விமானத்தில் பறந்தவாறே கண்டுபிடித்து விடுகின்றனர். விமானத்தின் அடியில் நீட்டிக் கொண்டிருக்கும் காந்தமானியானது உலோக அளவைக் குறித்துவிடும்.

4. சிலமணி நேரத்தில் எந்த நிலத்தையும் சத்துள்ளதாகச் செய்யும் 'ஹிரிலியம்' என்ற ரஸாயன எரு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பவுண்ட் எரு விலை சுமார் 2 டாலரே.

5. அணுசக்தி கிரணங்களைக்கொண்டு இறந்தவர்களின் ஆவிகளுடன் பேசும்முறை கண்டுபிடிக்கப்பட்டு சோதனையும் வெற்றிகரமாக நடந்ததாம். அணுக்கிரணங்களை "ரேடியேட்" செய்வதற்காக "ஆஸிலாஸ்கோ" என்ற கருவியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

6. தரையில் காராயும், வானில் விமானமாயும் செல்லும் "ஏரோகார்" என்ற பறக்கும் மோட்டார் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இறக்கைகளை மடக்கி வைக்கலாம்.

7. "ஆஸ்டின்எம்" என்ற மருந்தைக்கொண்டு கால் நடைகளையும், கோழிகளையும் நன்கு புஷ்டியாக வளரச் செய்யலாமாம்.

8. பூச்சிகள் மரத்தைத் தின்பதால் அதைக் கொல்வதற்கு ஒரு ஊசிமூலம் மரத்துக்கு மருந்து செலுத்தப்படுகிறது.

9. வயதாகிக் கண் தெரியாமற்போனால் "ராடார்" சக்திமூலம் கண் தெரியும்படி செய்யலாமாம்.

10. மண்ணெண்ணையையும் பெட்ரோலையும் திடபொருளாய் மாற்றிப் பத்திரப்படுத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

11. சுவரில் "பாஸ்பட்" என்ற பொருளைச் சேர்ப்பதால், பகலில் சூரிய ஒளியைக் கிரகித்து இரவில் அவ்வொளியைக் கொடுக்கிறதாம். சமைக்க வேண்டிய உஷ்ணமும் தருமாம்.

12. ஜப்பானிய ரஸாயன நிபுணரொருவர் பெரிய நிலைக் கண்ணாடியை சுருட்டி மடக்கி எடுத்துச் செல்லும்படி பிளாஸ்டிக்கில் செய்துள்ளார்.

"ஆசிரியர்களின் அவல நிலை"

(எண்ணி எண்ணிப் பார்க்க மனம் இன்பம் கொண்டாடுதே என்றமெட்டு)

1. எண்ணி எண்ணிப் பார்க்க மனம் எரிச்சல் உண்டாகுதே
ஏனோ வந்தோம் வாத்தியார் வேலைக்கென்று தோனுதே (எ)

2. எம்மானம் போகவே எம்குடும்பம் வாடவே
எந்நாளும் தரித்திரமாய் இவ்வுலகில் வாடுறோம்
இவ்வுலகில் வாடுறோம் (எ)

3. துயரை எடுத்துரைக்க உயிர்போது அம்பலம்
துணி வாங்கி உடுத்த என்றால் போதவில்லை சம்பளம்
காலையில் எழுந்திருந்தால் கடன்காரர் தொல்லையே
கவர்மெண்டார் இதையறிந்து கருணை காட்டவில்லையே
கருணை காட்டவில்லையே (எ)

4. கெஞ்சி கெஞ்சி கேட்டும் பட்ஜட் மிஞ்சவில்லை என்கிறார்
எஞ்சிய உயிர்க்கு எமன் பஞ்சவலை வீசுறார்
ஆசிரியராலே இந்த அகிலம் ஓங்குமென்கிறார்
அவர்கள் குறை தீர்க்கப்பணம் எங்கு போவதென்குறார்
எங்குப்போவ தென்குறார் (எ)

5. கத்திப் பேசினாலுமே கம்யூனிஸ்டு என்கிறார்
கருத்துவிளங்கச் சொன்னால் கழகத்தாரு என்கிறார்
விசாரணை இல்லாமலே வேறுஇடம் மாற்றுறார்
விசனத்தாலே பெண்டுபிள்ளை ரத்தக்கண்ணீர் ஊற்றுறார்
ரத்தக் கண்ணீர் ஊற்றுறார் (எ)

6. சங்கதி தெரியுமுன்னே சஸ்பெண்டு ஆர்டர் போடுறார்
சரீரம் ஒடுங்கி மக்கள் சவம்போல் நடமாடுறார்
ஆசிரியர் நிலையைக் கண்டால் யார்க்கும்மனம் வாட்டுமே
அனைவரும் ஒன்றுசேர்ந்தால் நல்லவழி காட்டுமே (எ)

தொகுத்தவர்,

மா. இராஜரத்தினம்பிள்ளை, ஆசிரியர்,

கொமாரசாமிபட்டி, தர்மபுரி.

காலமும் கருத்தும்

அதுதானே நியாயம்!

ஆம்! அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது திருவாங்கூர்–கொச்சி அரசாங்கம் செய்யவிருக்கிறசிறந்ததொருபணியைப் பற்றிக் கேள்விப்படுகிறபோது! வருகிற ஜூன் திங்களிலிருந்து, திருவாங்கூர்—கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், எட்டாவது வகுப்பு வரையில், எல்லாப் பிள்ளைகளுக்கும், **இலவசமாகக்** கல்வி புகட்டப்படுமாம். அப்படிப் புகட்டப்படுவதற்குத் தேவையான எல்லாவகை ஏற்பாடுகளையும் செய்தாகி விட்டதாம். ஏப்ரல் 14-ம் நாளன்று, அந்த மாநிலத்தின் முதலமைச்சர், புதுடில்லியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இந்த மகிழ்ச்சிக்குரிய செய்தியைத் தெரிவித்திருக்கிறார். அந்த மாநிலத்தில் ஏற்கெனவே ஐந்தாவது வகுப்பு வரையில், கல்வி, இலவசமாகத்தான் அளிக்கப்பட்டுவருகிறது. இப்போது, அந்த இலவச வசதியை எட்டாவது வகுப்பு வரையில் அளிக்க முடிவு செய்திருக்கிறது திருவாங்கூர்—கொச்சி—அரசாங்கம்— இப்படிப்பட்டதோர் சிறந்த ஏற்பாட்டை எந்தக் கட்சியின் அரசாங்கம் வகுத்துக் கொடுத்தாலும் சரி, அந்தக் கட்சியினரை நாம் நிச்சயம்பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறோம். "கண் உடையவர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு, புண்ணுடையவர் கல்லாதவர்" என்றார் பேரறிஞர் திருவள்ளுவர். "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்—ஆலயம் பதினாயிரம் நாட்டல்—அன்ன யாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று எழிலுரை பகர்ந்தார் தேசியக் கவிஞர் பாரதியார். "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால், துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும், வீரம் வரும்" என்று தெள்ளு தமிழிலே அறிவுத் தேனைப் பிழிந்தெடுத்துத் தந்திருக்கிறார் புதுஉலகப் புலவர் பாரதிதாசன். "குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகும் அழகல்ல! நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்று, பன்னெடுங் காலத்திற்கு முன்பே, நன்னெறி நூலாகிய நாலடியார், தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறது. "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே!" என்

கிற அறிவுரை தோன்றியும் நெடுங்காலம் ஆகியிருக்கிறது. கல்வியின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்கிற பேருண்மையை, திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசன், நாலடியாரின் ஆசிரியர்கள், அதிவீரராமர் ஆகிய இந்தச் சான்றோர்கள் மட்டுமல்ல, உலக அறிஞர்கள் அத்தனை பேருமே ஒரு சேர ஒப்புக்கொண்டிருக்கின்றனர். நம் மருமை நாட்டின் எட்டுத் திக்கிலும் கல்வியின் ஒளி பரவியாக வேண்டும் என்பதையும், அப்படிப் பரவினால் தான் நம் நாடு மேனாடுகளைப் போல ஓங்கி உயர்ந்து செழித்துப் பொலிய முடியும் என்பதையும், யார்தானுகட்டும், எப்படி மறுத்து விடமுடியும்? ஆனால் ஒன்று. இந்த நாட்டில் உள்ள அனைவரும் பணக்காரர்களல்ல, தங்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான கல்வியைத் தாங்களே தேடித் தரக்கூடிய வசதியும் வாய்ப்பும் பெற்றவர்களல்ல. போதுமான வருவாயும் நிம்மதியான வாழ்க்கையும் கொண்டிருப்பவர்களல்ல. அவர்களில் மிகப் பலர், மிகமிக ஏழைகள். வாழ வழியில்லாமல் வாடிக்கிடப்பவர்கள். வறுமையின் கொடுக்குகளால் கொட்டப்பட்டு, வேதனையின் அணைப்பினால் சுருண்டுகிடப்பவர்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் கற்றறிந்து முன்னுக்கு வரவேண்டுமானால், நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் பள்ளிக்கூடங்களைத் திறந்து விட்டால் மட்டும் போதாது. அந்தப் பள்ளிக்கூடங்களில்,கல்வி, இலவசமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இலவசமாகக் கொடுக்கப்பட்டால்,தான் கல்வியை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியும். இல்லையேல், அவர்களுடைய உலகத்துக்கும் கல்வி உலகத்துக்கும் இடையே நீண்ட இடைவெளி இருக்கத் தான் செய்யும். கண்ணுக்கு எதிரே கற்சிலைபோல் இருக்கிற உண்மை இது. இந்த உண்மையை மறந்துவிட்டு இந்த நாட்டில் வகுக்கப்படுகிற எந்தக் கல்வித் திட்டமும், அந்தத் திட்டம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் சரி, ஒரு நாளும் வெற்றி பெற முடியாது. முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு விட்டது திருவாங்கூர் கொச்சி அரசாங்கம். தெரிந்துகொண்டதால்தான் எட்டாவது வகுப்பு வரையில் எல்லோருக்கும் கல்வி இலவசம் என்கிற ஏற்பாட்டை இயற்ற முன்வந்திருக்கிறது. சிறந்த ஏற்பாடு—சீர்மிகு முறை. எழில் மிகு திட்டம்—எவரும் போற்ற வேண்டிய பாதை. இத்தகு பாதையில் நடந்திடும் துணிவும் அறிவுத் தெளிவும் பெற்றதற்காகத் திருவாங்கூர் — கொச்சியின் ஆட்சியாளர்களைப் பாராட்டுகிறோம்; போற்றுகிறோம்; புகழ்கிறோம். ஆனால் அதே நேரத்தில், சென்னை மாநிலம், இதே வழியில் நடக்க முன்வருமா? அதனையும் அறிய ஆசைப்படுகி

றோம். இந்தத் துறையில், திருவாங்கூர் காட்டியுள்ள பாதையையே நாமும் பின்பற்ற வேண்டிய பாதையாகும். ஆனால் பின்பற்றுவாரா புதிய முதலமைச்சர் காமராஜர்? பொறுத்திருந்து பார்ப்போம்.

ஏன் இந்த வீண் செலவு?

இப்படித்தான் கேட்கிறார் நம் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம். நாமும் இதே கேள்வியைத்தான் கேட்க ஆசைப்படுகிறோம். ஏன் இந்த வீண் செலவு? முதியவர் கல்வி என்கிற பெயரால் ஆண்டுதோறும் நம் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து இலட்சக் கணக்கில் பணம் வீணாக்கப்படுகிறதே. ஏன் இந்தத் தண்டச் செலவு? கேட்கத்தான் செய்கிறோம். கேட்கக்கூடாதா? சென்னை அரசாங்கத்தின் 1954–55-ம் ஆண்டிற்குரியவரவுசெலவுத் திட்டத்தில் மட்டும், முதியவர் கல்விக்காக, ஏழு லட்சத்துப் பதினேழாயிரத்து நூறு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இதே அளவு தொகை ஒவ்வோராண்டிலும் இந்தத் துறைக்காகவென்று கொட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது அவசியமா என்பதே நமது கேள்வி. ஆரம்பக் கல்வியைப் பெறவேண்டிய எல்லாப் பிள்ளைகளுக்கும் அந்தக் கல்வியை, இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிப்பதற்குரிய ஏற்பாடுகள் அத்தனையையும் செய்துவிட்டு, அதன் பிறகு கல்லாத முதியவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்ட முன்வந்தால் அதிலே பொருளுண்டு—அதற்கு அவசியமும் உண்டு. ஆனால் இன்றைய நிலை அதுவா? நிச்சயமாக இல்லை. இன்றையதினம் நாட்டிலே, படிப்பறிவின்றிப் பாழாகும் இளம்பிள்ளைகள், ஏராளம்! ஏராளம்!! ஆரம்பக் கல்வியைப் பெற வேண்டிய வயதுடைய மொத்தப் பிள்ளைகளில், ஏறத் தாழப் பாதிப் பேருக்குத்தான், இப்போது அந்தக் கல்வி கிடைத்து வருகிறது. மிச்சமிருக்கும் பாதிப்பேர், எழுத்தறிவைப் பெறாமலே ஏனோதானோ என்று அலைந்து திரிந்து, கல்லாத முதியவர்களாக மாறிவிடுகின்றனர். இலட்சக்கணக்கான இளைஞர்கள் இந்த விதமாகக் கவ்வி யறிவற்ற நிலைமைக்கு உள்ளாகும் கொடுமையை முதலில் நிறுத்த வேண்டும். முடிந்த அளவுக்கு மிகப் பெருந்தொகையை அரசாங்கம் இந்தப் பணிக்காகவென்று ஒதுக்கவேண்டும். கட்டாய ஆரம்ப இலவசக் கல்வியை நாடு முழுதிலும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். ஏழைப் பிள்ளைகளுக்குத் தேவையான பலகை புத்தகம் முதலியவற்றையும், பகல் உணவையும் இலவசமாக அளிக்க ஒரு திட்டம் தீட்டவேண்டும். இத்தனையையும் செய்து முடித்த பிறகு, இந்தத் தலைமுறையில் உள்ள முதியவர்களில், கல்லாத பேர்களுக்கெல்லாம் கல்வியறிவை அளிக்க முன் வரலாம் அரசாங்கம். முன்வரவும் வேண்டும். இந்தத்

தலைமுறையில் உள்ள எல்லா இளைஞர்களுக்கும் கல்வியறிவை அளித்துவிட்டு, அதன் பிறகு, இதே தலைமுறையைச் சார்ந்த கல்வியறிவற்ற முதியவர்கட்கும் எழுத்தறிவை ஊட்டிவிட்டால், அடுத்த தலைமுறையிலிருந்து இந் நாட்டில் கல்லாத பேர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். கல்வியறிவற்ற தன்மையை விரைவில் ஒழிப்பதற்குரிய ஒரே வழி இதுதான். இதனைச் செய்யாமல், அரசாங்கம், ஒவ்வொரு தலைமுறையிலேயும், இலட்சக்கணக்கான இளைஞர்களைக் கல்வியறிவற்ற முதியவர்களாக வளரும்படி விட்டுவிட்டு அதன் பிறகு அந்த முதியவர்களின் கல்விக்காக "ஏழு லட்சம் பணம்! இதோ பாரீர்!" என்று இயம்புவது, வெறும் கேலிக் கூத்தாகுமே தவிர உருவான தொண்டாக இருக்கமுடியாது. ஓட்டைக் குடத்தைக் கொண்டு கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்க முயன்றால், அதனால் வயலுக்கும் நீர் பாயாது. கைவலியும் ஓயாது. எனவேதான் நாம் அடிக்கடி கூறிவருகிறோம், இன்றைய நிலையில் முதியவர் கல்விக்காகப் பெருந் தொகையைச் செலவழிப்பது வீண் வீண் என்று! இப்போது இதே கருத்தைக் கல்வித்துறை அமைச்சரும் கண்ணியமான முறையில் தெரிவித்திருக்கிறார். மிக மிக மகிழ்ச்சி.

வேண்டாம் அந்த விபரீதம்!

இந்தியா முழுவதிலும், எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலும் நான்காவது பாரம் முதல் ஆறுவது பாரம் முடிய இந்தி மொழியைக் கட்டாய பாடமாக வைத்தாக வேண்டுமென்று, சென்ற திங்களில், அனைத்திந்தியக் காங்கிரசின் செயற் குழு, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. ஏன் இந்த விபரீதத் தீர்மானம்—என்ன பயன் இந்த விசித்திர ஏற்பாட்டால்?—நம்மால் துளியும் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியாவின் எதிர்காலத்தில், இந்தி மொழிக்கு எத்தகைய இடம் இருக்கப் போகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாததால்தான் இத்தகைய குழப்பங்களெல்லாம் உண்டாகின்றன என்று நாம் கருதுகிறோம். மிஞ்சி மிஞ்சிப் போனால், டில்லியில் உள்ள அனைத்திந்திய அரசாங்கத்தின் நடவடிக்கை மொழியாகவும், அந்த மத்திய அரசாங்கத்திற்கும் நாடெங்குமுள்ள மாகாண அரசாங்கங்களுக்கும் இடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்து முதலான உறவு முறைகளுக்குப் பயன்படும் மொழியாகவும் மட்டுமே இந்தி இருக்க முடியும். இதற்கு மேற்பட்ட எத்தகைய உயர்நிலையிலும் இந்தி மொழி இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. அந்தந்த மாகாணத்தின் எல்லைக்கு உள்ளே நடைபெறும் எல்லா விவகாரங்களும் அந்தந்த மாகாணத்தின்

தாய் மொழியிலேதான் நடை பெற்றாக வேண்டும். எடுத்துக் காட்டாக சென்னை மாகாணத்தையே எடுத்துக்கொள்வோம். இந்த மாகாணத்தில் உள்ள ஒரு கன்னட மாவட்டம், ஒரு மலையாள மாவட்டம் ஆகிய பகுதிகள் போக, ஏனைய எல்லாப் பகுதிகளும் தமிழ் பேசப்படும் பகுதிகளாகும். இந்தத் தமிழ் மாகாணத்தைப் பொறுத்தவரையில், இந்த மாகாணத்து அரசாங்கம் தமிழ் மொழியில்தான் தன் நடவடிக்கைகளை வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மாகாணத்துச் சட்ட சபையின் நடவடிக்கைகள் தமிழ் மொழியில் தான் நடைபெறுதல் வேண்டும். இந்த மாகாணத்தில் உள்ள எல்லா நீதி மன்றங்களும், உயர் நீதி மன்றம் உட்பட, தமிழ் மொழியில்தான் தங்கள் விவகாரங்களை வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தொடக்கக் கல்வி, உயர் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி, ஆகிய எல்லா வகைக்கல்விகளும் இம்மாகாணத்தில் தமிழ் மொழியில்தான் அளிக்கப்படுதல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், தமிழ் மாகாணத்தில், ஆட்சி மொழி—நீதி மன்றமொழி—கல்விப் பயிற்சி மொழி—அத்தனையும் தமிழாகத் தான் இருத்தல் வேண்டும். இப்படியே ஆந்திரமாகாணத்தில் ஆந்திர மொழியும், பாஞ்சால மாகாணத்தில் பஞ்சாபி மொழியும், வங்காள மாகாணத்தில் வங்க மொழியும் ஆட்சி செலுத்துதல் வேண்டும். இது தான் முறை. இதுதான் தாய் மொழிக்கு மதிப்பளிக்கும் வழி. இதுவேதான் நம் நாட்டை நலமடையச் செய்யும் நல்வழி. இத்தகு அறிவுக்கண்கொண்டு பார்க்கும் போது, ஒவ்வோர் மாகாணமும் தம் தம் எல்லைக்கு உட்பட்ட எல்லா விவகாரங்களையும் தம்தம் தாய் மொழியிலேயே நடத்தும் என்பதையும், பிற மாகாண அரசாங்கங்களோடு எழுத்துப் போக்கு வரத்து செய்வதற்கும் மத்திய அரசாங்கத்தோடு எழுத்துப் போக்குவரத்து செய்வதற்கும் மட்டுமே இந்தி மொழியைப் பயன் படுத்தும் என்பதையும், எவரும் அறிந்து கொள்ள முடியும். இந்த நிலையில் இந்தி மொழிப் பயிற்சி யார் யாருக்குத் தேவை? மத்திய அரசாங்கத்தில் பணியாற்ற இருப்பவர்களுக்கும், மாகாண அரசாங்கத்தில் உள்ள பிற மாகாணத் தொடர்பு இலாகாவில் பணியாற்ற இருப்பவர்களுக்கும் மட்டும்தான் இந்தி மொழிப் பயிற்சி தேவைப்படும். மாகாணத்தில் உள்ள எல்லா மக்களுமா இந்த இருவகை உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்? நிச்சயமாக இல்லை. கடலெனப் பரந்து கிடக்கும் மக்கள் தொகையில், சில துளி அளவுள்ள சின்னஞ் சிறு தொகையினரே இந்தவகை அலுவல்களை ஏற்றுக்கொள்வர். ஆகவே அப்படிப்பட்ட நோக்கம் உடையவர்களுக்கு மட்டும் இந்த மொழியைக் கட்டாய பாடமாக்

குவது அவசியமாக இருக்கலாம். ஆனால் நாட்டில் உள்ள ஏனைய கோடிக்கணக்கான பிள்ளைகளுக்கெல்லாம் ஏன் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டும்? அவசியம் துளியும் இல்லை அதற்கு! தங்கள் பிற்கால வாழ்க்கையில் இந்தி மொழியைப் பயன்படுத்த வேண்டிய அவசியமே இல்லாதவர்களுக்கெல்லாம் கூட இந்தி மொழியைக் கட்டாயபாடமாக்குவதால், இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்மீது பிற மாகாணத்தவர்கள் உள்ளத்தில் வெறுப்பும் பகையும் வளரவே செய்யும். அனைவர் மீதும் இந்தி மொழியை, அவசியமே இல்லை என்றாலும், கட்டாயமாகச் சுமத்தியே தீரவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், அந்த ஆசைக்குள்ளே பொதிந்து கிடக்கும் இந்தப் பேராபத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே நாம் கருதுகிறோம். கட்டாயமாக இந்தியைச் சுமத்தாதீர் – இந்திமீது வெறுப்பை வளர்க்காதீர்—என்று, அத்தகையவர்களைப் பார்த்துப் பணிவுடன் தெரிவிக்க ஆசைப்படுகிறோம்.

வாழ்க நவரத்தினம்!

“இலங்கைத் தீவிற்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்குமிடையே கடல் இருக்கிறதல்லவா – அந்தக் கடலை ஒரே தாண்டில் தாண்டினாரே ஹனுமார் – தெரியுமா?”– இப்படிப் பேசிக் கொண்டிருந்தோம் நாம் இது வரை.

ஆனால் அந்தக் கடலைத் தாண்ட உன்னால் முடியுமோ?”– இப்படியாராவது மறித்துக் கேட்டால், தலையைத்தான் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறோம். எதிர் மொழி ஏதும் கூறியதில்லை நாம். கதையிலேதான் ஹனுமார் கடலைத் தாண்டியிருக்கிறார்! ஆனால் நேரிலே நாமோ, கப்பல் மூலமாகவோ வானூர்தி மூலமாகவோதான் தாண்டியிருக்கிறோமே தவிர, தனி மனிதனாக இருந்து தாண்டியதில்லை. ஹனுமான்தான் தாண்டினாரே, அது போதாதா என்று பேசுவதோடும், கதையிலே எழுதிப் பார்ப்பதோடும் நம்முடைய ஆர்வம் திருப்தியடைந்து விட்டது. உண்மையிலேயே அதனைச் செய்ய வேண்டுமே என்கிற எழுச்சி நமக்கு ஏற்படுவதில்லை.

ஆனால் இப்போது, நவரத்னசாமி என்கிற நற்றமிழர் ஒருவர், தமிழ்க்குலம் முழுவதும் பெருமைப் படத்தக்க முறையில் அந்தக் குறையைத் தீர்த்துவிட்டார். வட இலங்கையில் உள்ள வெள்வெட்டி என்கிற துறைமுக நகரத்திலிருந்து, தென்னிந்தியாவில் உள்ள கோடிக்கரை என்கிற துறைமுக நகரம் வரையில், இடையே உள்ள கடலின் நீளம், 37 மைல். அந்த 37 மைல்களையும், தீரர் நவரத்தினசாமி, தன்னந் தனியாக நீந்தியே கடந்துவிட்டார். மார்ச் திங்கள் இறுதியில் ஓர் நாள், நண்பர் நவரத்தினசாமி, இலங்கையைவிட்டுக் கடலில் குதித்தார். முதல் 15 மைல்

களை 17 மணி நேரத்திலும், அடுத்த 22 மைல்களை 20 மணி நேரத்திலும் நீந்தி முடித்தார். இந்தவகையாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கடலை நீந்தியே கடந்த முதல் மனிதர், இந்த இலங்கைத் தமிழர்தான் என்பதை அறிகிறபோது தமிழர் தம் நெஞ்சம் பூரிப்படைவதில் வியப்பென்ன இருக்கமுடியும்?

சுழலும் அலையும், சூறுவளியும், பாயும் திமிங்கிலமும், பல வகை ஆபத்துகளும் நிரம்பிய இடம், கடல். அத்தகு கடலிலே, தன்னந்தனியாகநீந்தியிருக்கிறார் தோழர் நவரத்தினம். மரணத்துக்கு அஞ்சாமல் மாபெருங் கடலில் இறங்கியிருக்கிறார். இறங்கி, வெற்றி வாகையும் சூடியிருக்கிறார் இந்த வீர உள்ளம் வாய்ந்தவர். ஆனால், நாம்? ஹனுமார் தாண்டினாரே, ஆகா என்ன அற்புதம்' என்று சொல்வதோடு திருப்தி அமைந்துவிட்டோம்.

ஹனுமாராவது ஆண்டவனின் அவதாரம்—ஆகவே அவர் அற்புதச் செயல் புரிந்திருந்தால் அதிலே வியப்பதற்கு ஏதுமில்லை! ஆனால் நண்பர் நவரத்தின சாமியோ சாதாரண மனிதர். கடவுளின் தூதரல்ல. தன்னையே நம்பிக் கடலில் குதித்தார். முயற்சி முழு வெற்றியைத் தந்தது. "எண்ணிய, எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியராகப் பெறின்!" என்று நவின்றாரே அந்தப் பெரும் புலவர் திருவள்ளுவர், அது எத்துணைச் சிறந்த உண்மை! அந்த உண்மையை எவ்வளவு அழகாக நிரூபித்துக் காட்டிவிட்டார் நவரத்தினம்!

அற்புதமானதோர் பணியை அருமையான முறையில் முடித்திருக்கிறார் நவரத்தினம்என்றால், அதற்குக் காரணம், புராண ஏடுகள்மீது உள்ள பக்தி அல்ல. உழைப்பின் சக்திமீது கொண்ட நம்பிக்கை. அவனன்றி ஓரணுவும் அசையாது—ஆகவே நம்மாலே என்ன ஆகும் என்கிற வறட்டு வேதாந்தத்தை வாய் சலிக்கப் பேசிக்கொண்டிருந்த முறையால் அல்ல, அவர் வெற்றிபெற்றிருப்பது. தக்க தருணத்தில் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டால், சிறந்த வெற்றியைத் தவறாமல் பெறமுடியும் என்கிற அறிவு வழியைப் பின்பற்றியதால் தான். ஆம். இப்படிப்பட்ட நவரத்தினங்கள்தான் நாட்டிற்கு ஏராளமாகத்தேவை. எல்லாம் அவன் செயல், என்னால் எதுவும் முடியாது என்று சோம்பேறி வேதாந்தம் பேசுகின்ற செல்லாக் காசுகள் அல்ல. வாழ்க நவரத்தினம்! வளர்க இத்தகு அறிவு வழி!!

செய்திச் சுருள்

எட்டு அமைச்சர்கள்

ஏப்ரல் 13–ம் நாளன்று, சென்னை மாநிலத்தின் புதிய அமைச்சர் அவையைத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் அவர்கள் நிறுவியிருக்கிறார் அல்லவா? அந்த அமைச்சர் அவையில், முதலமைச்சர் காமராஜர் உட்பட மொத்தம் எட்டு அமைச்சர்கள் இருக்கின்றனர். அமைச்சர்களின் பெயர்களும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற துறைகளும் (இலாகாக்கள்) பின் வருமாறு :— (1) கே. காமராஜ் (முதலமைச்சர்):— போலீஸ் (2) ஏ. பி. ஷெட்டி :— மருத்துவம், உடல் நலம், கூட்டுறவு, வீடு, முன்னாள் இராணுவத்தினர் பிரச்சினைகள். (3) எம். பக்தவத்சலம் :— பயிர்த் தொழில், காடுகள், மீன் பண்ணைகள், கிராம நலம், சமுதாய நலத் திட்டங்கள், தொழிலாளர், கைத் தொழில்கள், பெண்கள் நலம். (4) சி. சுப்ரமண்யம் :— நிதி, உணவு, கல்வி, தேர்தல்கள், விளம்பரம், சட்டம், சிறை. (5) எம். ஏ மாணிக்கவேலு நாயக்கர் :— நிலவரி, வர்த்தகவரிகள், கிராம வளர்ச்சி. (6) இராமநாதபுரம் ராஜா :— பொதுப் பணிகள், பொறி இயல் கல்லூரிகள், வீட்டுக் கட்டுப்பாடு. (7) பி. பரமேஸ்வரன் :— போக்கு வரத்து, இந்து அறநிலையங்கள், மது விலக்கு, பத்திரப் பதிவு. (8) எஸ். எஸ். இராமசாமி படையாட்சி :— உள்ளாட்சி (Local Boards). இந்த எட்டு அமைச்சர்களில், முதலமைச்சரும், எஸ். எஸ். இராமசாமி அவர்களும் இப்போதுதான் முதல் முறையாக மந்திரிப் பதவி வகிக்கின்றனர். ஏனைய அறுவரில் திரு வாளர் பரமேஸ்வரன், குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தபோது அமைச்சராக இருந்தவர். ஏனைய ஐவரும் ஆச்சாரியாரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தவர்களே.

ஆசிரியர் தொகுதி

சென்னை மேல்சபைக்குரிய ஆசிரியர்கள் தொகுதிக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில், தோழர்கள் இ. எச். பரமேஸ்வரன், ஜி. கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சுற்றுப் பயணம்

நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை முதலான பல நாடுகளை நேரில் கண்டறிந்து வரும் பயணம் ஒன்றைத் தொடங்கியுள்ள பிரிட்டிஷ் நாட்டு அரசி எலிஜபெத், தற்போது இலங்கைக்கு

வந்திருக்கிறார். அவருக்கு அங்கே தலைசிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.

நமது தாராளம்

அண்டை நாடாகிய பர்மா இந்தியாவுக்குத் தரவேண்டிய கடனாகிய 68 கோடி ரூபாயில் 48 கோடியைத் தள்ளிக்கொடுக்க ஒப்புக்கொண்டுவிட்டது இந்திய அரசாங்கம். மிச்சமுள்ள இருபது கோடி ரூபாயை மட்டும் கொடுத்துவிட்டால், முழுக் கடனையும் திருப்பிக்கொடுத்துவிட்டதாகக் கருதத் தயார் என்று அறிவித்துவிட்டது நம் மத்திய அரசாங்கம். இந்த 20 கோடி ரூபாயில் 15 கோடியை, பர்மாவிடமிருந்து அரிசி வாங்குவதன் மூலமாக இந்தியா சரிக்கட்டும் என்று தெரியவருகிறது.

உதவியின் அளவு

தொழில் நுணுக்க உதவி என்கிற திட்டத்தின் கீழும், பொருளியல் வளர்ச்சி என்கிற திட்டத்தின் கீழுமாக, மொத்தம் சுமார் 40 கோடி ரூபாயை, அமெரிக்கா, அடுத்த ஆண்டில், இந்தியாவுக்குக் கொடுத்து உதவுமாம். இதற்குத் தேவையான ஏற்பாடு, அமெரிக்காவின் புத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில், இணைக்கப்பட்டிருக்கிறதாம்.

கிளர்ச்சி வலுக்கிறது!

இந்தியாவில், பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்தில் உள்ள காரைகால், புதுச்சேரி, மாஹி, ஏனம் ஆகிய இடங்களில் தோன்றியுள்ள விடுதலைக் கிளர்ச்சி, அண்மையில் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. நாள்தோறும் ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். தடியடி, சிறைவாசம், துப்பாக்கி வேட்டு, என்கிற அடக்குமுறைகளை அவசர அவசரமாகப் பயன்படுத்திப் பார்க்கிறது பிரஞ்சு ஏகாதிபத்யம். பிரஞ்சு ஆட்சியை உதறி எறிந்துவிட்டு, ஏறத்தாழ நூறு கிராமங்கள், இப்போதே, போட்டி அரசாங்கம் வைத்துத் தனியாட்சி நடத்தி வருகின்றன. நிலைமையை நேரில் கண்டறிய பாரிசிலிருந்து புதுச்சேரிக்கு வந்திருந்த உயர்தர அதிகாரியும் பாரிஸ் திரும்பிவிட்டார். மக்களின் எழுச்சி மகத்தானது என்பதை பிரஞ்சு ஆட்சியாளர்கள் தெரிந்துகொண்டனர் என்றும், விரைவில் ஒரு சமரச முடிவு ஏற்படும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளியேறுகிறார் இராமச்சந்திரன்!

தன்னுடைய புதிய கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பணியாற்றுவதற்காக ஆச்சாரியாரால் மாதம் 700 ரூபாய் அலவன்ஸ் பெறும் தகுதியுடன் நியமிக்கப்பட்ட "கவுரவ" கல்வி ஆலோசகர் தோழர் ஜி. இராமச்சந்திரன், தற்போது தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். புதிய மந்திரிசபை பதவியேற்பதாலும், கல்வித் திட்டத்தில் இந்த

அமைச்சர் அவையின் கருத்து யாது என்பது திட்டமாகத் தெரியாததாலும், கல்வித் திட்டத்தைப்பற்றிப் புதிய மந்திரி சபைக்கு வேறு வகையான கருத்து இருக்குமானால் தான் தொடர்ந்து பதவி வகிப்பது அவர்களுக்கு சங்கடத்தை உண்டு பண்ணலாம் என்றும், ஆகவே தான் தான், பதவியை விட்டு விலகுவதாகவும் இராமச்சந்திரனார் தெரிவித்திருக்கிறார். புதிய கல்வித் திட்டத்தைப் புதிய மந்திரிசபை கைவிட்டுவிடும் என்பதையே இந்த ராஜினாமா சுட்டிக் காட்டுகிறது என்று அரசியல் உலகம் கருதுகிறது.

எட்டணாவால் மட்டற்ற ஆபத்து

மதுரைக்கு அருகேயுள்ள திருமங்கலம் என்னும் ஊரில் ஏப்ரல் தொடக்கத்தில் சந்தை ஒன்று கூடிற்றாம். அதில், 60 வயது நிறைந்த இரு கிழவர்கள் ஒருவருடன் ஒருவர் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தனராம். ஒரு கிழவர் மற்றொருவருக்கு எப்போதோ ஒரு முறை கடன் கொடுத்திருந்தாராம். கடனை வாங்கியவர் அதனைத் திருப்பித் தரவில்லையாம். கடன் கொடுத்த கிழவனார் வற்புறுத்திக் கேட்டாராம். வாக்குவாதம் வளர்ந்து, கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் முகத்தின்மீது ஓங்கி ஒரு குத்து விட்டாராம். குத்துப் பட்டவர், அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்துவிட்டாராம். எப்படியிருக்கிறது செய்தி? எட்டணா கடன்! அதற்கு ஒரு மரணம்! வேதனை மிகுந்த விசித்திரமல்லவா இது?

இயந்திர இருதயம்

மான்ட்ரீல் என்னும் ஊரில், 18 வயதாகிய பெண் ஒருத்தியின் இருதயத்தில் ஓர் ஆபரேஷன் செய்யவேண்டியிருந்தது. இருதய ஆபரேஷன் செய்யும் நேரத்தில் இருதயம் நின்றுவிட்டால் உயிருக்கே ஆபத்து அல்லவா? ஆகவே அந்த நேரத்தில் இருதயத்திற்குப் பதிலாக இருந்து அதன் பணிகளைச் செய்வதற்காக, ஐந்தடி உயரமுள்ள இயந்திர இருதயம் ஒன்று செய்யப்பட்டு, பல நுண்ணிய கருவிகள் மூலமாக இரத்தக் குழாய்களுடன் இணைக்கப்பட்டது. 26 நிமிஷ நேரம், இந்த இயந்திர இருதயம், இயற்கை இருதயத்திற்குப் பதிலாக, அந்தப் பெண்ணின் இரத்த ஓட்டத்தை வழக்கம்போல ஓடும்படி செய்து முடித்ததாம். மருத்துவ உலகத்தில் இது ஒரு மகத்தான நிகழ்ச்சி என்று கருதப்படுகிறது. இயற்கை இருதயத்திற்குப் பதிலாக இயந்திர இருதயம் 26 நிமிடங்கள் பணியாற்றுகின்றது என்றால் உண்மையிலேயே அது வியப்படைவதற்குரிய நிகழ்ச்சி தானே?

கோபால்ட் குண்டு

அணுக் குண்டு, ஆபத்தே உருவான ஐட்ரஜன் குண்டு, இந்த இரண்டையும் விடப் பல

மடங்கு நாச சக்தி வாய்ந்த கோபால்ட் குண்டு என்னும் ஒன்று ரஷ்யாவால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் குண்டிலிருந்து நச்சு மேகங்கள் உண்டாகுமாம். அவை படரும் வழியில் உள்ளவை அனைத்தையும் அழித்து ஒழிக்குமாம். இத்தகு குண்டுகளை எந்த வல்லரசும் மனம் துணிந்து உபயோகிக்காது என்று எண்ணி வாளா கிடப்பது தவறு என்றும், இத்தகு குண்டுகளைப் பயன்படுத்தாதபடி வல்லரசுகள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டியது மிக மிக அவசியம் என்றும், பிரிட்டிஷ் நாட்டு முன்னாள் முதலமைச்சர் தோழர் அட்லி அண்மையில் அவர் நாட்டில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் முழக்கமிட்டிருக்கிறார்.

இங்கேயும் வளரவேண்டும்!

"தொழில் துறையில் ஏற்கனவே வளம் பெற்றுள்ள பகுதிகளை மேலும் மேலும் வளப்படுத்துவதையே மத்திய அரசாங்கம் தன்னுடைய தொழில் முன்னேற்றக் கொள்கையாகக் கொண்டிருப்பது கண்டு நான் வருந்துகிறேன். இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்குக் கோபம் ஏற்படும் வகையில், மீண்டும் மீண்டும் பம்பாய்க்கோ அல்லது கல்கத்தாவுக்கோதான் புதிய தொழில்களைத் துவக்குவதற்குத் தேவையான அனுமதி மத்திய அரசாங்கத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதிலும் 3760 லட்சம் மக்கள் உள்ளனர். இதில் 600 லட்சம் மக்கள் தென்னிந்தியாவில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் நன்கு கற்று, வேலை தேடிக்கொண்டிருப்பவர்கள். எனவே தென்னாட்டிலேயும் பல பெருந் தொழில்களைத் துவக்க மத்திய அரசாங்கம் இடம் தரவேண்டும்" என்று பேசியிருக்கிறார் பிரபல தொழில் துறை வல்லுநர் திருவாளர் அநந்தராமகிருஷ்ணய்யர் — சென்னையில் — ஏப்ரல் 10-ம் தேதியன்று! மத்திய ஆட்சியாளர்கள் இந்தக் கருத்துரையைக் கவனிக்கவேண்டும். கவனிப்பார்களா?

தரவேண்டிய தொகை

1954-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் இருந்த நிலைமைப்படி, பிரிட்டன், இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன் தொகை (ஸ்டர்லிங் நிலுவை) சுமார் 735 கோடி ரூபாய்கள் ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசாங்கத்தின் தபால் தந்தி இலாகா, 1952–53-ல் பட்டுவாடா செய்திருக்கிற புக்போஸ்ட் பாக்கெட்டுகளின் எண்ணிக்கை 13,06,00,000. அதே ஆண்டில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிற பதிவு செய்யப்பட்ட செய்தித் தாள் கட்டுகளின் எண்ணிக்கை, 11,01,00,000.

சென்னை நகரில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியை நடத்தி

வரும் வகையில், 1952–53-ம் ஆண்டில் மட்டும், சென்னை அரசாங்கத்திற்கு 30,40,631 ரூபாய் செலவாகி யிருக்கிறது. அந்த ஆண்டில் மட்டும், அந்த ஆஸ்பத்திரியில் தங்கி மருத்துவஉதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 36,870 தங்காமல் மருத்துவ உதவி மட்டும் பெற்றவர்களின் தொகை 4,42,724.

1953-ம் ஆண்டு ஜனவரி மாதக் கணக்குப்படி, இந்தியாவில் வாழும் பிற நாட்டினர் எண்ணிக்கை 82,851. இவர்களில், அமெரிக்க நாட்டினரின் தொகை 6251.

இந்திய அரசாங்கத்தின் தபால் தந்தி இலாகா, ஒவ்வொரு நாளும் அச்சிட்டுவரும் தபால் பில்லைகளின் எண்ணிக்கை, 96 லட்சம்.

உருளைக்கிழங்கிலிருந்து செயற்கை முறையில் ரப்பர் தயார் செய்ய முடியும். ஸ்வீடன் நாட்டில் இதற்கான முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் மொத்தம் 1700 கலங்கரை விளக்கங்கள் (Light Houses) இருக்கின்றன.

நிலக்கரியிலிருந்து பெட்ரோல்!

நிலக்கரியிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறை ஒன்றை தென்னாப்ரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது. விரைவில், தென்னாப்ரிக்கா, இத்தகு பெட்ரோல் உற்பத்தியில் ஈடுபடுமாம். விஞ்ஞானத்தின் வளர்ச்சி மட்டும் அழிவுத் துறைக்குப் பயன்படுத்தப் படாமல் இருந்தால், அதனால் மனித சமுதாயத்திற்கு ஏற்படக் கூடிய நன்மை ஏராளம் ஏராளம் என்பதை இந்தக் கண்டுபிடிப்பு எழில்பட விளக்குகிறது அல்லவா?

மாடுகளின் மதிப்பு

உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவில் தான் மாடுகளின் தொகை அதிகம். இந்திய மாடுகளின் தொகை 1930 லட்சம். இவற்றில் 670 லட்சம், மூன்று வயதுக்கு மேற்பட்ட பசு, எருமைக் கடேரிகள். ஒவ்வோர் ஆண்டிலும், இப் பசு, எருமைகள், சுமார் 300 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பால் தருகின்றன. ஆண்டுதோறும் இக்கால்நடைகள்மூலம் கிடைக்கும் தோலின் மதிப்பு 40 கோடி ரூபாய். விவசாயப் பண்டங்களை ஏற்றிச் செல்வதில் அவை ஆண்டுதோறும் புரியும் உழைப்பின் மதிப்போ 160 கோடி ரூபாய். சிறு பிள்ளைகள்மீது கோபம் வந்தால், போடா எருமை மாடு என்று ஆத்திரத்துடனும் கொஞ்சம் கேலியுடனும் பேசுகிறோமே, அப்படிப்பட்ட மாடுகளால்தான் நமக்கு இவ்வளவு செல்வம் கிடைக்கிறது. ஆமாம். மெய்யாகத்தான்.

மண்ணுக்குள்ளே மட்டற்ற செல்வம்

கோவை மாவட்டம் பல்லடம் தாலுகாவில் பருத்தி விளையும்

ரிசல் காட்டில், ஏராளமான ஜிப்சம் படிகங்கள் (கால்சியம் சல்பேட்) இருக்கின்றன என்று, கோவை பயிர்த்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த இரு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுபோலவே வடார்க்காடு மாவட்டம் ஆரணிக்கு அருகில் உள்ள வீரசாம்பனூர் கிராமத்தில் உள்ள மொடையூர் மலையிலிருந்து இரும்பு கலந்த மண் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முறையான வழியிலும் போதுமான அளவிலும் ஆராய்ச்சி நடத்தப்பட்டால், தமிழ்நாட்டு மண்ணில் இன்னும் பல உலோகங்கள் இருப்பது தெரியவரும். இவை அத்தனையையும் தோண்டி எடுத்துத் தொழிற்சாலைகள் துவக்கிப் பணியாற்றினால், தமிழ்நாடு பொன்னாடாகும். தமிழ் மக்களிடையே வளம் கொழிக்கும்—வாழ்வு துலங்கும். ஆனால் செய்யுமா அரசாங்கம்?

அறிவுக் கதிர்

அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம். படை பலம் பாய்ந்து வரலாம், உலகே கேலி செய்யலாம். எனினும் நீதியை நிலைநாட்டி, ஏழையின் கண்ணீரைத் துடைத்தே தீருவேன்.

— எமிலி ஜோலா

பொது வாழ்வு—புயல்கள் வீசும் கடல். எனினும் அதைக் கடந்து குறிப்பிட்ட இடத்தைச் சேர்வதில்தான் இன்பம் இருக்கிறது. அந்த இன்பத்தைப் பெற—யாவருக்கும் தர—பணி புரிவதுதான் நிலைத்த பெருமை.

— எம். என். ராய்

வேத வேதாந்திகள், சித்தாந்த சிரோன்மணிகள், திரு அருள் பெற்றவர்கள் எம் நாட்டில் உண்டு என்று பேசலாம் பேசுகிறோம். ஆனால், எல்லாம் சரி, உன் நாட்டின் கல்வி நிலையைக் கூறு என்று பிறர் கேட்டாலோ வெட்கித் தலைகுனிகிறோம். அல்லவா?

— அண்ணா

மூப்பின்றி வாழ்ந்த புலவர்

(தென்னாப்பிரிகா—டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

பாண்டி நாட்டில், பிசிர் என்னும் ஊரில் பிறந்த பிசிராந்தை யார் எனப் பெயரிய புலவர் ஒருவர் இருந்தார். இவர், தம் உயிர்த் தோழராகிய கோப்பெருஞ் சோழன் இறையடி சேர்ந்ததறிந்து,

" புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்ற குறளுக்கு இலக்காகத் தானும் உயிர் நீத்தார். இவர் நரை, திரை, மூப்புத் துன்பங்களின்றி வாழ்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவர் கோப்பெருஞ் சோழனையும், பாண்டியன் அறிவுடை நம்பியையும் பாடியுள்ளார். நண்பன் பிரிவாற்றாமல் தன் உயிரைப் போக்கிக் கொண்ட பெரு நட்பு வாய்ந்த இப் புலவர், நரை திரை மூப்பின்றி எவ்வாறு வாழ்ந்தார் என்று, இக்கால விபரீத உலகம் அதை ஒப்புக் கொள்ளாது. ஆனால், அக்காலத்தில் இவர்தம் உயிர்த் தோழராகிய கோப்பெருஞ் சோழர்,

" பலவருடங்களாகியும் உங்கட்கு நரைவாராததன்
காரணமென்ன ?"

வென்று கேட்டதற்கு, இவர் கூறும் பதில் கீழ்வரும் பாட்டால் அறிவோம்.

" யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதிராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண்டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே" (புறம்)

எனக்குப் பலவாண்டுகளாயினும், நரைவாராதிருப்பது எப்படி யென்று கேட்டால்,

" மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்றபடி என்மனைவி மிகவும் குணவதியாயும், மாட்சிமைப்பட்டவளாயும், கற்புடையவளாயு மிருக்கின்றாள்; அவளே போல் என் மக்களும் அறிவு மிக்குடையார்கள்; என் வேலைக்காரர் என் குறிப்

பறிந்தும், யான் எண்ணியபடி தெரிந்தும் ஏவல் செய்வார்; என் அரசனும்,

" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

என்ற குறளுக்கிணங்க, முறையில்லாத காரியங்களைச் செய்யமாட்டான்; அதோடு மக்களைக் காப்பான்; இன்னும் மேலாக நற்றவ முனிவர்களும், கற்றறிந்து ஐம்புலனடக்கிய சான்றோர்கள் பலரும் என் ஊரில் வாழ்கின்றார்களாதலான், என்று பதில் தந்தார்.

இப்பொழுது பிசிராந்தையார் உயிருடனிருந்து இப்பதிலைச் சொல்லியிருப்பாரானால், அவரை உடனே பைத்தியக்காரனுக்கிவிட்டிருப்பார்கள்.

அக்காலத்துப் பிசிராந்தையார் போன்றவர்கள் திண்ணிய உடல் நலனும், நன்மனைவியும், நன்மக்கட்பேறும், அவர்கள் அறிவு நிறைந்திருந்தமையால் மனத்திருப்தியும், ஐந்தடங்கிய பெரியோர்கள் குழுவால் கடவுட் காதலும் ஒருங்கே வாய்க்கப்பெற்றிருந்த தோடு, அல்லவை கடிந்து மக்களை உண்மையாகவே காக்கும் அரசனையும் அடைந்திருந்தார்கள். அவர்கள் எந்தத்துன்பமும் இல்லாமல் மிகவும் மன அமைதியுடன் வாழ்ந்திருந்தார்கள். ஆதலால் அவர்கட்கு நரை, உடம்பின் திரை, மூப்பால் உடல் தளர்தல் முதலியன இல்லாமல் இன்புற்றிருக்க ஏது வாய்த்ததென்றறியப் படுகின்றது.

புலவர் பாட்டில், அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் உடலமைதி மனவமைதியுடன் அவ்வாறு இருந்தார்களென்பதை நமக்குத் தெரிவிப்பதுடன், நரை திரை மூப்பு இல்லாமல் வாழ்தற்கு நன்மனைவி, நன்மக்கள் முதலியன முக்கிய சாதனமென்றும் அறிவுறுத்துகின்றார். பாட்டின் கருத்து எந்தவகை உண்மையென்று பார்ப்பதற்கு மேற்கண்டபடி நன்மனைவி, நன்மக்கள், ஏவல் செய்வார், காக்கும் அரசன், அறிவு முதிர்ந்த சான்றோர்கள் முதலியவர்களை யெல்லாம் தேடி அடைந்து பரீட்சித்தாலொழிய, சொன்னவரை அது அவ்வாறு இயலுமாவென்று குறைசொல்லுவதிற் பயனில்லை. இக்காலம் மிகமுயன்று ஒருவன் நன்மனைவி முதலிய எல்லா நலன்களையும் அடைந்தாலும், அல்லவை செய்யாமல் காக்கின்ற அரசன் ஒருவனை அடைவது முயற்கொம்பாக இருக்கின்றதன்றோ?

மாட்சிமைப்பட்ட மனைவி, நன்மக்கள் முதலியவர்களைப் பெற்று இன்புற்று, நரைவராமலும், உடல் திரையாமலும் வயது மூப்பினால் உடல் நலங்கெடாமல் திடகாத்திரத்துடன் பெரியார்கள் வாழ்ந்த

நாட்டினரான நாம், இன்று இவ்வித துன்பங்களிலிருந்து தப்புவதற்கு, நரையை விலக்கிக்கொள்ள கருப்புச் சாயம் முதலியன பூசியும், திரை மூப்புவராமல் தடுக்க தேகப்பயிற்சி செய்தும், மருந்து முதலியன அருந்தியும், என்னதான் செய்யினும் காரியங்களைத் திறமையாகச் செய்யமுடியாததோடு, பிஞ்சில் பழுத்து உதிர்ந்து விடுகின்றோம். பிசிராந்தையார் காலத்தையும், மிகவும் நாகரீகம் உடையேம் என்று செருக்கடைந்திருக்கும் இக்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் கீழ் நிலைக்கன்றோ நாம் இழிந்து வந்திருக்கின்றோம்! உண்மை இவ்வாறிருக்க, இக்காலத்திய நாம் போலியை உண்மையென்று பிறழ உணர்தலை எண்ணாமல் 'அறிவு மிகுந்துள்ளோம் என்று செருக்கடைந்திருப்பதன் பரிபவம் என்னே!

அறிவுக் கதிர்

புதிய தமிழகத்தின் முதல் சீர்திருத்தம் சாதி ஒழிப்பே. சாதி என்கிற சொல்லே இனி நமது அகராதியில் தேவையில்லை.

— சுத்தாநந்த பாரதியார்

அமெரிக்கா தயாரித்தனுப்பும் புத்தம் புது ப்யூக் மோட்டாரில் சவாரி செய்து கொண்டே பழங்கால வாழ்க்கை முறையை மீண்டும் காணவேண்டும் என்று பேசிப் புகழ்வதை அறிவுக்குப் பொருத்தமானதென்று நான் ஏற்க முடியாது.

— சர். சி. வி. ராமன்

நம்முடைய மதப்பற்றை உரைகல்லாகக் கொண்டு ஆண்டவன் நம்மை மதிப்பிடமாட்டான். நம் செயல்களின் சிறப்பைக் கொண்டே நம்மை எடை போட்டுப் பார்ப்பான். இதை மறந்துவிடாதீர்கள்.

— வால்டேர்

ஒரு மனிதன் தன்னுடைய உடலைத் தவிர வேறு எந்த உடலிலும் புகுந்து வாழ விரும்பமாட்டான். அதுபோல ஒரு நாடு மற்றொரு நாட்டின் கீழ் அடிமைப்பட்டு வாழ விரும்புவதில்லை.

— காந்தியடிகள்

மலர்களைச் சுற்றி மணம் கமழும். அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து, புகழ் திகழும்.

—சாக்ரடீஸ்

OFFICE OF
THE DEPUTY INSPECTOR OF SCHOOLS
GEORG TOWN RANGE, MADRAS.

Circular No. 8/53 **Dated 10-10-53.**

(j) In the column relating to leave all particulars must be furnished. THE NATURE AND PERIOD OF LEAVE taken must be shown-whether Earned Leave, Maternity Leave or Leave -on-Loss of pay. Such abbreviations as "E.L." or "Mat. L" or "L. L. P" may be used. The exact dates must be noted and in brackets the correct number of days also. Then the entry would be for example - "E. L: 3-1-53 to 13-1-53 (11 days)" and "Mat. L: 10-1-53 to 31-1-53 (22 days)". etc. Or if space does not permit such lengthy entry it

"E. L. (11 days)"
3-1-53 to 13-1-53

would beIn this connection teachers and managers are informed that earned leave can be pre-fixed or sufixed (i. e. taken together with) *vacation* BUT NOT CASUAL LEAVE. If a teacher applied for 4 days C. L. and along with it takes 15 days earned leave, then the teacher must be sanctioned leave for 19 days unless the teacher says that his earned leave of 15 days must be counted from the day of availing C. L. Grant will be assessed only if the teacher returns to duty after availing leave of any kind.

(k) One of the columns under "Assessment" i. e. "Rate" may be changed as "T. P. F. *ac No.*" and the account number of the teacher given. If he is not a subscriber he should apply. The words "Applied on........" (date may be entered.) In case of transfer "Applied for transfer on........(date) from (name of schools") should be written.

(l) The rest of the columns may be changed as "Remarks" and all other details as are need or mentioned above may be written here.

5. The pupils statement, the basis for working out the teacher quotient, must give true and correct figures.

(a) STANDARD:—Only the standard must be marked preferably beginning with Standard 1 and not with standard 5 or 8.

(b) SECTIONS WITH NO. AND DATE OF SANCT ON BY THE D. I.,:— If there are sections only, this column must be filled in as A, B, C – one below the other. The number and date of order of bifurcation or trifurcation issued by the Deputy Inspector must be noted against each section. The date from which such division is given effect to also must be noted. This must be done in every monthly return.

(c) NUMBER ON ROLLS ON THE FIRST DAY OF THE MONTH :— This refers to the month under report. Before writing the attendance register for the month, the names of pupils who have to be removed off the rolls (long absenties or who have not paid the fees) must be struck off and then written. This figure shall be entered for each section and not collectively for the class or standard.

(d) ADMISSION IN THE MONTH:— Admissions made during the month in each section must be entered. If admissions are made in months other than those in which admissions are permitted (Vide Rule 22 (a) of the Rules for Recognition), the order of the Deputy Inspector permitting such admissions must be quoted in the remarks column.

(e) NUMBER OF WITHDRAWALS DURING THE MONTH:— If a pupil is absent for a month continuously, his name must be removed from the attendance register and proper entries made in admission register, stagnation chart etc. In addition to such removals those who left the school with record sheets on after completion of school course must also be taken into account.

(f) Number on rolls on the last date of the month:— After admissions, and withdrawals are made the correct number on rolls on the last date of the month shall be noted.

(g) AVERAGE ATTENDANCE:—As assessment is based on the average attendance care must be taken in its calculation. The class teacher will independently calculate from the attendance register. The H. M. will do so from the attendance chart and compare both the figures. This will prevent any mistake creeping in. This must be given for each section and then totalled up at the bottom for each standard. A specimen entry is given below:—

AVERAGE ATTENDANCE.

	Boys	Girls
I–A	22	9
B	6	21
C	12	13
	40	43

The other columns need not be filled in, but left blank.

6. THE NUMBER OF DAYS THE SCHOOL HAS ACTUALLY WORKED must be shown and then in brackets "½ or 1 T. A. M. day" must be shown e. g. "19 plus (½ day T. A. M)". This applies to schools which work on Saturdays only.

7. In some M. Rs against the Item "*Number of teachers not present at the Teachers' Association Meetings,*" it was stated that no teacher was absent, but actually there were. The Managers and headmasters are requested to give correct information. If any teacher is absent for the meeting, his name must be mentioned and within brackets the fact whether leave has been sanctioned must be entered. example "R. Palaniswami (C. L. sanctioned)".

8. HOLIDAYS FOR THE NEXT MONTH Sundays need not be noted. Only other holidays including public holidays (if they are availed by the school) must be noted. In short all holidays other than week end holidays must be noted. The actual dates, but not the total number of days, must be given. For example if the M. R. relates to the month of March, the holidays in April must be furnished. Holidays shown in the list sent to the office must also be shown.

9. DETAILS IN CHANGE OF ACCOMMODATION, SCHOOL HOURS OR ETC., The number of school places must be furnished in brackets as "(323 s. p) increased by 35 s. p". If the school working hours or any of the holidays listed are to be changed, this must find an entry here.

10. Along with the monthly return a statement of reciepts and charges for the month signed by the manager must be attached.

11. Certificate of disbursement of T. G and D. A received from the department in the following form shall be attached.

> "Certified that the T. G and the D. A. Bill/M. O. for the month of.........received on........./was cashed on.........and the amount was disbursed on acquitance to teachers on.........

OR

> "This is to certify that the teachers' salaries and D. A. have been paid for the month of.........on.........(date) and their signatures obtained in the acquittance registers and kept ready for inspection".

The first certificate is applicable to schools which wait for the grant from the Department while the second to those paying from the management's funds.

12. If any teacher goes on earned leave for which he is eligible (vide rule 4(5) of the Rules for Aid), the

T. S. R. after proper entry must be enclosed with the M. R. and the following certificate signed by the manager shall be enclosed.

> "Certified that the teacher No.........who has gone on earned leave from.........to.........is eligible for it in accordance with rule 4(5) of the Rules for Aid and that proper entries were made in the T. S. R and both attested the entries".

13. If any married women teacher goes on maternity leave or avails leave on account of abortion, the entry must be made in the T. S. R in col. 12 and sent to this office with the usual maternity certificate. Entries need not be made in the leave account found at the end of the S. R. but in column 12 of page 3 or 5 of it only.

14. The M. R. must be signed by the manager or correspondent and NOT by the H. M. All corrections are to be attested by the manager. If any of the particulars are defective, it will only delay assessment.

சவத்தைப் புதைக்கவும்

புதிய கல்வித் திட்டம் உதவாக்கரை!

உடனே ஒழித்துக் கட்டுக!

ஒரு காங்கிரஸ் வார இதழ் பின் வருமாறு எழுதுகிறது:—

"ராஜாஜியின் கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்றால், தமிழ் நாடெங்கும் ஒரு பெரும் கிளர்ச்சி நடத்துவோமென்று சின்ன அண்ணாமலை உறுமுகிறார். ராஜாஜியின் கல்வித் திட்டம் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் வேண்டுமானால் இன்னமும் இருக்கலாம். அந்தத் திட்டம் உதவாக்கரையாகி, செத்துச் சுடுகாடாகி, கிராமந்தோறும் துர்க்கந்தம் வீசிக்கொண்டிருக்கிறது. இந்தச் சவத்தை உடனே அப்புறப் படுத்தாவிட்டாலும், துர்நாற்றம் வீசாதபடி குளிப்பாட்டியாவது வைக்க வேண்டியதுதான் இப்போதைக்குள்ள வேலை."

'ஹனுமான்': 25-4-54.

சோவியத் ரஷ்யாவில் கல்வி முறை

[ஆங்கிலம்–ஜவகர்லால் நேரு]

தமிழாக்கம்–பகவதி ஜயராமன்

புதிய ரஷ்யா பலவிதக் கோணங்களிலிருந்து நோக்குவார்க்கு ஒரு சுவையான ஆராய்ச்சி நிலையம். ஆனால், அதன் புதிய கொள்கைகளில், ஓர் இந்தியனுக்கு மிகுந்த அக்கரையும் அறிவுரையும் கொடுக்கக்கூடியது அதன் கல்வி முறையே; இன்னும் குறிப்பாகச் சொன்னால் அது அறியாமை போடு புரியும் சிறப்பான போராட்டமே என்னலாம். ரஷ்யாவில் உள்ள எல்லை யற்ற பயிர் நிலங்களும், அவற்றில் வதியும் எழுத்து வாசனை யற்ற பயிர்த் தொழிலாளரும்—அந் நாட்டிற்குத் தீர்வுகாண முடியாத ஒரு புதிரை உண்டாக்கி யிருக்கிறார்கள்; நம் நாட்டிலும் இன்று இதே தன்மை நிலவுகிறது. இப் புதிர்களுக்கு சோவியத் அரசாங்கம் எப்படித் தீர்வு காண்கிறது என்பதை, அமெரிக்காவிலுள்ள தலைசிறந்த கல்வியாளரான டாக்டர் லூயி எல். டபிள்யூ. வில்ஸன் என்பவர் தாம் எழுதிய ஒரு புத்தகத்தின் மூலம் விளக்குகிறார்; அப் புத்தகத்திற்குப் "புதிய ரஷ்யாவின் புதிய பள்ளிக்கூடங்கள்" என்பது பெயர். நியூயார்க்கு, வேங்குவார்டு பதிப்பகம் வெளியிட்டுள்ள அப்புத்தகம் சோவியத் ரஷ்யாவைப் பற்றிய மேன்மையான புத்தகங்களில் ஒன்று.

மேற்சொன்ன புத்தகத்திலிருந்து ஒருவன் அறியும் முதற் செய்தி, போல்ஷ்விக்குத் தலைவர்களும், அரசாங்கமும் இளைஞர் கல்வி முறைக்குக் கொடுக்கும் தலையான முக்கியத்துவமே; இது ரஷ்யாவின் எல்லாவகை நடைமுறைகளி லிருந்தும் தெரிகிறது. உலகம் முழுவதும் சரியான கல்வி முறையின் மூலந் தான்நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நம்புகிறது. இன்று ரஷ்யாவில், அதன் தலைவர்கள் யாவர்க்கும் எதிர்காலத்தில் இக்கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து எள்ளளவும் ஐயமில்லை; அவர்கள் தாம் கொண்ட குறிக்கோள்கள் விரைவில் நிறைவேறத் தீவிரமாகப் பாடுபட்டு வருகின்றனர். அவர்கள் தம் தேசத்து இளைஞர்களுக்குத் தர வேண்டிய பயிற்சியில் தம் முழு ஆற்றலையும்செலவழித்துவருகின்றனர்; அத்தேசத்துத் திறமை பொருந்திய ஆடவரும் பெண்டிரும் இதற்குத் துணை புரிகின்றனர். அக்டோபர் புரட்சி நிறைவேறிய சில நாட்களுக்குள்ளும், பெட்ரோகிராடில் உள் நாட்டுக் கலகம் நடந்தவண்ணம் இருந்த போதும், போல்ஷ்விக்கர்களின் விரைவான வீழ்ச்சியை ஒவ்வொருவரும் சிந்தித்துக் கொண்டு இருந்தபோதுமே — அவர்கள்

தம் கல்விமுறை அறிவிப்பை வெளியிட்டனர். பின்னர், 'பத்தாண்டுகளுக்குள் அறியாமைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவோம்' என்று அவர்கள் இறும்பூது கலந்த மனவுரத்துடன் உறுதி கூறினர். இப் புனிதமான நல்லெண்ணத்தோடு, அவர்கள், இளைஞருக்கான கல்வி முறையுடன் வயதுவந்தோர் யாவரிடத்தும் அறியாமை அறவே தொலைய ஒரு தீர்மானமான திட்டத்தையும் உருவாக்கினர்.

ஆனால், சூழ்நிலை அவர்களுக்கு எதிராக வேலை செய்ததனால், அவர்கள் தம் முயற்சியில் தோல்வியே காணவேண்டி நேர்ந்தது. உள்நாட்டுக் கலகத் தொடர்ச்சி, வெளியார் தலையீடு, பஞ்சம், முட்டுக்கட்டை—ஆகிய நிலைகள் தேசத்தைச் சூறையாடி, இரங்கத்தக்க கீழ்நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. அவர்கள் அறியாமையை முற்றும் தொலைக்க முடியவில்லை யென்றாலும், இப் பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை உண்டுபண்ணி விட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

ரஷ்யக் கல்வி முறையின் இரண்டாவது முக்கியக் கூறு, பள்ளிக்கூடத்திற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பே. கல்வி என்பது மாணவனின் அன்றாட அல்லது எதிர்கால வாழ்க்கையினின்று அறுபட்டுக் காற்றில் உலவும் ஒரு பொருளன்று. உண்மையான கல்வி. மாணவனின் சூழ்நிலையையும், அநுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு, அவன் தன் பிற்கால வாழ்க்கைக் கடமைகளை ஆற்றத் தக்கவனாக ஆக்குவதாகவும் இருக்க வேண்டும். இதனை மனத்துட் கொண்டு ஒரு மேலான கலைத் திட்டத்தை (Curriculam) வகுக்க, பேர் போன கல்வியாளர் ஒருவர் — அந்நாட்டின் கைத்தொழில் பயிர்த்தொழிற் பகுதிகளைப் பற்றித் தனித் தனியாக ஆராய்ந்தார். அங்கு அரசாங்கம், ஆசிரியர் அனைவரும் தம் மாணவரின் தனி வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது; இப்படி இருந்தால்தான் மாணவர்க்கு ஏற்ற கலைத்திட்டம் வகுத்துப் பின்பற்ற முடியும் என்பது அதன் கருத்து.

இவற்றையெல்லாம் நிறைவேற்ற முதல் வழி தாய்மொழி மூலம் கல்வி அமைவதே. சோவியத் கூட்டரசு இந்தியாவை விட பலதரப்பட்ட மக்களையும், பல வேறுபட்ட மொழிகளையும் தன்னகத்தே கொண்டது; என்றாலும் ஒவ்வொரு மொழிக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில் அதுபின்வாங்கியதே கிடையாது. அக் கூட்டரசின் ஒவ்வொரு மொழிப்பகுதியிலுள்ள பள்ளிக்கூடமும், அவ்வம் மொழியையே படிப்பு வாயிலாகக் கொண்டு இலங்குகிறது. சில சமயங்களில், ஒரே நகரத்திலுள்ள வெவ்

வேறு பள்ளிக்கூடங்கள் வேறு வேறு மொழிகளையும் பயன் படுத்துகின்றன. எல்லா வகையிலும் ஒவ்வொரு உள் நாட்டு மொழியையும் வளம்படுத்த அங்கே தீவிர முயற்சிகள் நடக்கின்றன. பல பகுதிகளில் வாழும் சோவியத் மக்கள் தம் தம் அலுவல்களைத் தம் தம் வட்டார மொழிகளிலேயே கவனிக்கின்றனர். அரசாங்கப் பத்திரிகைகளும், நூல்களும் எல்லா மொழிகளிலும் வெளி வருகின்றன. லெனின்கிராடு, மாஸ்கோ போன்ற இடங்களில் ஆசிரியர்க்குப் பல்வேறு மொழிகளில் பயிற்சி தரப் பல தனித்தனிப் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற 45 பள்ளிகள் தற்போது அங்கு உள்ளன. பெரும் பல்கலைக் கழகங்களில், நாட்டுச் சிறுபான்மை வகுப்பினர்க்குத் தனிச் சலுகைகள் காட்டப்படுகின்றன. இதுபோன்ற சிறுபான்மை வகுப்புப் பண்பாடுகளை வளர்க்கும் பெற்றிக்குச் சான்றாக, வரி வடிவமே இல்லாத மொழிகளுக்குப் புது வரி வடிவம் சமைத்துத் தந்த செயலைச் சிறப்பாகக் குறிக்கலாம். நாங்கள் மாஸ்கோவிலுள்ள கல்வித் துறையை (Education department)ப் பார்வையிட்டபோது, பல்வகை வரி வடிவங்களில் எழுதப்பட்ட பாடப் புத்தகங்களைக் காண நேரிட்டது. அவற்றிற் சில பாரசீக எழுத்துக்களை நினைவூட்டின; மற்றவை எங்களுக்குப் புரியவே இல்லை.

இக் கொள்கையைச் சோவியத் அரசாங்கம் எவ்வளவு தூரம் நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பதற்கு ஒரு அருமையான எடுத்துக்காட்டே சாலும். சைபீரியாவின் இர்குட்ஸ் (Irkutsk) பகுதியில் ஒரு சிறு குடி வாழ்ந்து வருகிறது. அது காரகாஸ் குடி எனப்படும். அதன் மக்கள் தொகை குழந்தைகளுடன் சேர்ந்து நானூற்றைந்தே. அவர்கள் துருக்கிய மொழிச் சிதைவு ஒன்றினைப் பேசி வருகிறார்கள். அவர்கள் வேட்டையையே தொழிலாகக் கொண்ட நாடோடிகள். அந்த மக்களின் குழந்தைகளுக்காக என்று ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. அக் குழந்தைகள் வேனிற்காலத்தில் தம் தாய் தந்தையருடன் சுற்றிக்கொண்டிருப்பர். எனவே, அப்பள்ளிக்கூடம் மாரிக்காலத்தில் மட்டுமே வேலை செய்கிறது. இன்னொரு வகை நாடோடிக் கூட்டமான ஜிப்சியர்களுக்கென்று மூன்று பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஜிப்சி "ஒலிப்பு முறை" பற்றி ஒரு புத்தகம் தயாரிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஜிப்சி மொழி எழுத்தமைப்பு என்ற ஒன்றே இல்லாதபோது இம் முயற்சி மிகக் கடினமானது.

சோவியத் கூட்டரசின் (Soviet Union) மற்ற நாட்டுச் சிறுபான்மை வகுப்புப் பெ

யர்கள் சுவையுள்ளன. அவை யாவன : போலியர், உக்கிரேனியர், லிதுவேனியர், எஸ்தோனியர், ஜெர்மானியர், பின்னியர், சுப்ருவினர், அர்மீனியர், வெள்ளை ரஷ்யர், செமோயதியர், ஓஸ்தியாகியர், மங்கோலியர், யாக்கூத்ஸினர், தார்த்தாரியர், பாஸ்கீரியர், துங்கர், பர்யாதியர், யூககியர், காம சோதாலியர், எஸ்கிமோக்கள், கிரூஸியர், அக்கேசியர், ஆயிராத்தியர், சுவாசியர், கோமியர், மாரியர், கால்மாக்கியர், இங்கூஷியர், மோர்தாவனியர், வட காக்கஸிலுள்ள அஸ்ஸீரியர், கொரியர் என்பவையாம். இன்னும் இவை போன்று எவ்வளவோ உள்ளன.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்த போது, லெனின் கிராடு பல்கலைக் கழகம் பௌத்தப் பண்பாட்டை ஆராய ஒரு கலைக்கூடம் நிறுவியுள்ளதாக ஒரு செய்தியைப் பத்திரிகைகள் அறிவித்திருந்தன. இக் கலைக்கூடம் பௌத்த மதத்தைப்பற்றிய ஒரு கலைக் களஞ்சியம் (Encyclopaedia) தொகுத்துக்கொண்டிருப்பதாகவும், பௌத்தப் பண்பாட்டை ஆராய ஒரு சர்வதேச மாநாட்டைக் கூட்டப் போவதாகவும் இப்போது தெரிகிறது.

ரஷ்யக் கூட்டரசின் புறம்பேயுள்ள பல குடியரசுகளில் எடுத்துக்காட்டாகத் தார்த்தாரியர், பாஸ்கீரியருள்—நேற்றுவரை முக்காடு இட்டுக்கொண்டிருந்த மாதர், இன்று ஆசிரியர் தொழிலில் பயிற்சி பெறுகின்றனர். இதுவும் ஒரு விந்தையான செய்தி அல்லவா?

சோவியத் கல்வி முறையின் மூன்றும் கூறு, அரசாங்கம் பொது மக்களுக்காக நடத்தும் அமைப்பாண்மை (Organisation)தான்; இதுவும் பொதுவுடைமைத் தத்துவத்தின் ஒரு பகுதி. மற்ற தேசங்கள் யாவற்றிலும் சிறந்த கல்வி முறையைச் செல்வர் ஆதிக்கம் நிறைந்த தனிப் பள்ளிக்கூடங்களில்தாம் காணலாம். ஆனால், ரஷ்யாவிலோ இத்தகைய கல்வி யாவரும் பெற எத்தனங்கள் நடைபெறுகின்றன. இக் கல்விக்கு, அங்கு, கூட்டுக் கல்வி (Collective or Co-operative Education) என்று பெயர்; இந்த அடிப்படையிலேயே அங்குக் கல்வி முறை அமைந்திருக்கிறது. 'கல்வியின் இறுதிநிலை அறிவு திரட்டலும், திறன் அடைதலும் மட்டுமன்று; தான் அறிந்ததைப் பிறர்க்கு உரைத்தலும், பிறர் அறிந்ததைத் தான் கேட்டலும் ஆம்'என்பதே இதன் தத்துவம். இந்த தறுவாயில்லெனினின்கைம் மனைவியும், தற்காலத் தலைசிறந்த கல்வியாளருமான திருமதி குரூப்ஸ்கயா கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். அவர், "எல்லாவிதக் கல்விச் செயல் முறையிலும் துவக்கம், முடிவு என்ற இரு முனைகள் உள்ளன; இவ்விரு முனைகளின் நோக்கமும் கூட்டு முறையே. இம் முறை

கல்விச் செயல் முறையின் எல்லாப் பகுதியினூடும் ஒரு சிவப்பு நூலிழை போன்று பரவுகிறது. குழந்தைகளின் கூட்டமைப்பு மூலமே நாம் சமுதாயக் கல்வியைப் பரவச்செய்ய முடியும்... இந்த நெறிமுறையே இதன் அடிப்படையும், தத்துவமும், முடிவுமாகும்' என்று கூறியிருக்கிறார்.

ஜார் மன்னன் காலத்தில் கல்வி முறை என்பது வைதிக மாதா கோவிலின் கையிற்சிக்கியிருந்தது. அம் மாதா கோவிலின் வேலை மாணவர்க்கு ஜார் மன்னனிடமும், கோவிலினிடமும் பக்தி செலுத்த வேண்டிய முறையைக் கற்பிப்பதுதான்; இதோடுகூட, இந்தியாவைப் போல், அரசாங்கக் காரியாலயங்களுக்கு அதிகப்படி கணக்குப் பிள்ளைகளை உண்டுபண்ணுவதும் அதன் வேலை. "தாழ்ந்த வகுப்புகள்" முன்னேற அன்று எள்ளளவு வழியும் செய்யப்படவில்லை. அன்றைய ஜார் அரசாங்கக் கல்வி அமைச்சர் ஒருவர், "கோச்சு வண்டிக்காரர், ஏவலாளர், சமையற்காரர், துணி வெளுப்போர் — ஆகியோரின் குழந்தைகள், தம் பிறப்புக்கு மீறி முன்னேற வழி கோலமாட்டோம்" என்று கட்டுரைத்தார். அன்றைய குழந்தைகள் கீழ்வரும் வினா விடையைப் பாடம் பண்ணினார்கள் :

வினா: ஜார் மன்னனுக்கு நாம் புரிய வேண்டிய கடமையைப் பற்றி மதம் என்ன புகட்டுகிறது?

விடை: பக்தி, நன்றியறிவு, வரி கொடுப்பு, தொழும்பு, பணிவு, துதி—சுருங்கக் கூறின் பக்தியும் நன்றியறிவுமாம்.

சோவியத் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், அதன் கல்வித் துறையினர் முதன் முதலில் பள்ளிக்கூடங்களை மாதா கோவிலின்கையிலிருந்து பிரித்தனர்; ஆண் பெண் கூட்டுக் கல்வி முறையைப் புகுத்தினர்; ரஷ்யரல்லாத சிறுபான்மை வகுப்பினரும் தம் தம் சொந்த மொழிகளில் பள்ளிக்கூடங்கள் நடத்த வசதி செய்து தந்தனர். இவையேயன்றிப் பள்ளியில் சேராத மூன்று வயதிலிருந்து ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பயிற்சியும், எட்டு வயதிலிருந்து பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான துவக்கக் கல்வியும், பதின்மூன்று வயதிலிருந்து பதினாறு வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கான நடுத்தரக் கல்வியும்—எல்லோருக்கும் கடமையுணர்ச்சியோடும், இலவசமாகவும் அளிக்கப்படும் என்ற சட்டத்தை இயற்றி ஆட்சிக்குக் கொண்டு வந்தனர்; இன்னும், ஒவ்வொரு ரஷ்யக் குடிமகனும் உயர்தரக் கல்வி பெறத் தகுதியுடையவன்—என்ற உரிமையையும் வழங்கினர். அங்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதுவரை உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் சமுதாயக் கல்வி (Social Education) புகட்ட வேண்டியது குடும்பத்தினரின் கடமை அல்ல; அரசாங்

கத்தின் கடமை. இச் சமுதாயக் கல்வியின் நோக்கம், "நாட்டின் ஒவ்வொரு மகனும் உடல் நலமும், வலிவும், வீறும், திட்பமும், நினைவு செயல்களில் தற்சார்பும் உடையவனாக விளங்க வேண்டும்; அவனுக்குப் பல துறைகளில் பழக்கமும், ஆழ்ந்த பண்பாடும் அமைந்திருக்க வேண்டும்; உழைக்கும் வகுப்புக்கு அவன் தொண்டு புரிய வேண்டும்; உலகத்திற்காகவே அவன் வாழவேண்டும்; இத்தகைய சால்புடையோனையே உண்டாக்கவேண்டும்" என்பதே.

ஆக, கல்வி என்பது அங்குக் குழந்தையின் மூன்றுவது வயதிலிருந்து தொடங்குகிறது. மூன்று வயதுக்கு முற்பட்ட குழந்தையின் நலத்தையும், கருவுற்றிருக்கும் தாயின் நலத்தையும், அரசாங்கத்தின் சுகாதாரத் துறை (Health Department) கவனித்துக்கொள்ளுகிறது. கருவுற்ற பெண் தொழிலாளர்—குழந்தை ஈனு முன்பும், ஈன்ற பின்பும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்; இவ் ஓய்வுச் சமயத்தில் அவர்களுக்கான சம்பளமும் இலவசமாகக் கிடைக்கின்றன; அவர்கள் கட்டணம் செலுத்தாமல் மருத்துவ உதவியும் பெறலாம். குழந்தை வளர்ந்த பின்னர், அதன் தாய் அதனைக் கவனிக்க, வேலை நேரங்களிலும் போதிய ஒழிவு கிடைக்கின்றன; அவள் தான் வேலை செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயே ஒரு தொட்டிலில் அதனை வளர்த்திவிட்டுத் தன் பணியை ஆற்றலாம்.

ஒவ்வொரு தொழிற்சாலையும், வாணிகக் கழகமும் (Trade Union) பண்பாட்டு நிதி என்ற ஒரு நிதிக்குப் பொருளுதவி செய்கின்றன. இந்நிதியினைக் கொண்டு தொட்டில்கள், பராமரிப்புப் பள்ளிகள் (Nursery Schools), பொழுது போக்குப் பள்ளிகள் (Kinder gartens) விளையாட்டு மைதானங்கள் முதலியன பெறப்படுகின்றன. குழந்தைகளுக்குப் பள்ளியில் சேருமுன் அளிக்கப்படும் பயிற்சியில், அவர்கள் சுகாதாரம், உணவு, உறக்கம்—ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. அப்பயிற்சித் திட்டத்தில் விளையாட்டு, கதைகள், உல்லாசப் பயணம், இசை, கலை, நாடகம்—முதலியவையும் பங்கு பெறுகின்றன. இந்தக் குழந்தைகள் எப்போதும் கூடிவாழ்வதற்கு வேண்டிய பழக்கங்கள் இவ்வளவு இளவயதிலேயே போதிக்கப்படுகின்றன. சென்ற சில ஆண்டுகளில் இவை போன்ற பத்தாயிரம் பாலர் பள்ளிகள் எழுந்தன; ஆனல் ரஷ்யாவின் மக்கள் தொகையை நோக்க இவை சிறிய அளவினவே.

வாணிகக் கழகங்கள் தம் வருமானத்தில் நூற்றுக்குப் பத்து வீதம் வயதுவந்தோர் கல்விக்குக் கொடுக்கிறது. மேலும், இவ் வாணிகக் கழகங்கள் தொழிலாளருடன் செய்துகொண்ட கூட்டு உடன் படிக்கைகள்படி

அவர்களிடமிருந்து தம் சம்பளத்தில் மேற்படி கல்விக்காக நூற்றுக்கு ஏழு வீதம் தண்டி வழங்குகிறது.

அங்குத் துவக்கக் கல்வியும், நடுத்தரக் கல்வியும் ஒன்றாகவே கருதப்படுகிறது; இத்தகைய கல்வி தரும் பள்ளிக்கு இணைப்புத் தொழிற் பள்ளி (Unified Labour School) என்று பெயர். இப்பள்ளி முதல் தரம் (துவக்கம்), இரண்டாந்தரம் (நடுத்தரம்) என்று மட்டும் பிரிக்கப்படுகிறது. பையன்களின் ஏழாவது வயதிலும், ஒன்பதாவது வயதிலும் மேற்படி கல்வி முறை அடிப்படையில் மாறுகிறது. இப் பள்ளியில் சில தனிப் பண்டைக் கூறுகள் விளங்குகின்றன. இங்கே, பள்ளிக்கூட நுழைவின் போது எவ்விதத் தேர்வும் இல்லை; வகுப்பு மாற்றம் (Promotion) அந்த அந்த ஆண்டு வேலையின் தன்மையைப் பொறுத்தது; ஒவ்வோர் ஆண்டின் வேலையும் அந்த அந்தப் பையன் சேர்ந்திருக்கும் குழுவின் கூட்டு வேலை மூலம் கணிக்கப்படுகிறது. எல்லாப் பள்ளிகளிலும் ஆண்களும், பெண்களும் ஒன்றாகவே படிக்கின்றனர். அவ்வப்போது பையன்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாகின்றனர்; ஒவ்வொரு பையனும் தன் திறமைக்குத் தக்க கவனிப்புப் பெறுகிறான். இவற்றால், வலுவீனமான குழந்தைகள் கடினமான வேலைகளிலிருந்து விடுதி பெறுகின்றனர்; குறைந்த கண் பார்வை உள்ளவர்கள் முன்பக்கம் இடம்பெறுகின்றனர். தால்தன் திட்டம் (Dalton Plan) என்ற முறை இவ்வகைகளில் நன்கு பயன்படுகிறது; இம்முறையின் விளைவே விரிவுரை மூலம் கல்வி பயிற்றுவது நிறுத்தப்பட்டதும்.

அங்குப் பள்ளிக்கூடங்களில் மாணவர் அரசாங்கங்கள் நடத்துகின்றனர்; மாணவர் அமைப்புகளும் பல உள. அவ் வமைப்புகள் அக்டோபர் குழுக்கள், திட்ட மன்றங்கள், கோமசோமால், குழந்தைகள் கூட்டுறவுகள் என்று அழைக்கப்படுகின்றன. பள்ளிக்கூட நிகழ்ச்சி முறைகளைத் தயாரிப்பதில் அங்கு மாணவரும் பங்கு பெறுகின்றனர். பொதுவுடைமையாளர் வகுப்புப் போரில் Class war) முழு நம்பிக்கை உடையவர்கள். ஆனால், பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில், லெனின் கைம்மனைவி குருப்ஸ்கயா, "மாணவர் நடத்தும் அரசாங்கம், பெரியோர் நடத்தும் அரசியல் வாழ்வின் மாதிரி அன்று; ஏனென்றால், குழந்தைகளின் வாழ்வில் வகுப்புப் போராட்டமோ, வகுப்பு ஆதிக்கமோ இடம்பெறவே கூடாது. பள்ளிக்கூடம் என்பது எதிர்கால வகுப்பற்ற சமுதாயத்தின் வித்தும், அடையாளமுமேயாம்" என்று உரைத்திருக்கிறார். இந்தப் பாராட்டத்தக்க கொள்கையினிடத்துப் பள்ளிக்கூடங்களி

லேயே உரசலும், மாறுபாடும் இருந்து வருகின்றன.

அங்குப் பள்ளிக்கூடங்களில் உல்லாசப் பயணம் (excursion) ஒரு தனி முறையாக இலங்கு கிறது. பொதுவுடைமை அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் பள்ளிக்கூட அமைப்புக்கு வேண்டிய சாதனங்களும், புத்தகங்களும் போதுமான அளவு கிடைக்கவில்லை; எனவே, உல்லாசப் பயணங்கள் மூலமாகவே அவர்கள் கல்வி போதிக்கவேண்டியதாயிற்று. பிறகு, இம்முறை கல்வியின் ஓர் இன்றியமையாத உறுப்பாகிவிட்டது. பள்ளிக்கூட ஆசிரியன்மார் மாணவரை அவ்வப்போது கூட்டங் கூட்டமாகப் பொருட்காட்சிச் சாலைகள், சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்கள், கலைக் கூடங்கள், இயற்கைக் காட்சிகள் மலிந்த பகுதிகள்—இவைகளுக்கு அழைத்துச் செல்கின்றனர். சில சமயங்களில் தொலைதூர இடங்களுக்கும் மாணவர் போகின்றனர்; அதுபோது, அவர் தம் வழிச் செலவுக்குப் போதிய நிதி இல்லாவிட்டால், மாணவர் நடுவழியிலேயே பணம் சம்பாதித்துக்கொள்கின்றனர்.

சோவியத் கல்வி முறையின் மற்றொரு முக்கியக் கூறு கலப்பு மையம் அல்லது ஏற்பாட்டு மையம் (complex or project) என்று அழைக்கப்படும். கலப்பு மையம் என்பது பல சுவையான ஏற்பாடுகள் நிறைந்த ஒரு நடுவிடம்; இதில் நாம் மனத்தில் கொண்டிருக்கும் பல துறைகள் பற்றிய கருத்துக்களையும் செயற்படுத்திக் காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சான்றாக, கிராம மையம் என்பது கிராம வாழ்க்கையைப் பற்றிப் பேசும்; விளையுள், அறுவடை, பயிர்த்தொழிற் பொருள்கள்—இவற்றைக் குறித்து ஆராயும்; கிராம சுகாதாரம், சமூகம், வாணிபம் — முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு கேள்விகள் எழுப்பும்; கிராமத்திற்கும், நகரத்திற்கும் உள்ள உறவு, கிராம வாழ்க்கையின் குறைகள், அவற்றின் காரணங்களும், போக்கும் வழிகளும், கிராம ஆட்சிமுறை, கிராம மேன்மைக்கு உழைக்க எல்லாப் பொதுத் தொழிலாளரும் ஒன்று சேரவேண்டியதன் தேவை—ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டு விவாதம் புரியும். இத்தகைய மையங்களில் கலந்து கொள்வதால், மாணவர் கிராமங்களில் உழைக்கவும், தாம் கற்றவற்றைச் செயலுக்குக் கொண்டு வரவும் ஊக்கம் பெறுகின்றனர்.

சுகாதார மையம் என்பது தனி மனிதனின் சுகாதாரம், வீட்டிலும், சமூகத்திலும் எவ்வாறு இருக்கிறது — என்பதைக் குறித்து ஆராய்கிறது; வீட்டுச் சுகாதாரமும், சமூகச் சுகாதாரமும் எவ்வளவு தூரம் சமூகப் பொதுவைச் சார்ந்திருக்கிறது என்ற செய்தி இங்கே வலியுறுத்தப்படுகிறது; உடம்பின் தொழிற்பாடுகள், உணவு, செரிமானம்—

முதலியவற்றைப்பற்றி இங்கே விளக்கப்படுகிறது; மதுசாரத்தின் (Alcohal) கேடுகள் இங்கே கண்கூடாகக்காட்டப்படுகின்றன.

இயற்கை, தொழில், குழந்தைகள் வாழ்க்கை, மனித உறவுகள், இறுதியாகச் சமூக வாழ்க்கை—ஆகிய பலவகைப் பொருள்களைக் குறித்துக் கலப்பு மையங்கள் மூலம் அங்கே ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இதன் நோக்கம் பொதுவாக மாணவர்க்குச் சமூகத் தொண்டாற்றும் ஆவலை உண்டுபண்ணுவதும், தாம் பெற்ற அறிவைத் தம் நலனுக்கு மட்டுமன்றிப் பொதுநலனுக்கும் பயன்படுத்த ஊக்குவதுமேயாம்.

இம் மையங்கள் பற்றிய விவரமான நிகழ்ச்சி நிரல்கள் அங்கே ஆசிரியன்மார்க்கு வழங்கப்படுகின்றன. ஆனால், இந்நிரல்களை அன்னோர் பொதுத் துணையாகக் கொள்ளலாமேயன்றி, இவற்றையே பின்பற்றலாகாது. அன்னோர் தம் உடன் ஆசிரியர் துணைகொண்டும், குழந்தைகள் கூட்டுறவு கொண்டும் தத்தமக்கு உகந்த நிரல்களைத் தயாரித்துப் பின்பற்றவேண்டும். இத்தறுவாயில், ஆசிரியன்மார், செயற்கைப் போக்குகளுக்கும் வெறும் ஒழுக்கப்பாடுகளுக்கும் மாத்திரம் இடம் தரலாகாது என்று வற்புறுத்தப்படுகின்றனர். மாணவர் தாமாகச் சிந்தித்துத் தம் சொந்த முடிவுகளுக்கு வரவேண்டும் என்பதே இதன் உட்கோள்.

சுற்றுப்புற இடங்கள் பெரும்பாலும் அங்கே பள்ளிக்கூடங்களைக் கட்டுப்படுத்துகின்றன. இவ்விடங்களே அப்பள்ளிகளுக்குச் சோதனைக் களங்களாகப் பயன்படுகின்றன. நாட்டுப்புறங்களில் கிராமச் சூழ்நிலை பள்ளிகளைக் கவர்கின்றன. ஒரு பள்ளிக்கூடம் ஒரு தொழிற்சாலைக்கு அருகாமையில் இருந்தால், அச்சாலையே பூகோளம், விஞ்ஞானம், கணிதம்—ஆகிய படிப்புகளுக்குத் தக்க சோதனைக் களமாக அமைகின்றது.

நகர்ப்புறங்களிலே கல்வி யாவரும் பெறுகின்றனர்; ஆனால், நாட்டுப்புறங்களிலே இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியுள்ளன. நாட்டுப்புறக் குடியானவர் பொதுவாகக் கல்வி பரவுவதற்கு அதிக அக்கறை காட்டுகின்றனர்; சிற்சில இடங்களில் அவர்கள் தாமே பள்ளிக்கூடக் கட்டட வேலைகளில் பங்கு கொள்ளுகின்றனர். அண்மையில் சில விஞ்ஞானிகள், ஒரு சராசரிக் குடியானவக் குழந்தை, நகர்ப்புறக் குழந்தையை விட நுண்ணறிவில் (Intelligence) முதிர்ந்து விளங்குவதாக அறிவித்திருந்தனர். இதற்குக் குடியானவர் இயல்பாக இயற்கையோடு கொண்டிருக்கும் உறவே காரணம் என்று ஊகிக்கலாம்; இவ்வுறவு வளர அங்குள்ள பள்ளிக் கலைத் திட்டம் துணை புரிவதாக இருக்கிறது.

ரஷ்யாவின் சில பாகங்களில் நிலம் வளமற்று இருப்பதால், குடியானவர்க்கு வேண்டிய அளவு அரசாங்கம் உதவி புரிய முடிவதில்லை. ஆதலின், அக் குடியானவர் பயிர்த்தொழிலே அல்லாமல் வேறொரு தொழிலும் பயின்றிருக்க வேண்டியதாகிறது. அப்பாகங்களில் கைத்தறிகள் எங்கும் காணப்படுகின்றன; குடியானவக் குடும்பங்களில் குழந்தைகள் உட்பட சிலர் எப்போதும் நூல் நெய்துகொண்டிருக்கின்றனர்.

1913–இல் ரஷ்யாவின் கிராமப் பகுதிகளில் 2800 கடிதப் பெட்டிகள் (letter-boxes) இருந்தன; 1926–இல் அவை 64000–ஆக மிகுந்துவிட்டன. இவையல்லாமல், நகரும் அஞ்சலகமும் (Travelling Post office) அப்போது ஏற்படுத்தப்பட்டது. இவற்றைக் கொண்டே அந்த நாட்டின் கிராமக் கல்வி வளர்ச்சியை நாம் மதிப்பிடலாம். இந் நகரும் அஞ்சலகங்களை ஓட்டுவோர் பயிர்த் தொழிலுக்கான பொருள்களையும் வழங்குகின்றனர். 1923–இல் "குடியானவர் சஞ்சிகை" (Peasants' gazette) என்ற ஒரு பத்திரிகை தொடங்கப்பட்டது; அது இப்போது கோடிக் கணக்கில் செலவாகிறது. அது வேளாண்மை குறித்த எல்லாச் செய்திகளையும் வெளியிடுகிறது. நிலத் தொடர்பான விசாரணைகள், கிராம அதிகாரிகளின் ஆவலாதிகள் (Complaints) ஆகியவை தழுவிய நூறாயிரக் கணக்கான கடிதங்கள் அப்பத்திரிகைக்கு வருகின்றன. இவையெல்லாம் ஆராயப்பட்டுத் தேவையானால் தக்க நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அங்குத் திரைப் படங்கள் cinematograph films) கல்வி போதனைக்குப் பேரளவாகப் பயன்படுகின்றன. அண்மையில் ஒரு புகழ் பெற்ற பட வெளியீட்டாளர் "கிராமக் கொள்கை" என்ற படத்தைக் கொண்டு வந்துள்ளனர். இப்படம் வேளாண்மை, குடியானவர் வாழ்க்கை—ஆகியவற்றின் எல்லாக் கூறுகளையும் நன்கு விளக்கிப் படுத்திக் காட்டுகிறது; குடியானவரை எதிர்ப்படும் கேள்விகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இது நல்ல தீர்வு காண்கிறது. இப் படத்தைப் பார்க்கும் குடியானவர் தம் தொழிலில் எவ்வித இடர்ப்பாடுகளையும் தவிர்த்து வெற்றி பெறுவர் என்பது திண்ணம்.

ரஷ்யப் புரட்சிக்கு அடிப்படையாளர் நகரத்தில் வதிந்த தொழிலாளரே; பின்னர்தான் நாட்டுப்புறத்தில் வாழ்ந்த குடியானவர் புரட்சியில் மெல்ல மெல்லக் கலந்துகொண்டனர். நீண்ட நாட்களாக நகரத்துக்கும், கிராமத்துக்கும் பெருத்த போட்டி நிலைத்து வந்தது. கிராமத்தாரின் தொல்லை பொறுக்க மாட்டாமல் லெனின் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை (New Economic Policy) வகுத்து நடை

முறைக்குக் கொணர்ந்தார்; இது பொதுவுடைமைத் தத்துவத்தினின்று ஓரளவு பிறழ்ந்த செயலே என்ன வேண்டும். எனவே, இதுபற்றிய கருத்து வேறுபாடு அங்கு இன்றும் நிலவி வருவதோடு, அந்நாட்டின் உள்நாட்டுக் கொள்கையையும் பிடித்து வருகிறது. சோவியத் அரசாங்கம், நகரத்திற்கும், கிராமத்திற்கும் உள்ள ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் கூடிய வரையில் வளர்க்கவே விரும்புகின்றது. இதற்காகவே லெனினும் "ஒன்று சேர்ப்பு" (dove-tailing) என்ற பொருளில் ஒரு சொல்லையும் உண்டாக்கினார். 1923-இல் கிராமத்திற்கும் நகரத்திற்கும் பொதுவான ஒரு தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது; அச்சங்கத்தில் இப்போது கோடிக் கணக்கானவர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்; அதன் கிளைகள் தேசம் முழுவதும் பரவியுள்ளன. தொழிற்சாலைக் குழுக்களும், பொழுதுபோக்ககங்களும் சில குறிப்பிட்ட கிராமப் பகுதிகளுடன் தொடர்பு பூண்டு, அப்பகுதி முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றன.

அங்கே, அறியாமைக்கு எதிராகப் போர் பல வழிகளில் நடந்தது. வாணிகக் கழகங்கள், தொழிலாளர் பொழுதுபோக்ககங்கள், குடியானவர் மனைகள், கூட்டுறவு நிலையங்கள், சிறைச்சாலைகள்—ஆகிய யாவும் கல்விக் கூடங்களாகப் பயன்பட்டன. முதியோர்க்கென, உழவு, கைத்தொழில்—இரண்டு துறைகளிலும், அன்றாடமும் ஞாயிறுதோறும் தனித்தனிப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. அறியாமையைப் போக்க ஒரு தனிப் படைக் குழுவும், அதற்குத் துணையாகக் "கல்வியின்மை ஒழிப்புக் குழுவும்" உண்டாயின. இத்தகைய கல்விக் குழுக்களின் குறிக்கோள் மக்களுக்கு வரிச்சுவடியைக் கற்றுக் கொடுப்பது மட்டுமன்று; சமுதாய அறிவையும், நாட்டை உருவாக்கும் பணியில் ஒன்று கூடும் அவாவையும் இவை சொல்லிக் கொடுக்கின்றன. இப்போது அங்கு நூல் நிலையங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது; ஒவ்வொரு நூல் நிலையத்திலும் ஒரு படிப்பு வட்டம் (Study circle) அமைக்கப்படுகிறது; நகரும் நூல் நிலையங்களும் பெருகி வருகின்றன. அங்குத் தொழிலாளர், குடியானவர்-பற்றிய அன்றாடக் கேள்விகள் குறித்துப் பேசும் துண்டுப் புத்தகங்கள் (booklets) அச்சிட்டு யாவர்க்கும் மலிவாக வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய யாவும், செயல் முறையில், அறியாமையை நகர்ப்புறங்களிலும் கைத்தொழிலாளர் மிகுந்த பகுதிகளிலும் ஒழித்தனவே அல்லாமல்—நாட்டுப்புறங்களிலும், குடியானவர் மிகுந்த பகுதிகளிலும் அதிகமாக ஒன்றும் செய்ய இயலவில்லை. எனவே, அவர்களுக்குக் கல்வி புகட்டப் பல வழிகள் கையாளப்

படுகின்றன; அவற்றில் ஒன்று செஞ்சேனை (Red Army) மூலம் கல்வி புகட்டல். செஞ்சேனையில் முக்கால் வாசிக்கு மேலாகக் குடியானவர் நிறைந்துள்ளனர். அதில் குடியானவன் பங்கு கொள்ளும் இரண்டு ஆண்டுகளில், அவன் ஒருவகைக் கல்வி முறையிலும் பங்கு கொள்ளவேண்டும்; சேனையினின்று விலகுவதற்கு முன்பு அவன் தன் கிராமம் சென்று கல்வியையும், பண்பாட்டையும் பரப்பப் பயிற்சி அளிக்கப்படுகிறான். சேனைக்குச் சென்று மீளும் மக்களிற் பலர், கிராம நிலையை மேம்படுத்தவும், அறியாமையைப் போக்கவும் ஓரளவு நல்ல உதவி புரிகின்றனர்.

அங்கே ஆராய்ச்சி மனைகள், தொழில் நுட்பப் பள்ளிகள், தொழில் நுட்பக் குறைந்த காலப் படிப்புகள், தொழிலாளர்க் கல்விப் பிரிவுகள், குடியானவர் பள்ளிகள், ஊனமுள்ளோர் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், இசைக்கல்லூரிகள் முதலிய பலதிறப்பட்ட பள்ளிகளும், நிறுவனங்களும் உள. இவற்றுள் உளவியற் கல்லூரியும் (Institute of Psychology) ஊனவியற் கல்லூரியும் (Institute of Defectology) மிக முக்கியமானவை. தலைசிறந்த உளவியல் அறிஞரும், மருத்துவரும், கல்வியாளரும் இக் கல்லூரிகளில் குழந்தை நூலைப்பற்றி ஆராய்கின்றனர்.

இவையன்றி, உயர்தரக் கல்விகளுக்கென மாஸ்கோவிலுள்ள இரண்டு பொதுவுடைமைப் பல்கலைக் கழகங்கள் தவிர எண்ணிறந்தவை உள்ளன. அவ்விரண்டு கழகங்களுள், ஒன்று கீழ்க்கலைப் பல்கலைக் கழகம் (Oriental University) என்றும், மற்றொன்று சன்-யாட்-சென் பல்கலைக் கழகம் என்றும் அழைக்கப்படுகின்றது. இங்கே, பொதுவுடைமைக் கோட்பாடுகளும், அதற்கான பரப்புரை முறைகளும் குறிப்பாகச் சொல்லித் தரப்படுகின்றன.

ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு, சோவியத் அரசாங்கம், பழைய ஆட்சியைச் சார்ந்த எல்லாவற்றையும் குலைக்கத் தொடங்கிற்று. புகழ் பெற்ற ரஷ்ய இலக்கிய ஆசிரியர்களும் இன்ப வகுப்பை (Bourgeois)ச் சார்ந்தவர்கள் என்ற நிந்தனைக்கு ஆளாயினர்; மதமும் கடுமையான எதிர்ப்புக்கு இலக்கானது. ஆனால், இத்தகைய போக்குகள் நாளடைவில் குறைந்துகொண்டு வந்தன; இப்போது அங்கே எல்லாவற்றிலும் நல்ல பொறுமை நிலவுகிறது. பள்ளிக்கூடங்களில் இப்போது, முன்போல் மத எதிர்ப்புப் பிரசாரங்கள் தீவிரமாக நடைபெறுவதில்லை; ஆனால் சோவியத் கல்வியின் முழு நிலைக்களமும் மதச் சார்பு அற்றதே. அண்மையில், பத்திரிகைகளில் மார்க்சிம் கார்க்கி, ரோமேன் ரோலந்துக்கு எழுதியிருந்த ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. இக்கடிதத்தி

னின்று, தற்கால ரஷ்ய மக்கள், ஜார் காலத்திய ஆசிரியர்களின் இலக்கியப் படைப்புகளையும் படித்துப் பாராட்டுவது நன்கு தெரிகிறது. இன்று, ஒரு ரஷ்யன்—அவன் பொதுவுடைமையாளனாக இருந்தாலும்—கலைஞன் என்ற முறையில் இலக்கியம், இசை, கலை—ஆகியவை எங்குக் காணப்பட்டபோதிலும் அவற்றைப் பாராட்டத் தயங்குவதில்லை.

பொதுவுடைமைத் தலைவர் லெனினே சில புகழ்பெற்ற இலக்கியங்களோடு நெருங்கிய ஈடுபாடுடையவராக இருந்தனராம்; நல்ல இசை அவரையும் மயக்கி விடுமாம்.

இன்று, ரஷ்யாவில், கல்வித் துறைத்தலைவராய் இருக்கும் திரு லூனா கார்ஸ்கியைப்பற்றி ஒரு கதையுண்டு; இது இவர் குணத்தை நமக்குத் தெரிவிக்கும். புரட்சி நடந்துகொண்டிருந்த துவக்க நாட்களில், உள்நாட்டுக் கலகமும் ஏற்பட்டது; அப்போது மாஸ்கோவிலிருந்த கிரெம்லின் அரண்மனை அழிக்கப்பட்டது. இதனைக் கேட்டவுடன் லூனா கார்ஸ்கிக்கு ஒரு பேரதிர்ச்சி உண்டாயிற்று. கண்களில் நீர் மல்க, அவர் லெனினிடம் சென்று தன் வேலையினின்று உடன் விடுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். உண்மையில் கிரெம்லின் அரண்மனை அழியவில்லை என்ற செய்தி இப்போதுதான் வந்தது. அவ்வரண்மனைக் கலைப் பகுதிக் கண்காணிப்பை அவரிடம் விட்ட பிறகே, அவர் தம் வேலையில் சேர்ந்தார். இன்று, லூனாகார்ஸ்கி, கல்வித் துறைத் தலைவர் என்ற முறையில் நூல் நிலையங்கள், பொருட்காட்சிச் சாலைகள், கலை விஞ்ஞான நிலையங்கள், திரைப்படக் கொட்டகைகள், இசைக் கலை, சினிமாக் கலை—ஆகியவற்றைக் கண்காணித்து வருகின்றார்; சுருங்கச் சொல்லின், ரஷ்யாவின் பண்பாட்டுப் பகுதியே இவர் வசம் உள்ளது என்னலாம். தாம் ஒரு கவிஞர், நாடகாசிரியர், மனித இன அன்பர், புரட்சியாளர், பொதுவுடைமைக்காரர்—என்ற முறையில் இவர், ரஷ்யாவின் கல்வி முறைக்கு ஒரு விரிந்த பண்பாட்டு நோக்கை அளித்துள்ளார் என்றால் அது மிகையன்று.

ரஷ்யக் கல்வி முறை தன் நன்றியைச் செலுத்தவேண்டிய இன்னொரு தலைவர், லெனின் துன்பத்திலும் இன்பத்திலும்—வாழ்நாள் முழுவதும் சரி பங்கு பெற்ற திருமதி குரூப்ஸ்கயா ஆவர். இவர் நாடு கடத்தப்பட்ட சமயத்திலும் கல்வியில் மிகுதியும் ஈடுபட்டு, "பொதுக் கல்வியும் குடியரசும்" என்ற நூலை எழுதினார். இவர் மிக எளிமையாகவே உடுக்கிறார்; இவர் முகத் தோற்றம் கவர்ச்சியானதன்று; ஆனால், இவரோடு சில நிமிடங்கள் உரையாடினாலும், அது நம்மை மயக்குகிறது. லெனின் இறந்த பிறகு சோவியத் பேரவை

யில் இவர் சில வார்த்தை கூறி ஞர்; அவை கீழ் வருவன :

"தோழர்களே! ஆண் பெண் தொழிலாளர்களே! ஆண் பெண் குடியானவர்களே! நான் ஒன்று உங்களை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். லெனினின் பூதவுடலுக்கு அதிக மரியாதை செலுத்தவேண்டாம். அவருக்கான நினைவுச் சிலைகள் எழுப்ப வேண்டாம். அவர், தம் வாழ்க்கையில் இவை போன்ற புறப் பகட்டுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. இத்தேசத்தில் வறுமையும், வளமின்மையும் தாண்டவ மாடுவதைக் கவனியுங்கள். நீங்கள் உண்மையிலேயே லெனினை உயர்வுபடுத்த வேண்டுமாயின், குழந்தை மனைகளையும், பொழுது போக்குப் பள்ளிகளையும், பள்ளிக்கூடங்களையும், நூல் நிலையங்களையும், நோயாளி வண்டிகளையும், மருத்துவச் சாலைகளையும் உறுப்பிலிகள் ஊனமுள்ளோர் குடியிருப்புகளையும் கட்டுங்கள்."

ஆசிரியர்களை வேலை யிலிருந்து நீக்காதே

டைரக்டர் உத்தரவு நெ. R. C. 79–B–6/54 (2—4—54)

புதிய கல்வித் திட்டப்படி பல எலிமெண்டரி பாடசாலைகளில், ஆரம்ப ஆசிரியர்களை ஜூன் முதல், வேலையிலிருந்து நீங்கிவிடும்படி நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவ்விதம் செய்யக் கூடாதென்றும், அரசாங்கம் ஆரம்பாசிரியர்களை வேலையிலிருந்து நீக்குவதில்லையென உறுதி அளித்திருக்கிறதென்றும், வேலையிலிருந்து நீங்கும்படி கொடுத்த நோட்டீஸ்களையெல்லாம் மேற்குறித்த உத்தரவு கிடைத்த 10 நாட்களுக்குள் சகல மேனேஜ்மெண்டுகளும் திருப்பி வாங்கிவிட வேண்டுமென்றும், டைரக்டர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அப்படி எந்த ஆசிரியரையாவது வேலையிலிருந்து நீக்க வேண்டுமானால், D. E. O உத்தரவு பெற்ற பிறகே நீக்கவேண்டுமென்றும் அந்த உத்தரவில் கண்டிருக்கிறது.

வேலையிலிருந்து நீக்கிய ஆரம்ப ஆசிரியர்களை மறுபடியும் வேலையில் அமர்த்திக் கொள்ளாத பாடசாலை நிர்வாகியின் மீது கல்வியிலாகா ரூல் 14-ன் கீழ் கடுமையான நடவடிக்கை கல்வியிலாகா எடுத்துக்கொள்ளுமென்றும் உத்தரவில் எச்சரிக்கப்படுகிறது.

"ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சம்பளமும், பராமரிப்பு கிராண்டும்"

(Maintenance grant)

(R. M. கணபதி, அமைச்சர், தாலுகா ஆசிரியர் யூனியன், குலசேகரன்பட்டினம், திருச்செந்தூர் தாலுகா.)

ஆரம்பப் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் தரும் உதவித் தொகை பின்வருமாறு :—

செகண்டரி கிரேட் ஆசிரியர் —ரூ. 37–1–45

ஹையர் கிரேட் ஆசிரியர் —ரூ. 27–½–30

இதோடு மானேஜர் ரூ. 3 மாதம் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கட்டளை. உயர்நிலைப் பள்ளி செகண்டரி கிரேட் ஆசிரியர் சம்பளம் ரூ. 45-ல் தொடங்கி ரூ. 90 வரை உயருகையில், ஆரம்ப ஆசிரியர்களுக்கு வழங்கும் கிராண்டு போதுமானதா? இல்லவே இல்லை.

கருணை உள்ளம் படைத்த சில மானேஜர்கள் நல்ல ஆசிரியர் வேண்டுமென்று நல் நோக்குடன், ஆசிரியர்களுக்குச் சம்பளம் சிறிது அதிகமாக வழங்குகிறார்கள். இதை ஈடு செய்யச் சிலர் மாணவர்களிடம் சம்பளம் வசூல் செய்கிறார்கள். ஆனால் அப்படி கொடுக்கப்படும் ஆசிரியர் சம்பளத்தை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பெறும் சம்பளத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவே. உதாரணமாக எங்கள் ரேஞ்சில், ஓர் முதல்தரமான உயர்தர ஆரம்பப் பள்ளியில் வேலை செய்யும் 3 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அதே பள்ளியில் 33, 23, 21 ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்து இன்று முறையே ரூ. 66, ரூ. 59, ரூ. 57 சம்பளம் பெறுகின்றனர். அதே சர்வீஸில் ஓர் உயர்நிலைப் பள்ளி செகண்டரி கிரேடு ஆசிரியர் ரூ. 90 பெறலாம். ஆகவே அவர்களது சம்பளம் கூடுதல் என்று யாராவது கூற முடியுமா? முடியவே முடியாது.

ஆனால் கருணை உள்ளம் படைத்த மானேஜர்களையும் இவ்வாறு சம்பளம் கொடாதீர்கள் என்று மறைமுகமாக அரசாங்கம் இன்று கூறுவது போன்ற நடவடிக்கை எடுக்கிறது. அது என்ன?

பள்ளி பராமரிப்புக்காக, மானேஜர்களுக்கு ஆசிரியர் பெறும் கிராண்டில் 15% க்கு அதிகப்படாமல் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கையில் பள்ளி நடத்துவதால் மானேஜர் பணலாபம் பெற

லாகாது என்பது அரசாங்கக் கொள்கை. இது முற்றிலும் நியாயம். ஆனால் மாணவர்களிடம் சம்பளம் வசூல் செய்யும் பள்ளிக்கு பாராமரிப்பு கிராண்டு கொடுக்கும் முறையைக் கேளுங்கள்! பள்ளி வரவு செலவில் ஏற்படும் நஷ்டத்தைப் பொறுத்தே (deficit) 15%க்குள் கொடுக்கிறார்கள். அதுதானே முறை! ஆனால் நஷ்டத்தை கணக்கிடும் வரவு செலவுக் கணக்கில் மாணவர்களிடம் பெறும் சம்பள வசூல் முழுவதையும் வரவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆசிரியர் சம்பளத்தில் கிராண்டு + ரூ. 3 மட்டுந்தான் செலவு பக்கத்தில் எடுத்துக் கொள்ளுவார்களாம். அதற்கு அதிகப்படியாகக் கொடுக்கும் ஆசிரியர் சம்பளத்தை செலவில் ஒப்புக் கொள்ளமாட்டார்களாம். இது என்ன நியாயமோ தெரியவில்லை! இப்படிச் செய்தால் நஷ்டம் என்று எப்படி கணக்கு வரும்? எப்படி பாராமரிப்பு கிராண்டு கிடைக்கும்? ஆகவே பல மானேஜர்கள் பாராமரிப்பு கிராண்டு பெறுமலேபோகும்படியாயிற்று. ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தும், அது செலவினத்தில் சேர்க்கப்பட மறுத்த காரணத்தால், பாராமரிப்பு கிராண்டு இன்றி பெரிய நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் மானேஜர்கள்!

இனி அம்மானேஜர்கள் ஆசிரியர்களுக்குக் கிராண்டு + ரூ. 3க்கு மேல் இல்லை என்றுதானே சொல்லப்போகிறார்கள். ஆகவே ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியன் சாகும்வரை 30, 40 ஆண்டுகள் வேலை செய்தும் ரூ. 48 பெறத்தானே அருகதை உடையவன் என அரசாங்கம் கூறுகிறது! இதுவா நியாயம்! அரசாங்கந்தான் ஆசிரியர்களுக்குக் கிராண்டைக் கூட்ட பணமில்லை எனக் கையை விரிக்கிறது! மானேஜர் கொடுப்பதையுமா மறைமுகமாகத் தடுக்கவேண்டும்?

பாராமரிப்பு கிராண்டால் அரசாங்கம் அடையும் பணச் செலவு பெரிது அல்ல. முழு கிராண்டு பெறும் ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியரால் ரூ. 6–12–0–ம், ஒரு ஹையர் கிரேடு ஆசிரியரால் ரூ. 4–8–0 மாதாமாதம் பாராமரிப்பு கிராண்டாகக் கொடுக்கப்படுகிறது. இந்த சொற்பத் தொகை கொடுக்கையிலுமா, ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் முழுவதையும் கணக்கில் ஏற்க மறுத்து, அதனால் ஆசிரியர் சம்பளம் வெட்டப்பட்டு, ஒருபுறம் மானேஜரும், மறுபுறம் ஆசிரியரும் மனம் வருந்தும்படி செய்ய வேண்டும்?

அரசாங்கமும், கல்வி இலாகாவும் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்களின் வேலைக்கு ஒரு சிறிதும் போதாத இந்தக் குறைந்த சம்பளத்தைக் கூட அரசாங்கம் முழுவதும் செலவினத்தில் சேர்க்க மறுப்

(54–ம் பக்கம் பார்க்க)

"ஆசிரியர்களின் ஒற்றுமை"

க. மு. இராசன் : மாணவன், கல்லாவி.

உலகில் ஒற்றுமை எனும் ஒரு சொல் தோன்றியிரா விட்டால் அன்றிருந்த அடிமை இந்தியா இன்று குடியரசு இந்தியாவாக மலர்ந்திருக்க முடியாது. ஜார் ஆட்சியின் கீழ் இருந்த ரஷ்யா அன்று விடுபட்டிருக்க முடியாது. சுதந்திர சீன மக்கள் சீனுவாக மாறியிருக்க முடியாது. ஒற்றுமையினுல் உருவாகிய சீனவை சியாங்கேஷேக் ஜெயித்துவிட முடியாது. அமெரிக்காவும் பிற நாடுகளை அடிமையாக்க முடியாது, அணுகுண்டைக்காட்டி.

இன்று அரசாங்கத்தில் ஆளும் வர்க்கத்தினர்களாக இருப்பவர்கள் அன்று (அதாவது இளமையில்) ஆசிரியர்களின் அடிமைகளாகவும் அன்பு மாணவர்களாகவும் இருந்தவர்கள்தான். இன்று அவர்கள் அறிந்திருப்பார்கள் ஆசிரியர்களின், அவலநிலையை. அவர்களை அமைச்சர்களாக்கிய அவ்வாசிரியர் சமுதாயம் தான் நம் தாய் நாடாம் புண்ணிய பூமியென்று போற்றப்படும் இந்தியாவில் அனேக துன்பங்களால் அல்லல்படுகின்றது. இதனை எடுத்து இயம்பினுல் எங்களிடம் பணம் இல்லை என்று அறிவிக்கிறது அரசாங்கம்.

இதனுல்தான் வங்காள ஆசிரியர் சமுதாயம் புரட்சிக் கொடியைக் கைியிலேந்தி போரும் தொடங்கி விட்டது. புரட்சியின் காரணமாக அறுவர் பலியாயினர். அனேகர் சிறை சென்றனர், கடுங்குளிருக்கும், பனிக்கும் பின்வாங்கவில்லை. உணவையும் திரும்பிப் பார்த்தார்கள் இல்லை. எதற்கும் அஞ்சாத ஆசிரியர்கள். ஆட்சியாளரின் அடிதடி, கண்ணீர்ப் புகைக்குண்டுமுதலியவைகளைக்கண்டும் அவ்வாசிரியர்க

(53–ம் பக்கத் தொடர்ச்சி)

பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். புதுக் கல்வித் திட்டம் மிக உற்சாகத்துடன் புகுத்தப் படவேண்டிய இச்சந்தர்ப்பத்தில், ஆசிரியர்கள் மானேஜர்கள் இவர்களது ஊக்கத்தை முற்றிலும் குறைக்கும் இந்த நடவடிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

ஆகவே ஆசிரியர் பெறும் சம்பளம் முழுவதையும், சம்பள வசூல் செய்யும் பள்ளிச் செலவு கணக்கில் சேர்ப்பதை அரசாங்கம் இனியாவது சிந்தித்து ஏற்குமா? இதனுல் பாதிக்கப்பட்டு 1953-க்கு பராமரிப்பு கிராண்டு பெருத மானேஜர்கள் விஷயம் மீண்டும் பரிசீலிக்கப்படுமா ? பரிசீலனை செய்து 31–3–1954–க்கு முன் 1953–க்கு அவர்களுக்கு பராமரிப்பு கிராண்டு வழங்க வழிவகை தர்மதமின்றி அரசாங்கம் செய்யுமா ?

ளின் வைராமுள்ள நெஞ்சு வாட்டவில்லை. முடிவில் முதல் மந்திரி பணிந்து விட்டார் ஆசிரியர்களின் அறப்போருக்கு. ஆசிரியர்களின் துன்பங்களைத் துடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதாகவும் இசைந்து விட்டார். ஏனைய ஆசிரியர் சமுதாயத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு வங்க ஆசிரியர்களின் அறப்போர்.

எல்லா அலுவல்களிலும் ஆசிரியர் அலுவலே அல்லல் மிக்க பணி. ஆனால் அவர்களுக்கு கிடைக்கும் ஊதியமோ ரூபாய் முப்பதுதான் ஆரம்பத்தில். அதன்பின் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயரும். இதில் வீட்டு வரி கட்டுவதில் கிராமங்கள் மட்டும் விதிவிலக்கல்ல. ஆண்டு ஒன்றுக்கு வரி ஐந்து ரூபாயாக இருக்கும். இதுவுமல்லாமல் தொழில்வரி மாதத்திற்கு அரை ரூபாய், கொடுத்தாக வேண்டும். இவ்விதமாக இன்னும் பலவற்றிற்கு பணம் கொடுத்து விட்டால் எப்படிதன் இல்லறத்தை நடத்த முடியும் இந்த ஆசிரியர்கள். அவர்களுக்கு ஏதேனும் முன்னோர் உடமை உண்டா? அது தான் இல்லை. இவ்விதமான நிலையில் ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் கொண்டுவரப் பட்டது. இதனால் அவர்கள் ஆறு மணி வீதம் நாள் ஒன்றுக்கு வேலை செய்ய வேண்டும். ஆனால் அதற்கு ஏற்றபடியும், தாரத்திற்கு தக்கபடியும் ஊதியம் ஒன்றும் உயரவில்லை. காலையில் நடத்திய பாடத்தையே மாலையிலும் நடத்த வேண்டும். இப்படி ஊதியமும் உயராமல், உழைப்பும் அதிகமானால் அவர்களுக்கு எவ்வாறு உற்சாகம் தோன்றக்கூடும். அதனால் அக்கல்வித் திட்டம் அறிஞர்கள் பலர் வேண்டாம் என்று வெறுத்தனர். கற்றோர்கள் கண்டித்தனர். ஆயினும் அசையவில்லை ஆச்சாரியார். ஆத்திரம் அடைந்த ஆரம்ப ஆசிரியர்கள் மாவட்ட மாநாடு சேலம் மாவட்டத்தி (பொம்மிடி)லும், செங்கற்பட்டிலும் நடத்தினர். கல்வித் திட்டத்தைக் கண்டித்து தீர்மானம் பலதீட்டி அனுப்பினர் ஆச்சாரியாரின் அரசாங்கத்துக்கு. இதையாவது கவனிக்குமா அரசாங்கம் என்றால் அது தான் இல்லை. ஏன்?

"தமிழ்நாட்டு ஆசிரியர்கள் ஆத்திரம் அடைய மாட்டார்கள் அதிசீக்கிரம்! அது மட்டுமல்ல, அவர்களிடம் ஒற்றுமை என்னும் உறுதியான கொள்கை இல்லை. ஆசிரியர்களின் சங்கங்கள் ஆங்காங்கு பல தோன்றியிருப்பினும் அவர்கள் ஒற்றுமை எனும் உறுதியான கோட்டையில் வாழக் கற்றுக்கொள்ள வில்லை வங்காள ஆசிரியர்களைப் போல. அரசாங்கத்தின் அடிமைக் குட்டையில் ஊறிய மட்டையாக செந்தமிழ் நாட்டு ஆசிரியர் சமுதாயம் அறப்போர் தொடங்கவில்லை இன்

னும். அவர்களுக்கு ஏற்ற தள பதிகள் அறப்போருக்கு தலைமை தாங்க அகப்படவில்லை. ஆசிரியர்களின் உள்ளம் ஓர் எரிமலை. அது எப்பொழுது வேண்டுமானாலும் வெளிக்கிளம்பலாம் என்று அறியவில்லை சென்னை அரசாங்கம். அல்லது அறிந்தும் விளையாடுகிறது ஏன் என்பதும் விளங்கவில்லை.

ஆட்சியாளரின் அக்கிரமத்துக்குபயந்து அநியாயமாய்அழிந்து வரும் ஆசிரியர் சமுதாயம் துன்பம் என்னும் படகிலே பவனி வருகிறது. இவற்றையெல்லாம் பார்த்தும் கேளாக் காதியினராக உள்ளனர் இன்றைய ஆளும் வர்க்கத்தினர். ஆசிரியர்களிடத்தில் ஒற்றுமை என்பதே ஒரு சிறிதும் இல்லை. கூட்டங்கள் பல நடத்தினாலும் வர இயலாது. அன்றியும்அவர்களின் சங்கங்களை நடத்தப் பணம் வேண்டியிருக்கும். அரசாங்கத்தினர் அதிகப் பணம் கொடுத்தால்தானே ஆசிரியர் சங்கம் நடத்த இயலும். சங்கங்களை வலுப்படுத்த சங்கத்திற்கு வேண்டிய பணம் (சந்தாக்களை) தவறாது கொடுத்தாக வேண்டும். என்னிடம் பணம் இல்லையே என்று ஏமாற்றும் ஆசிரியர் தன்னையே ஏமாற்றிக் கொண்டதேயாகும். ஏன் இப்படி செப்புகிறேன் என்றால் ஆசிரியர்கள்ஒருமிக்க ஒன்றுகூடினால்தான் அரசாங்கம் அடிபணியும் ஆசிரியர்களுக்கு.

தங்களுடைய துயர்களைத் துடைக்க அரசாங்கம் ஆதரவு காட்டவில்லை என்று அறிந்திருந்தும் வாட்டம் கொண்டு வாய்மூடி மௌனியாக வீற்றிருத்தல் வீணாகும். இனிமேலாகிலும் இந்நிலையை ஒழிக்க ஒன்று சேருங்கள். ஒரு மிக்க போராட்டத்தை நடத்துங்கள். போராட்டத்தை அழிக்க அரசாங்கம் பல்வகையிலும் முயலும், கண்ணீர்ப் புகைக்குண்டு வெளிவரும். அடி தனது ஆர்பாட்டத்தை ஆரம்பிக்கும். துப்பாக்கி துணிவுடன் உங்களைத் தொலைக்க விழித்தெழும். ஆயினும் நீங்கள் அதற்கு அஞ்சக் கூடாது. அடிபணியவும் கூடாது. முதல் போராட்டம் தொடர் நாவலாக அல்லாமல் உடனே முடியும் வெற்றிப் போராட்டமாக அமைய வேண்டும். உங்களின் போராட்டம் கேடு பல விளையும் போராட்டமாக அல்லாமல் சாத்வீகப் போராட்டமாக இருக்க வேண்டும். எப்போது உங்களின் உள்ளக் குறைகளை ஒழிப்போம் என்று உறுதி தருகின்றார்களோ அரசாங்கத்தினர் அப்பொழுதுதான் நிறுத்த வேண்டும் உங்களின் வாழ்வை செம்மையுற வழிவகுக்கும் போராட்டத்தை.

ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களும் தங்கள் மாவட்டத்திலோ அல்லது எல்லா ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து மாநில மாநாடோ நடத்தி“எங்கள்துயரைத் தூரத்து

கின்றீர்களா? அல்லது தொடங்கட்டுமா போராட்டம்" என்று தீர்மானம் நிறைவேற்றி ஆசிரியரின் அவல நிலையை அகற்றுமலிருக்கும் ஆளும் வர்க்கத்தினர்களுக்கு அனுப்ப வேண்டும். அதையும் புறக்கணித்தால் போராட்டம் தொடங்கும் நாள் குறித்து ஓலை அனுப்பிவிடுங்கள். அன்று உங்களின் ஒற்றுமையின் உன்னத நாள். உங்களின் உறுதியான உண்மைப் போராட்டத்துக்குத் துன்ப இருள் விலகி, இன்பக்கதிரவன் உதிக்கும் நன்னாள். ஆதரிப்பார்கள், ஒத்துழைப்பார்கள், உங்களின் ஒன்றுபட்ட போராட்டத்தை. மாணவர்களும் அறிஞர்களும் வரவேற்பர் உங்கள் உண்மைப் போராட்டத்தை. எல்லோரும் உங்களுக்காக அனுதாபத்தைச் செலுத்துவார்கள்.

ஆதலால் ஆசிரியர்களே, ஆசிரியைகளே! ஒற்றுமை எனும் உறுதியான் உடையணிந்து, உண்மையெனும் கவசத்தைத் தாங்கி, ஊக்கம், உற்சாகம் எனும் மக்களின் ஆதரவைப் பெற்று அரசாங்கம் என்னும் பகைவனிடத்தில் நடத்துங்கள் உங்களின் போராட்டத்தை. அது உங்களின் போராட்டமாக இருக்கட்டும், அதற்கானவற்றையாவும் ஆராய்ந்து செய்யுங்கள். துயரைத் துடைத்துக்கொள்ளுங்கள் என்று உங்களின் கண்ணீரைக்காணும் மாணவன் வேண்டுகிறேன்.

ரு. 3. கிராண்டு உயர்வு

ஜீ. ஓ. நெ. 369 (2-4-54)

ஹையர் கிரேட் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களுக்கு பழைய ஸ்கேல் 27—½—30 புதிய ஸ்கேல் 30—½—33, செகண்டரி கிரேட் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு பழைய ஸ்கேல் 37—1—45 புதிய ஸ்கேல் 40—1—48. மேற் குறித்தபடி 1954 மார்ச்சு மாதத்திய கிராண்டைத்திருத்தி அமைத்து ஏப்ரல் 1954 முதல்தேதியிலிருந்து கிராண்டு ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுமென்று புதிய உத்திரவில் கண்டிருக்கிறது.

அறிஞர் அறிவுரை

'எப்படி ஏழ்மை இராதபடி திட்டம் வகுத்தாலொழிய' ஏழைகளின் குறையைத் தீர்க்க முடியாதோ அப்படித்தான், கிராமம் நகரம் என்ற பேத நிலையைப் போக்கினாலன்றி கிராமத்திலே காணப்படும் குறைபாடுகளை நீக்க முடியாது.

புதுகல்வித் திட்டத்தின் விளைவு! பள்ளிக்கூடத்தையே மூடுகிறேன்!!

அரசாங்கத்துக்குப் பள்ளிக்கூடத் தலைவர் அறிவிப்பு

திருச்சி, ஏப். 15—"ராஜ கோபாலாச்சாரியால் கொண்டு வரப்பட்ட கல்வி திட்டத்தின் விளைவாக பள்ளிக்கூடத்தை மூடும்படியான நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் ஆகவே பள்ளிக்கூடத்தை மூடிவிடுகிறேன்" என்று திருச்சி கல்வி இலாகாவுக்கும் திருப்பராய்த்துறை பாடசாலைத் தலைவர் சுவாமி சித்பவானந்தா கடிதம் எழுதினார்.

திருச்சியைச் சேர்ந்த திருப்பராய்த்துறை விவேகானந்த வித்யாவன ஆரம்பப் பாடசாலை தலைவர் சுவாமி சித்பவானந்தா எழுதிய கடிதத்தின் விவரமாவது :—

விவேகானந்தா வித்யாவன ஆரம்பப்பாடசாலையை 31–5–54 தேதியில் மூடிவிடுவதாகத் தீர்மானித்திருக்கிறேன்.

சென்ற வருஷ துவக்கத்தில் ஆரம்பப்பாடசாலையில் புதியகல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தபோது அதனால் நன்மை ஏற்படாது என்று நான் கருதினேன்.

ஒரு வருஷகாலம் அப்புதிய திட்டத்தை அமுல் செய்து பார்த்த பிறகு நான் எதிர்பார்த்தபடியே இப்புதிய திட்டம் சிறிதும் பயன்படுகிறதில்லையென்பதை கண்டறிந்தேன்.

மாணவர்கள் அரைநாள்தான் பள்ளிக்கூடத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். பாக்கி இருக்கும் அரை நாளில் அவர்களுக்குப் பயன்படும் வேலை எதுவும் செய்யவில்லை.

பயன் இல்லை

இபபொழுது கிராமங்களிலுள்ள சூழ்நிலையையும் பொருளாதார நிலையையும் ஆராய்ந்து பார்த்தால் பிள்ளைகளுக்குப் பயன்படுகிற எதையும் இப்புதிய கல்வி திட்டத்தைக் கொண்டு சாதிக்க முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது.

ஆகவே இப்புதிய திட்டப்படி ஆரம்பப்பாடசாலையை நடத்துவது கால நஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையும் உண்டு பண்ணுகிறது.

நான் நடத்திய ஆரம்பப்பாடசாலைக்குச் சொந்தமான தட்டுமுட்டு சாமான்கள் மிகுதியுள்ள பணம் ஆகியவற்றை கல்வி இலாகாவுக்கு 31–5–54 அன்று ஒப்படைக்க நான் தயாராக இருக்கிறேன்.

இப்பள்ளிக்கூடத்தின் பொறுப்பை அந்த தேதியிலிருந்து கல்வி இலாகாவே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி முறையில் தலைகீழ் மாற்றம் கூடாது!

அரசியல்வாதிகள் கல்வித் துறையில் குழப்பம் விளைவித்தல் ஆகாது!

நீண்ட கால கல்விக் குழு அமைக்கவேண்டும்

ஹுமாயூன் கபீர் அறிவுரை

"கல்வியில் செய்யப்படுகிற எந்த ஒரு மாறுதலும் வெகு மெதுவாகவே செய்யப்படவேண்டும். இன்று இருக்கிற கல்வி முறையை ஒரே நாளில் தூக்கி எறிந்துவிட்டு புதியதொன்றை திடீரெனப் புகுத்துவது முடியாத ஒன்றாகும். குழந்தைகளின் வாழ்வை, அப்படிச் செய்வதின் மூலம், சோதிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது."

"பள்ளிக்கூடங்கள், அரசியல் வாதிகள், சட்டசபைகள் இவைகளின் ஏஜென்சிகளாய் மாறி விடாதபடி, கல்வி நிபுணர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அவர்கள் இஷ்டப் படி தரப்படும் கல்வி, முடிவில் கல்வியாகவே இருக்காது,"

என்று, மாநில கல்விக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த எல்லா மைசூர் கல்வி மாநாட்டைத் துவக்கி வைத்து, யூனியன் கல்வி இலாகாவின் ஆலோசகர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் பேசுகையில் குறிப் பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், இந்த ஆபத்து அமெரிக்காவில் தவிர்க்கப்பட்டுள்ளது. அங்கு 11 முதல் 15 வரையுள்ள அங்கத்தினர்களைக் கொண்ட கல்விக் குழுக்கள் மட்டும், கல்வி போதிக்கும் வேலையைக் கவனிக்கின்றன. உயிருடனிருக்கின்ற வரையில் உறுப்பினராயிருக்கின்ற காரணத்தால், அவர்கள், கல்விக் கண்ணோட்டத்துடன் பிரச்னையைக் கவனிக்கின்றனரேயல்லாது, தான் தேர்ந்தெடுக்கப்பட்டதின் அடிப்படையில் அல்ல. அதைப் போன்றே இங்கும் நீண்ட காலம் வேலை செய்யும் கல்விக் குழுக்கள் அமைக்க வேண்டும்.

இப்போதுள்ள கல்வி முறையில் சில குறைகள் இருக்கலாம். ஆனால், அதற்காக, மொத்தக் கல்வியே சீர்கேடானது என்று சொல்வது தவறு. ஏதாவது கல்வி முறையில் மாற்றங்கள் செய்வதானால் அவை வெகு நன்றாக யோசித்து சிறிது சிறிதாகச் செய்யப்படவேண்டுமேயன்றி, இப்போதுள்ள கல்வி முறையில் தலைகீழ் மாற்றங்கள் செய்வது கூடாது" என்றும் எச்சரித்தார்.

கலிலியோ

(பிரகாசம்)

'இந்தத் திருச்சபையினராகிய நாங்கள், நீண்ட விவாதத்திற்குப் பின்னும், எதிரியின் வாதத்தைக் கேட்ட பின்னரும், எதிரியானவர் குற்றவாளி என்று கருதுகிறோம். பரமபிதாவின், வேத வாக்குகளுக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்கும் இந்தக் கலிலியோ என்பவரை நாங்கள் குற்றவாளி எனக் கருதுவதால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறோம். இவர் விரும்பினால் தண்டனையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சியனா (Siena) நகருக்குச் சென்று அங்கே தன் வாழ்நாள் முழுமையும் வசிக்கலாம்.'

1633-ம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ம் நாள். ரோம் நகரில் கூடிய 'திருச்சபையினர்' விஞ்ஞான வித்தகர் கலிலியோவுக்கு மேலே கண்டவாறு தீர்ப்பளித்தார்கள். நடுங்கும் கரங்களுடன் துவண்ட உடல் கொண்ட அந்த முதுகிழவர் தனக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் இரண்டாவது பகுதியை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார். அத்துடன் அவர் வாழ்வும் முடிந்து விட்டது என்று கருதினர். திருச்சபையை விட்டு வெளியேறி தள்ளாடி நடந்தார்.

பிறப்பு

1564-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இத்தாலிய நகரான பைசாவில் கலிலியோ பிறந்தார். இவரது தந்தை வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். தத்துவ வாதி. உடைந்து போன யந்திரங்களின் துண்டுகளை ஒன்றுசேர்த்து அவைகளை மீண்டும் புதிய மிஷின் போன்று செய்வது, பள்ளியில் கிடைக்கும் சில குறிப்புகளைக் கொண்டு வானத்தைப்பற்றிய புள்ளி விபரங்களைச் சேகரிப்பது, மற்றவர்கள் விளையாடும் போது தான் மட்டும் எங்கோ ஒரு ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருப்பது,ஒழுங்காகப்படிப்பது,இந்தநிலைமைகளில்மாணவன் ஒருவனை நினைத்துக்கொள்ளுங்கள். அந்த மாணவன்தான் கலிலியோ, கலிலியோவின் குடும்பத்தினர் இவர் படித்து டாக்டராகி மக்களை நோயினின்றும் விடுதலை செய்து அதன் மூலம், பணமும், புகழும் அடைய வேண்டுமென்று விரும்பினார்கள். 1581-ல் பைசா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இவர் உள்ளம் மருத்துவ சோதனையின் மீது செல்லவில்லை. ஆர்க்கிமிடீசின் சோதனைகள் அவரது கவனத்தைக்கவர்ந்தன. புலவர் அரிஸ்டாட்டில் வானத்தைப்பற்றி எழுதியிருந்த உண்மைகளைப் பற்றி அவர் ஆராய்ந்தார். அந்த அறிஞர்கள் விட்டுப் போயிருக்கும் வேலைகளைத் தான் மேற்

கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். அவர்கள் உலகுக்குச் சொன்ன கருத்துக்களில் காணப்பட்ட குறைகளைத் தெரிந்து கொண்டார்.

விஞ்ஞான வாழ்வு

1583–ம் ஆண்டில் ஓர் நாள், கலிலியோ, சர்ச் ஒன்றின் விட்டத்திலிருந்து தொங்கிய விளக்கு ஒன்று ஆடிக்கொண்டிருப்பதைக் கூர்ந்து கவனித்தார். விளக்கின் அசைவுகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு உட்பட்டது என்பது அவருக்குப் புலன் ஆயிற்று. அன்றிலிருந்து அவர் கணிதத்தில் ஆராய்ச்சிகள் நடத்தினார். 1588ல் கலிலியோ, பைசா பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியர் ஆனார்.

கற்களும் மேதையும்

கற்கள் கீழே விழும்போது என்ன நேருகிறது என்பதை கலிலியோ பரிசோதனைகள் நடத்திக் கண்டு கொண்டார். இரண்டு கற்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து கீழே விழுந்தால் அவைகளில் அதிக கனமுள்ள கல்தான் முதலில் தரையைத் தொடும் என்பது அரிஸ்டாட்டில் சொல்லிப்போன செய்தி. கலிலியோ இதை மறுத்தார். எடையில் வேற்றுமை கொண்ட கற்கள் என்றாலும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து விழும்போது இரண்டு கற்களும் ஒரே நேரத்தில் தரையை அடைகின்றன என்று கூறினார். அரிஸ்டாட்டிலின் கூற்றை மறுக்கும் இந்தப் புதிய மனிதனுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. தன்னை எதிர்த்தோர் அனைவரையும் அழைத்துச் சொன்னார். இரண்டு கற்களை எடுத்துக் கொண்டு, பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தின் மீது ஏறினார். அவர் அழைத்துச் சென்றவர்கள் கோபுரத்தின் அடிவாரத்தில் நின்றார்கள். கலிலியோ கோபுரத்தில் நின்று கொண்டு இரண்டு கற்களை ஒரே நேரத்தில் கீழே விட்டார். இரண்டு கற்களும் ஒரே நேரத்தில் தரையின்மீது விழுந்தன. இதைக் கண்ட மக்கள் ஒன்றும் பேசாது சென்றுவிட்டனர். என்றாலும் கலிலியோ தன் வேலையை ராஜினமா செய்யுமாறு வற்புறுத்தினார்கள். பின்பு அவர் பாவடா (Pauda) பல்கலைக் கழகத்தில் பேராசிரியாக நியமிக்கப்பட்டார்.

1604–ம் ஆண்டில் வானத்தில் புதிய நட்சத்திரம் ஒன்று காணப்பட்டது. அது எந்த நட்சத்திரம், அதன் பெயர் என்ன, இதுநாள் வரை அது எங்கே மறைந்திருந்தது, இப்போது அது எப்படி வெளியே கண்களுக்குப் புலனுகிறது என்பன போன்ற சர்ச்சைகள் எழுந்தன. கலிலியோ தன் கருத்துக்களைக் கூறினார். இவரது அறையில் இவர் சொற்பொழிவைக் கேட்க ஏராளமான மக்கள் கூடினர். ஆகவே இவர் கனது இடத்தைத்

தோட்டத்திற்கு மாற்றி அங்கே சொற்பொழிவாற்றினார். தனது வான ஆராய்ச்சிகள் பற்றிய கருத்துக்களை நூல் வடிவில் வெளியிட்டார். உலக அமைப்பு, ஒலி, ஒளி, இவைகள் அனைத்தும் அவர் ஆராய்ச்சிக்குட்பட்டவைதான்.

1609-ம் ஆண்டில்தான் கலிலியோவின் பெயருக்கு மதிப்பு ஏற்பட்டது. தொலை நோக்கிக் கண்ணாடிகள்பற்றி அவர், யார் யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருந்தார். அதுபற்றி அவரது உள்ளம் ஆராய விரும்பியது. கான்வெக்ஸ், கான்கேவ், என்று அழைக்கும் கண்ணாடித் துண்டுகள் இரண்டை இணைத்து நீண்ட குழாய் போன்ற கருவி ஒன்றை கலிலியோ செய்தார். தூரத்தில் உள்ள பொருள்களை அக் கருவி அருகே கொண்டுவந்து காட்டியது. டெலஸ்கோப் என்று ஆங்கிலத்தில் அழைக்கும் கருவியை உலகுக்கு அளித்த பெருமை கலிலியோவைத்தான் சாரும். இக்கருவியை கலிலியோ வேனிஸ் நகருக்குக் கொண்டு சென்று மக்கட்கு காண்பித்தார். வேனிஸ் நகரத்து மக்கள் சபை இந்த மேதையின் திறமையைப் பாராட்டியதுமன்னியில், பாவ்தா பல்கலை கழகம் அவருக்கு அதிகச் சம்பளம் தரவேண்டுமென்று தீர்மானித்தது.

பல பாதங்களுக்கு தொலைநோக்கியின் பெயர் ஐரோப்பாவெங்கும் அடிபட்டது. வானத்தில் காணப்படும் சந்திரனில் மேடு பள்ளங்கள், மலையுச்சிகள் இவைகளை கலிலியோ கண்டறிந்தார். ஜூபிடர் என்னும் கிரகத்தைச் சுற்றித் திரியும் விண்மீன்கள், இன்னும் இதுபோன்று அன்றுவரை உலகினர் கண்ணுக்குப் புலப்படாது வானத்தில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் பலவற்றை கலிலியோ கண்டு உலகுக்கு அவைகளை அறிமுகப்படுத்தினார்.

கலிலியோவின் ஆராய்ச்சிகள் தவறானவை, உலகினர் அந்த மனிதரை மேதை என்று கூறுவதைவிட விஞ்ஞானி என்று அழைக்கலாம் என்றார்கள் சிலர். புதிய நட்சத்திரம் ஒன்றைக் கண்டு அடையாளம் கூறுவார் கலிலியோ. 'பொய் பொய் கலிலியோ இதைக் கண்டுபிடிக்கு முன்பே நான் அந்த நட்சத்திரத்தின் அங்க அடையாளத்தை மக்களுக்கு கூறியிருக்கிறேன்' என்று தன் எதிர்ப்பைக் கிளப்புவார் ஒருவர். உண்மை உள்ளத்துடன் எதிர்த்தவர்கள், பொறாமை உள்ளத்துடன் வீணாக எதிர்ப்பைக் காட்டியோர் பலர் இருந்தார்கள்.

கலிலியோ தன் தொலைநோக்கியுடன் ரோம் நகரம் சென்றார். பிரபுக்கள், மத குருக்கள், இளவரசர்கள், போர் வீரர்கள் பலர் இவர் வரவு நோக்கிக் காத்திருந்தார்கள். ரோம் நகரில் அவர் சூரியனில் காணப்படும் கரும்புள்ளிகளைத் தன் ஆதரவாளர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார். பலர் சூரி

யனில் காணப்படும் கரும்புள்ளி களைக் கண்டு வியப்படைந்தார் கள். அதேபோல் சூரியனின் உடலில் குறை காணும் குறை மதியாளன், கொடியவன், குறு கிய மனம் படைத்தவன் என்று வசை மாரி பொழிந்தோரும் உண்டு.

தன்னை எதிர்த்தோரை கலி லியோ கொஞ்சமேனும் சட்டை செய்யவில்லை. தன் எதிரிகள்மீது தானும் தாக்குதல்கள் நடத்தி னார். கலிலியோவுக்கு தன் எதிரி கள்மீது அனுதாபம் காட்டும் பண்பே கிடையாது. தன் எதிரி களை அவர்கள் போக்கில் பேச விட்டு கேட்டுக்கொண்டு இருப் பார். தன்னை எதிர்ப்போர் அனை வருடைய வாதங்களையும் ஒன்று விடாது கேட்பார். பின்பு, எதிரி கள் தலைகுனிந்து வெளியே சென்றுவிடுவார்கள்.

பின் வாழ்வு

சூரியனை வானத்திலுள்ள, பூமி, சந்திரன் போன்ற கிரகங் கள் சுற்றி வருகின்றன என்பது நாமறிந்த உண்மை. ஆனால் அன்று உலகில் பூமி ஒரே இடத் தில் உள்ளதென்றும் மற்றவை கள் அனைத்தும் பூமியைச் சுற்றி வருகின்றன என்பதையும் உணர்ந்திருந்தார்கள். டாலமி என்பவரின் கருத்து அது. கோர் பனீயஸ் என்னும் அறிஞர் சூரி யன் ஒரே இடத்தில் அசையாது உள்ளதென்று கூறினார். தன் வாதத்திற்கு தக்க ஆதாரம் காட்ட முடியாது அவர் மாண்டு போனார். கலிலியோ அவர் கருத் துக்களைப் பின்பற்றினார். சூரி யன் ஒரே நிலையில் உள்ளதென் றும், அதனைச் சுற்றித்தான் பூமி யும் சந்திரனும் சுழல்கின்றன என்பதையும் கூறினார். ஐரோப்பா அனைத்தும் சேர்ந்து கலிலி யோவை எதிர்த்தது. இவரது கூற்று பைபிளுக்கு எதிரானது என்று இவரது எதிரிகள் ஆதா ரம் காட்டினார்கள். 1615ல் போப் பால் V தூதுவன் ஒருவனை அனுப்பி கலிலியோவை எச்சரித் தார். அடுத்த ஆண்டில் கலி லியோ தன் வாதத்தை உல குக்கு எடுத்துச் சொல்லக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டது. கலிலியோ அந்த உத் திரவை மதிக்கவில்லை. 1632-ல் அவர் தன் கருத்துக்கள் அனைத் தையும் 'இரண்டு உலகின் பிரச் சினை' The dialogue of the Two principal Systems of the world என்னும் நூலில் எழுதி வெளியிட்டார். இந்நூல் வெளியாகி கொஞ்ச நாட்கள் சென்ற பிறகு கலிலியோ கைது செய்யப்பட்டார். ரோம் நகரில் இவர் சிறையிலிருக்கும்போது, ஆங்கில நாட்டு மேதை கவிஞர் மில்டன் ரோம் நகர் வந்தார். சிறையிலிருந்த கலிலியோவைக் கண்டு பேசினார்.

ரோம் நகரில் 1633 ஜூன் திங் கள் 22-ம் நாள் கூடிய மத குரு மார்கள் சபை (Inquisititon) கலிலியோவுக்கு ஆயுள் தண் டனை விதித்தது. பைபிளுக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்

யும் கலிலியோ ஆயுள் தண்டனையை அனுபவிக்கவேண்டும் அல்லது சியன்னாவில் உள்ள இவர் வீட்டிற்குச் சென்று தன் ஆராய்ச்சிகளைப்பற்றி ஏதும் கூறாது தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

குருடர்

கலிலியோ இரண்டாவது தண்டனையை ஏற்றுக்கொண்டார். அப்போது அவருக்கு 68 வயது. அறுபத்தி எட்டு வயதில் ஆயுள் தண்டனை கொடுத்த அவர்கள போக்கினை அன்று பலர் பாராட்டினர்களாம். தாராளமாக நடந்து கொண்டார்கள் என்று போற்றினார்களாம்.

தணடனை அடைந்தபின் கலிலியோ தான் போகவேண்டுமென்று உத்திரவிடப்பட்ட ஊர் சென்றார். அங்கே தங்கி ஆராய்ச்சிகள் செய்தார். 1637-ல் இவர் 'புதிய விஞ்ஞானம்' (Diolouge the new science) என்னும் நூல் ஒன்றை எழுதினார். அதற்குப் பின் சில மாதங்களில், கலிலியோவுக்கு கண்கள் இரண்டும் டும் ஒளி இழந்துவிட்டன. உலகில் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத பல உண்மைகளைக் கண்டுபிடித்த அவர் இன்று ஒரு குருடர். வேதனை, வறுமை, இவைகளுடன் கண்பார்வையும் போயிற்று. துயரம் அவர் வாழ்வைப் பிடித்தது. "நான் இப்போது முழுக் குருடன் ஆகிவிட்டேன். வானம், பூமி, உலகம், இவைகளுக்கு என் ஆராய்ச்சிகள் மூலம் புதிய உருவளித்தேன். அவைகள் வாழுமிடத்தை அகன்றதாக்கினேன். எத்தனையோ காலமாக அவைகளுக்கிருந்த இடத்தைப் பெரிதாக்கினேன். இன்று என் வாழ்விடம் மிகவும் குறுகிப் போயிற்று. ஏன் என் வாழ்வும் அப்படித்தான்." கலிலியோ தன் நண்பர் ஒருவருக்கு கடைசியாக எழுதிய கடிதம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் வாசகங்களே அவரது துயரத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லப் போதுமானவை.

நோயினால் பிடிக்கப்பட்டு கலிலியோ 1642 ஜனவரித் திங்கள் எட்டாம் நாள் மரணமடைந்தார். கலிலியோவின் ஆராய்ச்சிகள், உலகில் தலைகீழ் மாற்றங்களை உண்டுபண்ணின. ஆனால் அவரது திறமையைப் பாதுகாக்க அந்தக் காலத்தில் மனித இனத்துக்கு மாண்பில்லாதுபோயிற்று. இன்று கலிலியோவின் பெயர் தெரியாத பள்ளிமாணவன் கிடையாது. வானத்தில் பறக்கும் விமானி, அலைகடலைத் தாண்டிச் செல்லும் கப்பலோட்டி, ஆராய்ச்சிக் கூடத்தில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கும் விஞ்ஞானி அனைவராலும் கலிலியோவின் சேவையை மறக்க முடியாது.

(தீப்பொறி)

முக்கிய அறிவிப்பு

"ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்.

சென்ற ஆண்டு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயி டெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புதுமுறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை பாடப் புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாடப் புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1954–55 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1954–55-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு மே 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1954–55 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனுமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1954 ஜுன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பிவிடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Bill கள் அனுப்பத்தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை:

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணுவாகயிருந்தது தற்போது ஒரணுவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 அல்லது 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக்கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4—க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள (Railway Station) இரயில்வே நிலையத்தின் பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படிக் குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை தபால் மூலம்தான் அனுப்பப்பட வேண்டுமென விரும்புபவர்கள் தங்கள் ஆர்டர்களிலேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணா ($6\frac{1}{4}\%$) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்களை அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாகப் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவும்.

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலுவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப் பாடபுத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 22 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 22 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 5 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 4 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை மாதிரிப் பிரதிகளாக அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் அனுப்ப பணம் அனுப்பப்பட்டால் தபாற்செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அறிஞர் வாயுரை

நாடு நலம்பெற வேண்டுமா ஆம் எனில், சாதிச்சண்டை சமயச் சண்டை—பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக் கடலில் எறிதல் வேண்டும்.

— திரு. வி. க.

நமது புதிய வெளியீடு

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(1-முதல்—7-வது வகுப்பு வரை)

இவ்வாண்டு **வீரபாண்டியன் தமிழ் வாசகம்** என்னும் மகுடம் புனைந்த தமிழ் வாசகங்கள், ஒன்று முதல் ஏழாவது வகுப்பு வரையில் வெளியிடப்பட்டு அரசியலார் அங்கீகாரமும் பெற்றிருக்கின்றன. இவை சென்னை **லேடி, M.C. T.** பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் **ஸ்ரீமதி இராஜாம்பாள் கோவிந்தராஜன் M. A, L. T.,** அவர்களால் எழுதப்பட்டு, வித்துவான் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை திரு. த. சே. உமாபதி M. A., L. T.,** அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இப் புத்தகங்கள் டெம்மி $\frac{1}{8}$ (**Demmy** $\frac{1}{8}$) பெரிய அளவில் நல்ல காகிதத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்புப் புத்தகங்களிலும் ஏராளமான படங்களும் தற்காலத்திற்கேற்றவாறு புதிய முறையிலும், நடையிலும், பல பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை நமது **சங்க வாசகங்களை** இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வைத்து நடத்தி வரும் ஆசிரியர்கள், அதற்குப் பதிலாக **வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை** வைத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்புதிய வாசகங்களில் காணப்படும் சில பாடங்களை மாதிரிக்காக ஆரம்பக் கல்வியில் பிரசுரித்துள்ளோம். இதைக் கவனித்தால் புதிய வாசகங்கள் எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்பது ஆசிரியர்களுக்கு நன்கு விளங்கும்.

ஒன்று முதல் ஐந்து வரையில் வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் பன்னிரண்டணாவும், ஏழெட்டு வகுப்புகளுக்கு மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் பத்தணாவும் தபால் பில்லைகள் அனுப்பி மாதிரிப் பிரதிகளை தபால் மூலம் பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்

தபால் பெட்டி நெ. 1818
சென்னை.

13. மிட்டாய்ப் பாட்டு

மிட்டாய் வாங்கலையோ ?—பாப்பா !
    மிட்டாய் வாங்கலையோ ?

சின்னஞ்சிறு குழந்தைக் கேற்ற
    சிவப்புப்பச்சை மஞ்சள் மிட்டாய்
வன்னமான இனிப்பு மிட்டாய்
    வாயிலிட்டால் கரையும் மிட்டாய்

சிறுமியருக் கேற்ற மிட்டாய்
    சிறுவர்களும் விரும்பும் மிட்டாய்
பெருமைமிக்க பொம்மை மிட்டாய்
    பெரியவரும் வாங்கும் மிட்டாய்

பால்போன்ற வெள்ளை மிட்டாய்
    பாவையருக் குகந்த மிட்டாய்
காலணாவுக் கிரண்டு மிட்டாய்
    கண்ணுக்கினிய பச்சை மிட்டாய்

12. உரையாடல்-3

– கிராமக் காட்சி

1. இது எதன் படம்?
2. ஊருக்கு வேறு பெயர் என்ன?
3. படத்தில் காண்பது சிறிய ஊரா, பெரிய ஊரா?
4. ஊரில் சுமார் எத்தனை வீடுகள் உள்ளன?
5. கிராமத்தில் கோயில் இருக்கிறதா?
6. அது எதன் கீழ் இருக்கிறது?
7. கோவிலின் எதிரில் இருப்பதுஎன்ன?
8. கிராமத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறதா?
9. பள்ளியின் முன் எத்தனை பிள்ளைகள் இருக்கின்றனர்?
10. கிராமத்தில் சிறு குடிசைகள் இருக்கின்றனவா?
11. எத்தனை சிறு குடிசைகள் உள்ளன?
12. ஊருக்குக் கிழக்கே இருப்பவை என்ன?

குறிப்பு:—படங்களைப் பார்த்து வினாக்களுக்கு விடைகள் தரும்படி செய்யவேண்டும்.

34. காலை நேரம்

இராமு, இன்னும் தூக்கமா? பொழுது விடிந்துவிட்டது. சேவல் கூவுகின்றது; காகங்கள் கரைகின்றன. சூரியனும் உதித்துவிட்டது. எல்லாரும் எழுந்து வேலைகளைச் செய்கின்றனர். நீயும் அதிகாலையில் எழுந்திருக்கப் பழகு; எழுந்திரு சீக்கிரம்; இறைவனைக் கும்பிடு; பல்லைத் துலக்கு; பாடங்களைப் படி; குளித்துவிட்டுச் சாப்பிடு; உடைகளை ஒழுங்காக உடுத்துக்கொள்; சரியான நேரத்தில் பள்ளிக்குப் போ. பாடங்களை நன்றாகப் படி; ஆசிரியர்களுக்கு அடங்கிநட; கெட்ட பிள்ளைகளோடு சேராதே.

எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

சென்னை

1. M. துரைசாமி முதலியார் & ஸன்ஸ்
1, மலையபெருமாள் தெரு
சென்னை—1

2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
சைனாபஜார், சென்னை—1

3. C. K. நாயுடு & சன்ஸ்
1, பத்ரையன் தெரு
சென்னை—1

4. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனாபஜார், மதராஸ்

5. பாலகுமார்
புக் செல்லர்
சைனாபஜார், மதராஸ்

6. ராஜன் வித்தியா
எம்போரியம்
புக் செல்லர்
16 கரியப்ப முதலி தெருவு
வேப்பேரி, சென்னை—7

செங்கற்பட்டு

1. V. கோவிந்தராஜ்
புக் செல்லர்
செங்கற்பட்டு

2. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு

3. P. T. மாசிலாமணி
முதலியார்
புக் செல்லர்
காஞ்சிபுரம், செங்கற்பட்டு

வட ஆற்காடு

1. A. சுப்ரமணியம்
புக் செல்லர்
ஆற்காடு

2. K. M. சுவாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு

3. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

4. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்

5. T. நடராஜன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

6. தி. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
சந்தபேட்டை, குடியாத்தம்

7. எவர் கிரீன் ஷாப்
புக் செல்லர்
குடியாத்தம்

8. A. பாக்கியம் முதலியார்
& சன்ஸ்
புக் ஷாப்
வேலூர்

9 K. V. பிரஸ்
புக் டிப்போ
வேலூர்

10. K. M. பாட்சா & கோ
புக் செல்லர்
வந்தவாசி

11. C. தனபால் செட்டியார்
மளிகை வியாபாரம்

சாலவேடு, வந்தவாசி தாலுக்கா
வடஆற்காடு ஜில்லா

12. V. S. நடேச உடையார்
புத்தக வியாபாரம்
ஜோலார்பேட்டை

13. சிதம்பர முதலியார்
புக் செல்லர்
செய்யார்

14. A. M. முனிரத்தின
முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

15. A. G. சிகப்துல்லா ஷல்வி
புத்தக வியாபாரம்
ஆம்பூர்

16. அண்ணாமலை
புக் செல்லர்
திருவண்ணாமலை

17. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணாமலை

18. T. V. C. கண்ணன்
புக் டிப்போ
மண்டபம்
திருவண்ணாமலை

19. T. V. C. முனிரத்தின
செட்டி
புக் ஷாப்
திருவண்ணாமலை

20. கிருஷ்ணா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
வாணியம்பாடி

21. பைடா. சி. டி. வெங்கட்ராம
செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
போளூர்.

22. ஜெயின் ஜெனரல்
ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
செங்கம்

23. V. V. சொக்கைய செட்டி
& சன்ஸ்
சோளிங்கபுரம்

தென் ஆற்காடு

1. V. B. கணேசன்
புக் ஷாப்
விழுப்புரம்

2. கமலா ஸ்டோர்ஸ்
பஜார் தெரு
விழுப்புரம்

3. P முனுசாமி நாயுடு
& சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

4. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

5. V. K. M. அருணாசல
செட்டி
புக் ஷாப்
திருப்பாபுலியூர்

6. C. G. இராமானுஜம்
செட்டியார்
புக் செல்லர்
சிதம்பரம்

7. C. பார்த்தசாரதி ஐயர்
புக் செல்லர்
சிதம்பரம்

8. S. R. வெங்கட்டராம
செட்டி
ஷாப் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

9. K. V. இராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெள்ளையன்குப்பம்
நெய்வேலி

10. C. N. R. செந்திவிநாயகம்
ஷாப் & ஜெனரல்
வளவனூர்

11. S. V, சாரங்கபாணி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

12. P. S. ராஜன் & கோ
புக் செல்லர்
பண்ருட்டி

13. ஸ்ரீ ராமலிங்கா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிப்பாடி

14. கணபதி புக் செல்லர்
நெல்லிகுப்பம்

15. T. ராஜகோபால்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி தாலுக்கா

16. M. P. சந்தான செட்டி
புக் செல்லர்
உளுந்தூர்பேட்டை

17. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம் p. o.

திருச்சி

1. தெ. பெரியசாமி பிள்ளை
ஷாப் & மளிகை
பெரம்பலூர், திருச்சி

2. முருகன் & கோ
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

3. S. B. பாலநாகமய்ய செட்டி
புக் ஷாப்
கரூர், திருச்சி

4. பழனியப்பா பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

5. சின்னப்பா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தயங்கார்பேட்டை, திருச்சி

தஞ்சாவூர்

1. R, சீனுவாசலு நாயுடு
புக் செல்லர்
மாயவரம்

2. V. ஜகதீசன்
புக் செல்லர்
பெரிய தெரு
பட்டுக்கோட்டை

3. ராமலிங்க சுவாமி புக் டிப்போ
விஜயபுரம் p. o.
திருவாரூர்

4. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
திருவாரூர்

5. K. S. சிவராம கிருஷ்ணன்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரிய பஜார் தெரு
பட்டுக்கோட்டை

6. M. கணபதி
புக் செல்லர்
காசி கடைதெரு
திருத்துறைப்பூண்டி p. o.

7. ஸ்ரீ வெங்கடேஸ்வரா
பிரிண்டிங் ஒர்க்ஸ்
டவுன் உயர்தரப் பாடசாலை ரோடு
கும்பகோணம்

8. P. V. நாதன் & கம்பெனி
புக் செல்லர்
கும்பகோணம்

9. சந்திரா & கோ
புக் செல்லர்

அய்யன் கடைத்தெரு
தஞ்சாவூர் p. o.

10. பாரதமாதா புக் டிப்போ
93-எல்லையம்மன் கோயில் தெரு
தஞ்சாவூர்

11. கு. கோவிந்தசாமி பிள்ளை
அண்டு பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
(via) குத்தாலம்

மதுரை

1. M. தக்ஷிணாமூர்த்திகோன்
புக் செல்லர்
புது மண்டபம், மதுரை

2. E. M. கோபாலகிருஷ்ண
கோன்
புக் செல்லர்
மதுரை

3. M. நடனசுந்தரம் பிரதர்ஸ்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

4. S. S. ராஜன் புக் டிப்போ
புதுமண்டபம், மதுரை

5. P. L. அருணசல முதலியார்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

6. V. M. S. & சன்ஸ்
புக் ஷாப்
புதுமண்டபம், மதுரை

7. லியோ புக்டிப்போ
புக்செல்லர்
56 தறவாய் தெரு
மதுரை

8. S. V. S. நாடார்
புக்செல்லர்
திருமங்கலம்
மதுரை

9. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர் p. o.
திருமங்கலம் தாலுக்கா
மதுரை

10. S. முத்துசாமி
புக்செல்லர்
போடி நாயக்கனூர்
மதுரை

11. K. V. நாராயண ஐயர் &
சன்ஸ்
புக்ஷாப்
திண்டுக்கல்

12. P. K. A. குழந்தைவேலு
நாடார்
புக்செல்லர்
திண்டுக்கல்

13. S. P. சூர்ய நாராயண
பிள்ளை
புக்ஷாப்
மெயின்ரோடு
திண்டுக்கல்

14. K. P. R. சாரங்கபாணி
செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
பழனி

15. கணேஷன் ஸ்டோர்
கண்டிரோடு
பழனி

16. K. கிருஷ்ணமாச்சாரி
இரும்புவியாபாரம்
கோடைக்கானல் ரோடு
நிலக்கோட்டை p. o.

17. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப்மர்ச்சண்ட்
பெரியகுளம்

18. V. முத்துதேவர், வியா
பாரி

சில்வார்பட்டி
பெரியகுளம்

19. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி
மதுரை

20. காகாஷாப்
உசிலம்பட்டி
மதுரை

21. அப்துல் வகாப்
ஷாப் வியாபாரம்
உசிலம்பட்டி
மதுரை

இராமனுதபுரம்

1. அருணஸ்டோர்ஸ்
இராமனுதபுரம்

2. S. T. சுவாமி & சன்ஸ்
புக்ஷாப்
பெரியபஜார்
இராமனுதபுரம்

3. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
ஷாப்மர்ச்சண்ட்
இராமனுதபுரம்

4. K. S. பிள்ளை & சன்ஸ்
புக்செல்லர்
ராஜபாளையம்

5. அமிர்தம் புக்டிப்போ
கல்லூரணி p. o.
(via) அருப்புக்கோட்டை

6. அப்பன் & கோ
புக்செல்லர்
விருதுநகர்

7. மாரியப்பன் ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
விருதுநகர்

8. S. P. M. தங்கவேல்
கள்ளிகுடி
விருதுநகர்

9. A. R. முத்துபாலுசெட்டி
புக்செல்லர்
சாலையூர்
இளையான்குடி

10. S. ராஜேந்திரன் செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
இளையான்குடி

11. P. V. ரெத்தினசபாபதி
செட்டி
புக்ஷாப்
இளையான்குடி

12. M. S. அண்ணமலை
நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
சாத்தூர்

13 ஜவஹர் புக் டிப்போ
மெயின் ரோடு
சாத்தூர்

14. M. M. சின்னசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
ஸ்ரீ வில்லிபுத்தூர்

15. கலா நிலையம்
காரைக்குடி

16. S. V. S. வெள்ளைச்சாமி
செட்டியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
பரமகுடி

17. R. கருப்பையா
புக் ஸ்டால்
சாயல்குடி

18. M. M. S. ராமசாமி
செட்டி
புக்செல்லர்
பரமகுடி

19. வே. வி. வேல்முருக
நாடார்
ஷாப் வியாபாரம்
கன்னிசேரி
துலுக்கப்பட்டி

கோயமுத்தூர்

1. பாலகங்காதர செட்டி
புக்ஷாப்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

2. P. மாணிக்கம்
புக்செல்லர்
ஈரோடு.

3. சிவலிங்க விலாஸ்
புக்டிப்போ
ஈரோடு

4. C. R. நடராஜன்
புக்செல்லர்
கோயமுத்தூர்

5. K. O. பெட்டை கவுடர்
புக்செல்லர்
கோயமுத்தூர்

6. A நஞ்சப்பா
புக்செல்லர்
கோயமுத்தூர்

7. கவிஞர் பதிப்பகம்
கோயமுத்தூர்

8. A. K. மாணிக்கம்
செட்டியார் & சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

9. K. U. N. கவுண்டர் & Co
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. M. S. & Mv. பிரதர்ஸ்
புக்ஷாப்
பொள்ளாச்சி

11. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக்செல்லர்
பொள்ளாச்சி

12. S. S. பாலசாமி செட்டி
புக்செல்லர்
சத்தியமங்கலம்

13. A. L. M. பொன்னுசாமி
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்
(via) பவானி

14. A. A. குட்டியப்ப
முதலியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராஜவீதி
அந்தியூர்

15. M. K. சுப்ரமணியன்
புக்செல்லர்
வால்பாறை பஜார்
கோயமுத்தூர்

16. P. R. S. மணியம்
ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
பல்லடம் ரோடு
திருப்பூர்

17. தண்டபாணி ஸ்டோர்ஸ்
தாராபுரம்

18. K. விஜயராமன்
வாசவி ஸ்டோர்ஸ்
நெகமம் P. O.
(Via) பொள்ளாச்சி

19. லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ஜெனரல்மர்ச்சண்ட்
பவானி

20. சண்முகானந்தா புத்தக
நிலையம்
கோபிசெட்டி பாளையம்

21. லட்சுமி ஸ்டேஷனரி
மார்ட்
கோபிசெட்டி பாளையம்
(கோயமுத்தூர்)

22. S. நாகமாணிக்கம் செட்டி
புக்ஷாப்
தல்லிரோடு
உடுமலைப்பேட்டை

23. ராஜா புக்ஷாப்
தல்லி ரோடு
உடுமலைப்பேட்டை

சேலம்

1. A. K. சந்திரய்ய
செட்டியார்
புக்செல்லர்
கோட்டை, சேலம்

2. M. V. A. நாராயணன்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராயகோட்டை

3. N. T. கோவிந்த செட்டி
புக்செல்லர்
ராயகோட்டை

4. T. V. பரமசிவம் பிள்ளை
புக்செல்லர்
சேலம்

5. நிர்மலா பப்ளிஷிங்
ஹௌஸ்
47, முதல் அக்ராகாரம்
சேலம் டவுன்

6. L. M. நாகமைய்ய செட்டி
புக்செல்லர்
ஆத்தூர், சேலம்

7. K. வெங்கடப்ப செட்டி
& சன்ஸ்
புக்செல்லர்
டென்கனி கோட்டை

8. ஸ்ரீ சூர்யநாராயண காபி
ஓர்க்ஸ்
புக்செல்லர்
ஹோசூர், சேலம்

9. S. S. R. ஸ்ரீனிவாச
செட்டி
மளிகை
சூளிகிரி P. O.
ஹோசூர் தாலுக்கா

நீலகிரி

1. S. நாகப்ப செட்டியார்
சகுந்தலா புக்டிப்போ
மார்க்கட்
கூனூர்

2. M. குமாரசுவாமி & சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. I. B. J. நந்திக் கவுண்டர்
ஜெனரல் மர்ச்சண்ட்
மார்க்கட்
உதகமண்டலம்

4. M. A இருதயசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

5. T. M. ஆரோக்கியசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

6. C. தாத்தன்
முள்ளிமலை
குண்டா P. O.
நீலகிரி

திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்

கோயில்பட்டி

2. ஸ்ரீ சண்பகவல்லி புக் ஷாப், தெற்கு பஜார், கோயில்பட்டி

3. சண்முகம் பிள்ளை புக் ஷாப் கோயில்பட்டி

4. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்ஸ் புக் செல்லர் சங்கரன் கோயில்

5. ஸ்ரீ முருகன் ஜெனரல் ஸ்டோர்ஸ் தென்காசி

6. V. R. பாவநாசம் பிள்ளை ஸ்கூல் புக் சப்ளையர் வீரவநல்லூர்

7. டயோசிசன் புக் டிப்போ பாளையம்கோட்டை

8. திரு. வள்ளலார் புத்தகசாலை தா. பழூர் p. o. (via) ஜெயம் கொண்டான்

9. நேஷனல் ஸ்டோர்ஸ் மெயின்ரோடு ஏர்வாடி

10. P. M. ஆதி நாராயணன் வியாபாரி குரங்கணி தென்திருப்பேரை p. o. திருநெல்வேலி

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை–1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

ஆறாம் வகுப்பு	0	12	0	26	13–5–'53
ஏழாம் வகுப்பு	0	14	0	R.C. No.3/54	17–3'–54

மாதிரிப் பிரதிகளுக்கு 0–10–0 அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B.A; L.T., & V. S. Leela B.A; B.T.)

ஆறாம் வகுப்பு	1	2	0	2	13–1–'54
ஏழாம் வகுப்பு	1	4	0	2	13–1–'54
எட்டாம் வகுப்பு	1	4	0	2	13–1–'54

மாதிரிப் பிரதிகளுக்கு 1–4–0 அனுப்பவும்.

சமூக நூல்

(T. S. Umapathy, M.A., L.T.)

ஆறாம் வகுப்பு	1	1	0	R.C.No.3/54	17–3–'54
ஏழாம் வகுப்பு	1	8	0	,,	,,
எட்டாம் வகுப்பு	1	8	0	,,	,,

மாதிரிப் பிரதிகளுக்கு 1–8–0 அனுப்பவும்.

அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறாம் வகுப்பு	0	12	0	21	13–5–'53
ஏழாம் வகுப்பு	0	12	0	21	13–5–'53
எட்டாம் வகுப்பு	0	12	0	21	13–5–'53

மாதிரிப் பிரதிகளுக்கு 0–12–0 அனுப்பவும்.

Edited Printed and Published. by P. Veeraraghavan at the
'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.